ஆலிப்புலவர் இயற்றிய

# மிகுருசு மாலை

PHONE: 258 P.P & 301 P.P
அருஸூல் ஜன்னஹ்
மத்ரஸதுந் ரிஸ்வான்,
59, தீவுத் தெரு, காயல்பட்டணம்-628 204

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்
அண்ட்
புக்செல்லர்ஸ்
25, அங்கப்ப நாயக்கன் தெரு,
சென்னை-600 001.

முதற் பதிப்பு: டிசம்பர் 1983

விலை ரூ. 6-00

அச்சிட்டோர் :

மில்லத் பிரிண்டர்ஸ்
16, அப்புமேஸ்திரி தெரு,
சென்னை-600001.

# பதிப்புரை

மண்ணுலகில் வாழ்ந்து கொண்டே விண்ணுலகிற்குச் செய்த பயணம் மிஃராஜ். அது அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்கள் செய்தது. அல்லாஹ், அவர்களுக்கு விண்ணுலகைக் காட்டச் செய்த ஏற்பாடு என்றாலும் அவர்கள்மீது அவர்களின் தோழர்களுக்கு இருந்த நம்பிக்கையை உரைத்துப் பார்க்கச் செய்த ஏற்பாடும் ஆகும் அது. கனவில் செய்யலாம் அதுபோன்ற பயணத்தை. ஆனால் அது நனவில் செய்யப்பட்டது.

அரபவனியில் இருக்கும்வரை உதிரத்தில் இருந்த கவித்திறன் அரபிக் கவிதையாக உருவெடுத்தது. அந்த உதிரத்தில் இருந்த கவித்திறன் தமிழகம் வந்து தங்கி விட்டபோது தமிழ்க் கவியாக வடிவெடுத்தது. கஃபு இப்னு சுஹைரின் உதிரம் தம் உடலில் ஓடப் பெற்ற பாக்கியம் பெற்றவர் ஆலி. அவர், அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்கள் செய்த விண்ணுலகப் பயணத்தைத் தமிழ்க் கவியில் வடிக்க விரும்பினர். அதை எல்லோரும் படிக்க விரும்பினர். அதன் விரிவுதான் மிகுருசு மாலை.

நூல் எழுதப் பெரும்பாலான செய்தி கொடுத்தவர் காயல் காழி அலாவுத்தீன். அவர் கொடுத்த செய்திகள் மட்டுமா அந்நூலில் இருக்கின்றன? இல்லை. அவர் கொடுக்காத செய்திகளும் அதில் இருக்கின்றன. அல்லாஹ், அவற்றை ஆலியின் உள்ளத்தில் உதிக்கச் செய்தான்.

நூல் எழுதப்பட்டது சங்கை பொருந்திய மங்கை நகரில்; அரங்கேற்றப்பட்டது பாட்டாறு ஓடும் கோட்டாற்றில்.

அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களைக் கனவில் காணவே பெரும் பேறு பெற வேண்டும். அவர்களை நனவில் காண எத்தகு பேறு பெற வேண்டும்? அத்தகு பேறு பெற்றவர் ஆலி. மண்ணுலகில் வாழ்ந்து கொண்டே விண்பயணம் செய்த வரலாறு அரங்கேற்றம் நடந்தபோது விண்ணுலகில் இருந்து கொண்டே மண் பயணம் செய்து ஆலி காண காட்சி தந்தனர் அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்கள்.

ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட இவ் விண்பயணம் பற்றி நானூறு ஆண்டுகளுக்கு முன் நெய்யப்பட்ட நூல் இது.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்கு வயது அதிகம். ஆயினும் இருக்கும் நூல்களில் இது இரண்டாவது. முதல் நூல் ஆயிரம் மசலா.

ஆலியின் உதிரம் அவர் வழி வந்தவர்களின் உடலில் ஓடியது. அவர் உதிரம் ஓடிய அவர்கள் பலரின் நாவில் கவி ஊறியது.

ஆலியின் உதிரம் ஓடப் பெறும் பாக்கியம் பெற்றவர்கள் நாங்கள். எனவே அவர் ஆக்கிய 'மிகுருசுமாலை'யை அச்சேற்ற வேண்டும் என்று விரும்பினோம். ஏற்கனவே அது அச்சேறியிருந்தது. ஆனால் பலரின் கையேறி இருக்கவில்லை. எங்கள்



நெஞ்சில் இருந்த விருப்பம் சில சமயம் வாய் வரை வந்ததுண்டு. வாய் வரை வந்ததை அறிந்திருந்தவர் ஒருவர். அவர் தாம் எங்களின் அருமை நண்பர் சையது முகம்மது (ஹஸன்) ஆவர்.

வரலாற்று நவீனங்கள் வரைவதில் வல்லவரான இவர் இப்பொழுது இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களுக்கு உயிர் கொடுக்கும் உயர் பணியைச் செய்து கொண்டிருக்கிறார். பழைய இஸ்லாமிய இலக்கியங்களைப் பதிப்பிக்கும் வேலையே இப்பொழுது இவர் செய்வது. 'மிகுருசுமாலை'யையும் அச்சிடும்படியும் அதனைத் தாமே தம் அச்சகத்தில் அச்சிட்டுத் தருவதாயும் இவர் கூறினார். சீர் பிரித்து, முன் பதிப்புக்களில் இருந்த அச்சுப் பிழைகளைக் களைந்து அழகிய முறையில் இவர்தாம் அச்சிட்டுத் தந்தார். இவருக்கு எங்களின் நன்றியை நாவால் தெரிவித்துக் கொள்கிறோம். இவருக்காக இவ்விறைஞ்சுதலை உள்ளத்தால் செய்கிறோம்: ஆயுளை நீடித்தும், ஆக்கையில் நலம் சேர்த்தும் அருள் புரிவாய் அல்லாஹ் இவ்விதப் பணிகள் பலவற்றை இவர் இன்னும் அதிகம் செய்வதற்கு!

எம். ஆர். எம். அப்துற்றஹீம்
எம். ஆர். எம். முகம்மது முஸ்தபா

# ஆலிப்புலவரின் வரலாற்றுச் சுருக்கம்

எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா ரசூல் (ஸல்) அவர்கள் மீது 'பானத் சுஆத்' என்னும் புகழ்ப்பா பாடி அதற்குப் பரிசிலாக அவர்களின் புனித மேனி மீதிருந்த போர்வையால் போர்த்தப் பெறும் பேறு பெற்ற அரபிக் கவிஞர் கஃபு இப்னு ஸுஹைரின் வழி வந்தவர் 'மிகுருசு மாலை' என்னும் இவ்வருங் காப்பியத்தைப் புனைந்த ஆலிப்புலவர் அவர்கள்.

இன்று மேலச் செவ்வல் என்று வழங்கப் பெறும் மங்கை நகரில் பிறந்தவர் ஆலிப் புலவர். மடாதிபதி ஒருவரின் இல்லத்தில் தங்கி தமிழ்க் கல்வி கற்ற இவர் மலையாள மொழியும் அறிந்திருந்தார்.

முஸ்லிம்களுக்கென தமிழில் காவியங்கள் இல்லையென்று உணர்ந்த ஆலிப் புலவர், தாம் ஒன்று இயற்ற விரும்பி, அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வான் பயணத்தைக் காவியமாக்க முனைந்தார். காயல் பட்டினம் சென்று காஜி ஸையிது முஹம்மது அலாவுத்தீன் அவர்களிடம் அதற்கான உரைபெற்று காப்பியம் படைக்கத் தொடங்கினார். ஹிஜ்ரி 998-ஆம் ஆண்டில் இயற்றப் பெற்ற அந்த நூலுக்கு 'மிகுருசு மாலை' என்று பெயரிட்டார்.

அதனை அரங்கேற்றுவதற்கு முஸ்லிம்கள் யாரும் உதவ முன்வரவில்லை. கோட்டாற்றில் வாழ்ந்த தம் மாணவர் சிவலிங்கம் செட்டியாரிடம் செய்தியைக் கூறியபோது, அவர் மனம் வருந்தி தம் நண்பர் பாவாடை செட்டியார் என்பாரிடம் அது பற்றிக் கூறினார். கண் பார்வையற்றவரான பாவாடைச் செட்டியார் அப்பணிக்கான செலவை ஏற்று நடத்த முன் வந்தார்.

அவ்வாண்டு ரஜபு முதற் பிறையன்று காவியம் அரங்கேற்றமாயிற்று. ஆலிப்புலவர் அதன் 110, 111-ஆம் பாடல்களைப் பாடிய போது எதிரேயிருந்த வேப்ப மரத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருத்



தோற்றம் வழங்கி, "பைத்துல் முகத்தஸ் பள்ளியின் தூணில் துளையிட்டு புராக்கைக் கட்டியது இறைவனுக்கும், ஜிப்ரீலுக்கும், எனக்கும் மட்டும் தானே தெரியும். நீர் அதனை எவ்வாறு தெரிந்து பாடினீர்?' என்று வினவ, "நானும் அறியேன் அவ்வாறு என் வாயில் வந்து விட்டது" என்று புலவர் கூற அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மகிழ்ந்து ஆலிப் புலவரைத் தழுவினர். போர்வை ஒன்றையும் போர்த்தினர்.

அப்போது அங்கு தோற்றிய ஒளியால் பாவாடைச் செட்டியாரும் கண்ணொளி பெற்றாராம்.

பெருமானாரைக் கண்ட கண்களால் வேறெதையும் காணேன் என உறுதி பூண்ட புலவர் அதன் பிறகு தம் கண்களை மறைத்துக் கட்டிக் கொண்டு வாழ்ந்தனராம். ஒருநாள் பாளையங்கோட்டை சென்றபோது மஃக்ரிபுத் தொழுகையில் 'ஸஜ்தா' செய்து கொண்டிருக்கும்போது உயிர் நீத்தார். அது நடந்த நாள் ஹிஜ்ரீ 1000-ஆம் ஆண்டு ரமலான் பிறை 27 வெள்ளிக் கிழமை ஆகும். அவரின் அடக்கவிடம் பாளையங் கோட்டையில் 'ஆலியப்பா தர்கா' என்று அழைக்கப் படுகிறது.

அவருக்குப் பின் தோன்றிய உமறுப் புலவர் சீறாப் புராணத்தில் மிஃராஜ் நிகழ்ச்சி பற்றிப் பாடாததற்குக் காரணம், ஏற்கனவே, ஆலிப் புலவர் அது பற்றிப் பாடிய காப்பியம் மக்களிடையே சிறப்புப் பெற்று வழங்கி வந்ததேயாகும். மேலும், அதுபற்றி அவர் பாட நினைத்திருந்த போது, உமறுப் புலவரின் கனவில் ஆலியப்பா அவர்கள் தோன்றி அவ்வெண்ணத்தைக் கைவிடும்படி கூறியதுதான் காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

ஆலிப் புலவருக்கு ஓர் ஆண் மகனும் இரு பெண் மக்களும் இருந்தனர். அவர்களின் சந்ததியினர் மேலப் பாளையத்திலும், கோட்டாற்றிலும் இன்னும் வேறு பல ஊர்களிலும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுள் பலர் பெரும் புலவர்களாகவும் அறிஞர்களாகவும் விளங்கியுள்ளனர்; இன்றும் விளங்கி வருகின்றனர்.

# சிறப்புத் தொகை


| எண் | படலங்கள் | பக்கம் | பாட்டு | தொகை |
|---|---|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | 9 | 23 | 23 |
| 2. | நாட்டுச் சிறப்பு | 15 | 19 | 42 |
| 3. | பாயிரச் சிறப்பு | 19 | 15 | 57 |
| 4. | புருக்குச் சிறப்பு | 22 | 25 | 82 |
| 5. | பைத்துல் முகத்திசுச் சிறப்பு | 27 | 93 | 175 |
| 6. | ஏணிச் சிறப்பு | 44 | 136 | 311 |
| 7. | எழுவான் சிறப்பு | 69 | 98 | 409 |
| 8. | நரகத்தியல்பு | 88 | 55 | 464 |
| 9. | சொற்கச் சிறப்பு | 96 | 61 | 525 |
| 10. | அறுசுச் சிறப்பு | 106 | 124 | 649 |
| 11. | நபியுல்லா பனீயிசுருயீல்களைக் கண்ட சிறப்பு | 132 | 29 | 678 |
| 12. | நபியுல்லா மக்கத்துக்கு வந்த சிறப்பு | 137 | 65 | 743 |




# மிகுருசு மாலை

## காப்பு

விருத்தம்

பூவினிற் கெந்தம் போல
    பொருந்தியோர் பொருளாய் நின்றோ
னேவிய விறசூ லுல்லா
    வெழின்மிகு ருசு மாலை
பாவிதத் தமிழாற் பாடப்
    பறப்பன வூர்வை மற்று
மாவியும் படைத்த துய்ய
    வாதியே துணைச்செய் வாயே

—□—

## 1. கடவுள் வணக்கம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

உருவிலியா யுணவிலியா யுள்ளொளிக்கு மேலொளியா
    யொன்றோ டொன்று
தருவிலியா யயர்விலியா யண்டபகி ரண்டமெனு
    மடிக்கி லில்லா
வெருவிலியா யெற்குமொரு மெய்ப்பொருளாய்
    விளங்கியவல் கம்தாய் நின்ற
வொருபொருளைப் பெரும்பொருளென் றெவருமுட்
    கருத்தினில்வைத் துணரு வீரே. (1)

தன்னையன்றித் தனக்குநிகர் தானிலையே யோரிடத்துந்
    தரிக்கி லானே
யன்னையின்றன் வயிற்றறைக்கு ளருவருத்த
    யடைக்கி நின்ற [சுக்கிலத்தை

வென்னையமைத் துருப்படுத்தி விதிப்படியே
விடுக்கின் றோனே [சடத்திலுயிர்
நின்னையன்றி வணங்கவுரி யவரிலையென் றிறஞ்சுமவர்
நெறிநின் றோரே. (2)

வேற்றுச்சந்தம்

பாலில்லாப் பழங்கள் போல பருகிய பான மாணுர்
காலெல்லாங் கல்பிற் றோன்றுங் கருதியே கமலத்
[துன்னி
யேலெல்லாம் லாயி லாக இல்லல்லாகு முகம்ம துற்ற
சூலுல்லா கியென்று ணுடித் தொழுமவர் சுவர்க்கத்
[தோரே. (3)

சந்தவிருத்தம்

நறைசூழ் கமலவட்ட மலர்மா ளிகைதரித்த
நலமா துளம்புயர்த்திணே
ரிறைசூ லுறுமறைக்கு ளுரியோ ரிரவலர்க்கு
நீதிவீ சியகொடைக்கைய
ருறுசூன் முகில்கவித்த நிழல்மீ திடைநடக்கு
முரவோரிறை விடுத்கதூத
ரிறசூ லிருபதத்தை மனமே நினைகிடைக்கு
மிதமா தொடுசுவர்க்கமே. (4)

சந்தவிருத்தம்

உகமதி னரகெதிர்த்து நரர்தின வருமதர்க்கு
வுறுமொழி சொலி யமர்த்துவோர்
சுகமது மலரளிக்கு மிரவலர் மனமுறச்சொ
ரூணிமொழி தனிலிருப்போ
ரகமட மயிலிருக்கு மிருபுய ரிருவினைக்கு
ளளவிலி யிருகண்முத்திசேர்
முகமத ரிருபதத்தை மனதிடை நினைகிடைக்கு
மடமயி லொடுசுவர்க்கமே (5)

விருத்தம்

ஆதியொரு பொருளுளதென் றுயிரக்கா லவனிநர
ரறைந்திட் டாலுஞ்
சோதிமுகம் மதிறைதன் றூதரென்று லொழிந்துகுதா
சொல்வி டாதென்



றோதுபெரும் வரிசைமன்னை யென்னைவெளிப்
யுதிப்பித் தேனென் [படுத்தவுன்னை
றேதமிலான் புகழ்நபியை யென்னுவி னுற்புகழ்ந்
தேற்று வேனே (6)

சந்தவிருத்தம்

சமருக்குண் மிக்கநபி தமைவெற்பி னுற்றுமடி
தனில்வைத் துறக்குமளவே
கமருக்கு ளுற்றரவ மெதிரிட் டிடப்பினிரு
கதம்வைத் தடைத்ததிடவா
ரெமதுட் கருத்துண்மணி குவடிற்கல் வைப்பர்தின
மியல்பற்ற சொற்றவிர்தலா
லமரர்க்கு மிக்ககுரு நலசற் குணக்குரிசி
லபுபக்க ரைப்புகலுவாம் (7)

சந்தவிருத்தம்

முத்தா லுதித்தநபி பொற்று ளிணைத்தொழுது
முற்றுத பற்றலரைநீண்
மத்தான துக்குளடர் கொற்றே மசிக்குமவர்
மற்றுரின் மிக்கவுரவோர்
புத்தான தைப்பொருமி நிர்ப்பா மெனப்பரவு
பொய்ச்சூதர் வெட்கிவிடவே
கத்தாகிர் விக்கநெறி ஹக்காய் நடத்துமறு
கத்தாபி னைப்புகலுவாம். (8)

கலிவிருத்தம்

பெருவானவர் வசமாயொரு பெரியோன்வர விடுநீ
டிருமாமறை யதைநேரொடு திகழ்கோலவ செய்
[திடுவோரீ
மருவாழ்புய நயினுர்முகம் மதனுர்மரு மகனு
ருருமாலென வெகுமாறரு முதுமானையு முணர்வாம்.
(9)

மருள்பெற்றவ னசடுப்பயிர் வளர்வித்திடு மிபுலீ
சுருள்பெற்றிடு விழிகெட்டிடை யொடியப்பொரு
முரவோ
ரிருள்பெற்றிடு குபிர்கெட்டிட விவுளிற்றுலு துலின்மே
லருள்பெற்றிட வருநற்புலி யலியைப் புகல் வாமே(10)

சந்தவிருத்தம்

வெயிலினு மிக்கொளி ஜிபுரியி ெருட்டிலை
    விரல்கொ டசைத்திடவே
துயில்செயு முத்தமர் நபிமு னிருப்படு
    சுரர்பதி பொற்பதிமே
லுயர்கனி யைக்கொடு தரவத னைத்தினு
    மொழுகுள மிக்கவர்பே
ரயிறரு பொற்படை யலிபெறு புத்திர
    ரசனுச னைப்புகல்வாம். (11)

தாழிசைவிருத்தம்

ஞானம் பொலிமாமறை நூன்மொழி
    யோதுங் கிருபாகர நீதிசெய்
        ஞாலந் தனிலேபற வாமிருகஞ்
சேனங் கழுகோரி பசாசுண
    மீறுங் கருதார்படை மேனறை
        சேருங் கரமாமண லேவிடுவோ
ரீனம் பயிலாத கபீபிற
    சூறன் றிருவாணையெ ளுருயி
        ரேகும் பொழுதேமக ளுவுடனே
கானங் கலிமாவுரை யானதை
    யோதும் படியோதரு வாயொரு
        காலுந் துயிலாதவ னேகனியே. (12)

சந்தவிருத்தம்

குடையார்முகி னிழலங்குற வருவோரொளி
    குறைவாருதி மீனெடும்புகல்வோ [வாகநின்றவர்
ரடைவாவிரி வாசமுண்டக மலர்மாலிகை
    வடமார்பின ராலமுண்டவர்பா [மேவுசெந்திரு
ரிடைதானுடல் சாய்கையின்றிய விறகூறிரு
                                [வாணையென்றன்
    னிருபார்வையெ லாநிறைந்திடவே
புடையேது மிலாதனின்றிரு வொளிகாணவெ
                                [நூறுதந்தருள்
    புகழ்சேர்பொறை யாலுயர்ந்தவனே. (13)



மட்டுவிருத்தம்

வேத மோதியகி ருஅத்தேழுடன் மிக்கதானதபு
                                [சீறுக்கு
நாத மேவியசொ னகுவுசறுபுட னல்லவில்முபதி
                                ஞலுக்குஞ்
சீத மேவியசொ லெழுத்திலக்கணஞ் செப்பிடும்பதி
                                னெண்பாடை
போத வல்லமகு தூமலாவுதீனைப் போற்றநல்லறிவு
                                பொங்குமே. (14)

அறுசீர்க்கழிநெடிலடி விருத்தம்

அபுதுலசீ செனுமமுத பாலாழிக்கு
    ளானசரீ பெனுமலாவு தீன்மேகங்
குவிதல்கொடு வமுதறிவுப் பாலைக்கோதிக்
    குபிரிடித் திசுலாமை மின்னிற்கோலிப்
புவியிலச்ச மெனுமுருப்ப மொருமித்துள்ளம்
    புழுங்கிசு லாம்பயிர் பொடிந்திடாமற்
சவியல்கொடு புவனமின லறிவுமாரி
    தனைவருத்தத் தீன்படர்ந்து தழைக்குந்தானே.
                                (15)

எழுசீர்க்கழிநெடிலடி விருத்தம்

ஆதிவிடு தூதுய ரகும்மது நபிக்குமிக
    வன்புடைய பேரர் நல்லுசையி
னீதிமர புக்குளுள பேரர்சம துக்குள்வளர்
    நித்தியகல் யாண மதுசேர்
வேதியர்பு கழ்ச்சயின லாபிதீ னவர்க்குமிகு
    வெற்றிவளர் பொன்னெறி கள்சேர்
காதிமகு தூம்சரிப லாவுதீனிந் நூலையுயர்
    கட்டுதமி ழாலுரை செய்தார். (16)

அறுசீர்க்கழிநெடிலடி விருத்தம்

களித்தசிறை வண்டுலவக் கமலம்விள்ளுங்
    காகிரில்வாழ் செய்கு முகம்மதின்பா
லளித்தவவு லாதிறகூ லறிஞர்பீ
    ரடல்மகுதூம் காலியலா வுதீனன்பாற்

றெளித்தவறி விவையெவர்க்குந் தெரியாதென்
றிருத்துமிகு ருஜெ னுங்கிதாபில்
விளைத்தகறு பதையறபா லோதியோதி
விரிதமிழ்நா லுரையாக்கி விளக்கிஞரே (17)

கலிவிருத்தம்

தோன்று கிசுறத்துத் தொளாயிரத்தித்
[தொண்ணூத்தெட்
டேன்று வருமாண்டி னிடைஜமாத்து லவ்வலென்றுஞ்
சான்ரோர் புகழ்திங்க ளிடைதா னிருபதில்வே
ரூன்றுமிகு ருசுரை யிளைத்தமிழ் செய்தாரே. (18)

இங்கிலகு கொல்லமெழு நூற்றறுப தையாண்
டங்கன்வரு பங்குனி யதின்றெயிதி மூவா
றுங்கநபி வள்ளலிற சூறன்மிகு ருஜை
மங்கைநக ராலியுயர் வண்டமிழின் வைத்தான் (19)

அறுசீர்க்கழிநெடிலடி விருத்தம்

மருவளர் காகிரி ஞடுறு செய்கு முகம்மத லர்வுதீஞ
ரருள்வளர் தந்நபி தம்மிகு ருஜை யருந்தமிழ்
[செய்திடலாற்
பொருள்வளர் மங்கைந கர்ப்பதி யானபு துப்படை
[வீட்டினில்வாழ்
திருவளர் செய்கபு பக்கர்தன் ஞலி செழுங்கவி
செய்தனனே. (20)

அறுசீர்க்கழிநெடிலடி விருத்தம் [வேறு]

வண்டுமிழ்ந்த வெச்சிலென மானிடவர் மலர்த்தேனை
வரையாக் கொள்வர்
கன்றுமிஞ்சும் பாலதனைக் கறப்பிவித்துத் தள்ளாத
கருணை போலும்
வெண்டளையோ டெழுதளையும் விரிமோனை
துடனே மூன்றுங் [தொடைநாற்ப
கொண்டுகவி சொலும்புலவோ ரெனதுபுன்சொற்
கொள்வர் தாமே. [றள்ளாது
(21)



குங்குமச்செஞ் சேற்றினுக்குக் குழைச்சேரூப்
கூறல் போல்வான் [பெனப்பிறிதி
மங்கையர்க்குப் பிறிதியென்று வளர்த்தவிலைப்
வைப்பர் போலுங் [பெண்ணையொப்பு
கங்கையுற்ற கடலுடைக்குங் கனமழைக்கும்
கவலல் போலுஞ் [புகைப்பனிநேர்
சங்கமுற்ற புலவர்முன்னே தமிழறியாச் சிறியனிந்நூற்
சாற்றும் வாறே. (22)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம் [வேறு]

மண்டன்மென் காயல்வளர் முகம்மதப்பு
மரைக்காயன் மரபி லான
திண்டிறத்தி லிப்பெருநூல் விளங்கவெனப்
பெருந்தலீல் செய்கை யாலு
மண்டர்தரு வெனக்கொடுக்கு மஞ்சுவன்ன
முசுலீங்க ளவர்கண் முன்னே
கொண்டன்முகம் மதுநபிதம் மிகுருஜை
யித்தமிழாற் கூற லுற்றேன் (23)

—□—

# 2. நாட்டுச் சிறப்பு

கலிவிருத்தம்

துதித்தல் லாவைத் தொழுவோர்கண் முன்பிலே
யுதித்த காபத்துல் லாவி னுயரொளி
யெதிர்த்து வீச விலங்குமூ ரில்மிலே
கதித்த மக்க வளமை கவலுவாம். (24)

துய்ய வெண்முகி றுங்கக் கடற்புன
லுய்ய வாரி யுருமிஞே டோங்கியே
வைய கங்கள் வசந்தகா லங்களாய்
வெய்ய வன்கதிர் வெட்கக் கவிந்ததே. (25)

சங்க மால்கள் சரிந்தற பாத்தின்மே
லெங்கு மாரி யமுத மெறிதலாற்
றங்க மாரம் விளைமலைச் சார்பெலா
மெங்கு மாரி விரைந்து பரந்ததே. (26)

ஒக்க நீர்கள் விழுந்த வுரங்கொடே
கற்க டேய்ந்த குழியிற் கடற்புன
ஞெருக்க நாக மரத்தைச் சுழிப்பது
செக்க தாட்டுவ போல திரும்புமே. (27)

கொம்பு சுற்றிப் பனைமரக் கூட்டவே
ரம்பு சுற்றிச் சுழிக்கு ளமைத்துளே
பம்ப ரங்க ளெனச்சுழல் வித்துநீள்
வெம்பு கானற் குறிஞ்சி விரைந்ததே. (28)

பாலை வந்து பரந்த பசும்புனற்
சோலை நின்ற மருதஞ் சொரிதலா
னீல வண்டுஞ் சுரும்பு நெருங்கியே
கோல வன்னக் குருகு மலிந்ததே. (29)

வல்லைச் சேர்தன மங்கையர் மூழ்குநீர்
மூல்லைச் சென்று முதுநெய்தல் வாவியிற்
செல்லச் செங்கயற் சீறிக் குதிப்பது
கல்லைச் சேர்ந்த கடற்போற் களறுமே. (30)

கீத வோசையுங் கிம்புரிக் கோட்டுமா
நாத வோசையு நல்லவ ரோதிய
வேத வோசையு மென்பரி யோசையு
மோத வோசை செயுமக்க மூரெல்லாம். (31)

தெருவி லாடுந் திகழுச லோசையுங்
குரவை யோசையுங் குங்குமச் சந்தன
வரிவை யாடிய வம்மனை யோசையும்
பரவை யோசை செயுந்தெருப் பாங்கெல்லாம். (32)



அறுசீர்க்கழிநெடிலடி விருத்தம்

பூசல்வேல் விழியார் தங்கள் புணர்முலை யன்ன பார
வாசநீர் குடத்தி லேறும் வலம்புரிச் சங்க மீன்ற
வீசுநீர்த் தரளக் காந்தி வெண்ணிலாத் தோற்றம் [போன்று
மோசநீண் மனைக டோறு மொளிவிடு மக்க நாடே (33)

படைப்பொரு விழியார் பாய்ந்து பங்கையச் சுனைநீ [ராடப்
பெடைக்குரு கினங்க ளேகும் பேரொலிக் கஞ்சி வாளை
மடைத்தலை வலையைப் பீறி வாய்மடுச் செந்நெ [லுன்னப்
புடைத்தலர் கதிர்த்தேன் சிந்தும் பூரண வசந்த [நாடே. (34)

கலிவிருத்தம்

காடு தோறுங் கனகப் பெரும்பயிர்
வீடு தோறும் விருந்தும் வதுவையு
நாடு தோறு நபிசல வாத்திசைக்
கோடு தோறுங் குயிலினங் கூவுமே. (35)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

இலகுமரை மலரிலன மிட்டமுட்டை
சிறைக் கஞ்சந்து [பொரித்திளங்குஞ்
வலகுதிறந் திடமேதி யணிமுலைப்பாற் சுரந்தொழுகு
மமுதுண் டாரப்
பலதவளை யினங்களும்பூ வண்டினமுந் தாராட்டிப்
பாடப் பாட
மலர்த்தேனுந் தொட்டினெட்டை வாடையசைந்
வளரு நாடே. [திடவனங்கண்
(36)

மூண்டகஞ்சேர் தடவாளை முழுப்பலவின் முட்கனியை
முடுகிப் பாய
விண்டுபழக் குலைச்சுளைகள் விரிந்தோடு மருவியிடை
மீது சாயத்

தண்டலையிற் குருகினங்க ளருவியிடை செலுங்கயலைத்
 தானுண் டேகி
வண்டலம்பூம் பொழிலிலகு மருவியிரு கண்வளரு
 மக்க நாடே (37)

மந்திதனைக் கடைசியர்தன் கொழுவிடற் களைந்தவளை
 வாங்கி யோங்கக்
கந்திதனி லிருந்திளம்பூங் கதலிநறுங் கனியுதிர்த்த
 கனிமாங் கொம்பி
லுந்திநதிக் கரைப்பலவி னுன்னிநெடுங் கைதைமட
 லுதிர்த்துப் பீறிச்
சிந்திமயிற் கணங்கலைத்துச் செழுங்கரும்பில்
 செல்லுங் காவே [விழுந்துயரச்
 (38)

புண்டரீய வாவிவலம் புரிநிறைசூ லுளைந்துகரை
 போய்ச்சென் றேறி
வெண்டரளந் தனைமணலில் வெண்மதிய மெனவீன
 விரிகா லன்ன
மண்டமெனச் சிறையைக்கொடு வணைத்துமடைத்
 லருங்கண் டுங்கும் [தலைக்கரையி
வண்டலிடை மந்திகனி யுகுத்தியனத் துயிலெழுப்பு
 மக்க நாடே. (39)

வாசமலர்க் குழலியர்கண் மணிக்குழைக்குட்
 மறுகி லாடு [குண்டலம்போன்
மூசலிசை யும்மேரி யுடைப்பொலியுங் கருப்பூர
 மொழுகு மாலைப்
பேசுமொலி யுந்தேனின் பிரசவொலி யும்வலையிற்
 பெருந்தண் வாளை
வீசுமொலி யுங்கயல்கள் வெடிபாயும் பெருந்தொனியு
 மிகுத்த நாடே. (40)

அறுசீர்க்கழிநெடிலடியாசிய விருத்தம் (வேறு)

தீண்டிய வலவ ருராச் சென்னியைக் கவர்க்கை னீட்டி
வண்டியே பிணிக்க வாவி வெள்ளெகி னங்கள் கண்டு
தாண்டிவாற் கௌவிக் கொண்டு தன்கழுத் துயர்த்தி
 [நீட்டத்
தோண்டியுங் கயிறு நீண்ட துலாவும்போற் றோற்ற
 மாமே. (41)



ஆறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம் (வேறு)

மாங்கனியின் செழுந்தேறன் மடைச்சாடி
 வந்து பாயப் [வயற்கரும்பின்
பூங்கரும்பின் கணுக்கடொறும் புதுத்தரளந்
 புளகித் தேகித் [தனையீன்று
தேன்கதலி யுடனிகலிற் செல்விமுகம் புதைத்துநிற்குஞ்
 செந்நெற் சீசர்
பாங்கருடன் குருபாதம் பணிவதுபோற்
 பணியுந் தானே. [றலைசாய்த்துப்
 (42)

—▢—

# 3. பாயிரச் சிறப்பு

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அந்நகர் தன்னில் வாழு மகுமது நபிக்கு சொற்க
முன்னிகழ் மிகுறு ஜேணி முழுமையு மிறக்கும் வாறும்
பன்னக நரகின் மாந்தர் பங்கப்பட் டழியும் வாறும்
புன்னகை யிறசூ லுல்லா பொற்பதி புகுந்த வாறும்.
 (43)

வீசிய தரள மொன்றுல் விதித்திடும் பைத்தல் மகுமூற்
வாசலி லிபுறு கீமை முகம்மது கண்ட வாறு
மாசைகொ ளறுசின் கீழ யமரரங் கொருவர் சேவல்
வேசமாய் நின்றல் லாவை விரும்பியே புகழ்ந்த வாறும்
 (44)

குங்குமக் களபக் கொங்கைக் கோதையர் துனியா
 [வென்னு
மங்கையைக் கண்ட வாறும் பைத்தல்முக் கத்தீ சூரு
மங்குள மலைக ளோடே யனைத்தையுஞ் ஜிபுரீல கோதி
யிங்கித றிறசூல் முன்னே யெடுத்தவர் வைத்த வாறும்.
 (45)

பெரியவ னறுஷின் கீழே பெருத்திடு மரிவி ஞலும்
வரிசையா லோடும் வாறு வல்லவன் றிருமுன் பேசித்
திரியவு மூசா பக்கந் திருநபி யேகி யேகி
யரியவைம் பதுநே ரத்தை யைந்தொகுத் தாக்கும்
 [வாறும். (46)

அன்பனு சூசு மாசூ சவர்களைக் கண்ட வாறும்
வன்பனு மாலீக்கோடு வானவர் மொழிந்த வாறு
முன்பினு லுதித்த வெங்கண் முகம்மது மிகுறு ஜேறு
மின்பமாங் கதைத்தி ரட்டு வாறினை யியம்பக்
கேண்மோ. (47)

அறுசீர்க்கழிநெடிலடியாசிய விருத்தம் (வேறு)

தன்னைநிக ரற்றவனு யர்த்துநபி தன்சிறிய
தாதையரப் பாசுமகனுர்
மின்னுபுகழ் சேரபுது வாவெனுநல் வேதியர்
விளம்பினர் மிகப்பிரியமாய்
மன்னர்நபி சொன்னதென வண்செறிஸ பாமறுவா
வட்டமலை ரண்டினிடைபோ
யின்னிலகு கண்டுயிலு மப்பொழுது கங்குன்மின்
னிடிபலமி குந்தவிரவே. (48)

குக்குடம தன்றிரவு கூவவிலை ஞாளிகள்
குரைக்கவிலை யவ்விருளிலென்
பக்கலிலெ ழிற்சிபுரி யீலுற விறங்கினர்
பனித்துளி நிறத்தின்வடிவாய்த்
திக்கிலகு மாமணிய தாமரக தச்சிறகு
செப்பிலறு நூறுளதுவா
மக்கணம தானசிறை யொவ்வொரு சிறைக்கிடையஞ்
ஞாறுவரு ஷத்துவழியே. (49)

காலரிய முத்தொளிவ தாவிலகு நெற்றியிடை
கண்டவரி ரண்டுளதுவா
மேல்வரி யெழுத்ததி லல்லாவொழிய மிக்கவிறை
வேறிலையெ னச்சொலுவதாங்
கோலமிகு மற்றவரி மீதிஃனி லெழுந்தது
குதாயொருவ னுற்றவிறைதூ
தாலநபி யொக்குமென வோதுவத வர்க்குமுடி
யானபின லெத்தனையந்தா. (50)

தீனபிசொல் வார்ஜிபுரி யீறலைமு டிப்பினல்
சிறந்தெழுப தாயிரமதா
நானமுள பின்னலிடை முத்துமணி செம்பவள
நல்லொளி வெறிக்குமவர்தா



ஞனமணி முத்தொடுபொன் ஞலுமமை யுண்டதுகி
லங்குறவ ணிந்தெமதுநீள்
கானுறுக ழுத்தினை மிகத்தழுவி யெந்தனிரு
கண்ணிடையின் முத்திமொழிவார். (51)

துயின்றிடுவ ரேயிளகு மென்றெமை யெழுப்பினர்
துணுக்கென வெழுந்தெவருநீர்
வியங்கொள்பெயர் செப்புமென விண்ணவ
மெய்ச்சிபுரீ யீலெமதுநன் [ருரைத்திடுவர்
னயங்கடரு மெந்தனுயிர் நல்லருக ரேயிருளி
ஞடிவரு காரணமெனே
ஜெயங்களொகி தாநவம தானவை கடானெதிர்
செறிந்தபடை வந்ததுளதோ. (52)

என்றபி னெழிற்சிபுரி யீல்சொலுவ ரென்றுமுள
னேகனறு ஷேறுநபியே
துன்றெருகி யிறங்கவிலை வெம்படைகள்
சூழ்வதிலை யேபுதியதா [வந்துவெதிர்
யொன்றதெனு நாயன்விடு மேவலுள தாமன
துறைந்திடு மிகுந்தநபியே
வென்றியுள வும்மது செழுந்துகிலை நீரிறுக
மிக்குடன ணிந்திளகுமே. (53)

உம்மையுடை யோனரு கடுத்துவச னங்கள்பல
வோதவென நீர்முயல்வதென்
றிம்மொழியை வானவ ரியம்பநயி னுர்மி
னிலங்குபரி வட்டமதனைச்
செம்மையுட னேயிடை யிறுக்கிநடை செய்தனர்
சிறந்திடுமந் நாளில்றமலா
னம்முடைய மாதமஃதொ ன்பதுதி னத்திரவு
நாளதுச னிக்கிழமையே. (54)

நேரிசைவெண்பா

மக்கத்தி னின்றுநபி வண்மைகிசு றத்ததற்குத்
திக்குமதீ னவிடையே செல்லுமுன—மிக்குடனே
நாலிரண்டு திங்க ணடக்குமுன் னேகினுர்
கோலமிகு ருஜிடையே கூர்ந்து. (55)

விண்ணவர்கள் கோமான் விரும்பி யெமைக்கூட்டி
நண்ணி யிரவி னடந்தளவே—மண்ணுலகில்
வாக்காக வேகும் வழிதனிலே வானினின்று
மீக்காயீல் வந்தார் விரைந்து. (56)

மீக்காயீ றன்பிறகே விண்ணில்றாக் காயிலெனும்
வாக்கா மலக்கு புருக்கதனைத்—தாக்காகக்
கொண்டுவரக் கண்டேன் குதிரை வடிவுதனை
விண்டுசொலலக் கேளீர் விரைந்து. (57)

—□—

# 4. புருக்குச் சிறப்பு

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

கழுதையி லுயர்கோ வேறு கழுதையிற் பணிந்து
தோற்றும்
வழுவகல் வதன வெள்ளை வடிவது மனுவைப் போல
பழுதகல் சென்னி யுன்னிப் பைத்தலைப் போல நெஞ்சு
வுழுவையி னெஞ்சு போல்வெந் நுயர்ந்தவத் திரியின்
வெந்போல். (58)

மாட்டின்வால் போல வாலு மதகரிக் கால்போற்
காலுங்
கோட்டிய வன்ன மேதால் குருநபி வரிசை மேனி
யீட்டியே சுமக்க வேண்டி யிவுளியின் முகத்தை யல்லா
மீட்டுமென் மனிதர் தங்கண் முகமென விரித்த
தென்னே. (59)

மானிடர் வடிவைப் போல வகுத்தவன் படைப்புக்
[குள்ளே
யானதோர் படைப்பு மில்லை யதுமது நபியைப் போல
மீனுறுங் கடல்சூழ் நாட்டின் மிகுவடி வுடையோ
[ரில்லைக்
கானுறு புருக்கின் சென்னி கற்கியின் சென்னி போல
(60)



கற்கியின் சென்னி போல காவலன் படைத்த தேதால்
வற்கமா விலங்கி னத்தின் வரிசைமாப் பெற்ற தாலும்
வெற்புள புவன மீதே மிகுத்திடு மனிதர் தம்மி
னற்குண வரிசை யாலே படைத்தன னயினுர்
தம்மை. (61)

பொற்பதி புருக்கி னெஞ்சைப் புலியினெஞ் செனவ
குத்தான்
வெற்புள வனத்தி லைவாய் மிருகமிற் றலைவ னும்புல்
நற்குண நயினுர் தாமு நபிகளிற் றலைவ ராகுஞ்
சற்குண புருக்கின் வெந்நைச் சங்கையத் திரியின்
வெந்போல். (62)

அத்திரி முதுகைப் போல வாகவே படைத்த தேதா
னத்திரைக் கடல்சூழ் நாட்டி னடந்திடு விலங்கி
னத்தின்
மெத்தவே பெலமி தான வெந்நுள தான தாலு
முத்திசேர் நபிக டம்மின் முகம்மது ஜெயமுள்
ளோரே. (63)

ஆனையின் கால்கள் போல வழகிய புருக்கின் காலைத்
தானவன் படைத்த தேதா றந்திநற் குணம துள்ள
வீனம தற்ற துய்ய விறையவ னுவந்து சொல்வா
ஞனம துற்ற வெந்த னபியுநற் குணத்தி ேனாரே. (64)

அரியதோர் பெரிய னுய னமைக்கவு மழிக்க வல்லான்
வரிசையா முகம்ம தேநீர் வண்மைநற் குணமுள்
[ளோரென்
றுரிமையா லுவந்து சொன்ன வொளிநபி யிறசூ
[லுல்லா
பிரிசமாய்ப் புருக்கின் செய்கை பெருகவே
யுரைப்பார் பின்னும். (65)

தாழிசைவிருத்தம்

துவர்மாமணி கொடுவாதி துரங்கத்தை யமைத்தான்
கவர்வாள்விழி ரண்டினிடை கலிமாவெழு தியதாஞ்
செவிதான்மர கதநீள்விழி திகழ்தாரகை யொளிபோ
னவமாமணி யதனுல்வெரி நன்னெஞ்சு கழுத்து. (66)

இருவண்சிறை கெருடன்சிறை யெனலாமதின் மூற்று
முருளுநவ மணியும்பல வொளிவீசியி லங்குந்
தருபொன்கொடு தளைசங்கிலி தமர்நாசிமின்
[மணியான்
மருவெம்பரி விடுமூச்சது மனுமூச்செறி வதுபோல் (67)

பொன்னின்குசை யதிலேநவ மணிபோலொளி வீசு
மின்னின்பரி யின்கல்லணை மென்மைப்பசும் பட்டாற்
பன்னும்பத வாசிப்படி பதுமத்தர ளத்தால்
வன்னங்கொள்பு ருக்கானதை வானோர்கொடு
வந்தார். (68)

கொந்தார்ஜிபு றயிருனபி யருகேகுதி ரைகொடே
வந்தேயதின் முதுகிற்கையை வைத்தேதட வியதான்
மின்ருவிய பலபூணணி மிகுவாஞெலி யெழவே
பந்தாடுவ போலேபரி பாதத்தைமி திக்கும். (69)

உனித்தேயனு மனித்தேபரி யுதறும்படி கண்டே
பனிப்பானியி ஞெளிபோலுடல் படையுண்ஜிபு ரீருன்
மினித்தானெழு குசையானதை மிடுக்காயவர்
பிடித்தார்
முனிற்றேன்றிய மீக்காயிலு முத்தின்படி தொட்டார்.
(70)

முன்னிப்பரி கொடுவந்தவர் முகில்வானறூக் காயீ
லுன்னிப்பிற கேநின்றன ருடையோன்ஜிபு ரீருன்
வன்னித்தப டைப்புக்களில் வரிசைபெறு பவரே
மின்னத்துள நபியேபரி மேற்கொண்டிடு மென்ருர் (71)

பரிமேற்கொளு மெனவேயொரு படியிற்பதம்
[வைத்தேன்
விரிவாசிதன் மனமீதிடை வெருவிற்கொடு நிலமேற்
றரியாதுதன் மேற்கொண்டிடத் தானேயிடந் தாரா
வரிவானுள ஜிபுரீலுயர் மாவோடுரை செய்தார். (72)

கலிவிருத்தம்

மேலிடைத ரிக்குமுன் வெருண்டவகை யேதா
லாலநபி தம்மையரி யோனருளின் வண்ணங்
கோலமுட னேசுமந்து கொண்டுநட வாகின்
மேலவன் வெறுப்பனென மெய்நடுங்கி நின்றே. (73)



மெய்நடுங்கி நின்றபரி மீளவு முரைக்குஞ்
செய்யிடங் கொளுஞ்சிறை சிறந்தஜிபு ரீலே
துய்யநபி யோடெமது சூழ்தரும மெல்லா
மையகலெ மைக்கொடு மன்ருடவென வோதும். (74)

பொற்பதியி லேயெமைப் புகுத்தவும் புகுந்தால்
விற்பயிலு மென்முதுகின் மேற்கொளவு நாளை
நற்பொடு கியாமமதி னன்முதுகி லேறச்
சொற்படி நமைக்கொடுமன் ருடலெனச் சொல்லும்.
(75)

செப்பிடும தற்கறுதி செய்துகொள்வ தற்காய்த்
தப்பியுத றிக்கொடு தலத்திடையி னின்றே
னிப்படியு ரைத்ததை யியற்சிபுரி யீருன்
மெய்ப்புகழ் நபிக்குற விளம்பநபி சொல்வார். (76)

துன்றியபு ருக்குமொழி சொல்லுமதற் கெல்லா
மின்றுபிணை நாமென விசைத்தபின மர்ந்தே
நின்றுபரி தன்னிலகு நெஞ்சைமண்ணில் வைக்க
வென்றிநபி வெம்பரியின் மேலிடை தரித்தார். (77)

கலிநிலைவிருத்தம்

பின்னுமுயர் வாசிஜிபு ரீலுடனெ திர்ந்துமொழி
பேசுமிபு ருகீநபிதாங்
கன்னன்மொழி யானயிசு மாகினபி யானவரைக்
காணவென வேகியவந்நா
ளுன்னியவ ரென்முதுகி லேறிநடை செய்தது
வுமக்குறவி ளம்புவதுவோ
வென்னவுயர் வானவர் விளம்புவது வொக்குமதை
யானறிவ னென்றுமொழிவார். (78)

நானறிவே னென்றஜிபு ரீலொடுபி னுஞ்சொலு
நறைகொள் கவுலல்கவுத
ருனகிபு லாவையழ கானகலி மாவைமுடி
யானதையு நீளியகுருன்

தேனமுத மானதீன் லிவாவுல்கம் துக்கொடியுஞ்
சீரியஷபா அத்துமுடையோர்
மானிடர்ஜி னுக்குமிகு தூதுவரு வோரெனபு
ருக்குநபி யைப்புகழுமே. (79)

கந்துகம தாகியபு ருக்கதனை வானவர்கோன்
கையமர்த்தி யேதுமொழிவார்
முந்தபுது லாமகன் முகம்மதிவ ராதமக
முன்னவர்பின் ஞேரிலுயர்ந்தோர்
பிந்தவுநன் முத்திரை பெறுநபி நலத்தொடு
பிலத்தநபிப் பட்டமிறங்கு
மந்தநல தூதர்களி லேதலைவர் நாயன்மு
னமர்ந்துறமன் ருடுநமையே. 80)

அனைத்தையு நலத்தொடு சுவற்கமி லனுப்புவ
ரடற்பல செறித்தவழியோர்
வனப்புள சுவற்கமை வலத்திடை நிறுத்துவர்
மறுத்தன ரகத்தையிடபாற்
சினத்தொடு துசிப்பவர் சிறப்பொடிவர்
திறப்பகல் வேட்டெனவுளே [செப்புமொழி
நினைப்பவர் சுவற்கமி லிருப்பவர்சொ லைப்பொயென
நினைப்பவ ரிருப்புநரகே. (81)

மத்திய படைப்பவை யிவர்க்குளஷ பாஅத்தினின்
மிகக்கவலை யெட்டியிடைவார்
சுத்தநபி யைச்சிபுரி யீலிவைகொ டேபுகழ்வர்
துய்யநபி யைப்பரிகோடே
யுத்தமகு ணத்தொடு நடந்தவடி யொவ்வொரு
வடித்தொலைகண் மட்டுளதுவா
மெத்தெனவு டற்பணி விலேபத மிதித்திடில்
விறற்கொளுமுற் கால்நெடுகுமே. (82)

—□—



# 5. பைத்தல் முக்கத்தீசுச் சிறப்பு

மடக்குத்தாழிசைவிருத்தம்

பிற்கால் குறுக்குமுய ரத்தேறு மப்பொழுது
பிற்பாடு தித்தநபிக்காய்
முற்கால் குறுக்கியடர் பிற்கா னெடுக்குமது
முற்போ டெழிற்கலனைதான்
நிற்பாமல் வெற்றிசெறி பொற்பாதம் வைத்திவுளி
திக்காம லேகும்வழியில்
வெற்பான தொன்றுதெரி யப்பார வெற்பினிடை
மிக்காக வீசுமொளிவே. (83)

இந்தான திற்கதிரின் மின்ரு ரகைக்கண
மிலங்காக வீசுமொளிதான்
கொந்தார்ம லக்குமலை நின்றேதசு பீகுகொடு
கூறுதகுலீல் கடக்குபீறும்
சொந்தா னெனச்சொலி வளைந்தேகும் வெற்பினிடை
துய்யோன் றனைப்புகழுவார்
சந்தாப மற்றஜிபு ரீயில்வள்ள லைக்கடிது
தானிங்கி றங்குமெனலால். (84)

கொச்சகக்கலிப்பா

நறைக்கான்மிகு பரிக்கேவரு நயினுரிவு ளியினின்
றுறைப்பாயிறங் கியபோதங்ங னுயர்வானவ ருறரெண்
டிறக்ஆத்திறைஞ் சவுமேவின றக்ஆத்திறைஞ் சியபின்
னிறைப்பாய்பரி தரித்தேகுசை நெகிழ்த்தேபரி
[விடுத்தார். (85)

சந்தவிருத்தம்

மேரிது வேதென வேசொலு வீரென விண்ணவ
[ரோதிடுவார்
தூரிசி னுமலை யாமிது மூசா துடர்ந்து வல்லாவுடனே
வீரிய மாய்வச னித்தது மிம்மலை மீதிடை யேதவுருத்
தேரருள் வேதமி றங்கிய திம்மலை தன்னிலெ
[னப்புகல்வார். (86)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

துரிசிலா மலையின் றன்னிற் சொற்புகழ் மூசா தம்மைப்
பெரியநா யகன ழைத்துப் பேசின னிரூழ்நா வின்றி
யரியநா வலர்கள் போற்று மகுமது நபியைத் துய்ய
வரிசைநா யகனல் லேழாம் வானின்மேல் வரவ
[ழைத்தே. (87)

தன்னுயர் முன்பே யாக்கித் தன்னொளி பிரபை காட்டி
யின்னதென் றளவில் லாம லெழப்பல வரிசை
[யீந்தான்
மன்னிய வசன மீதில் வலுப்பமுங் குறைவும் பாரி
னன்னபி யிறசூ லுல்லா நற்புகழ்க் கிறுதி யின்றே (88)

இந்தநன் மலையின் மூசா வேகனே டியம்புங் கால
மந்தம தில்லா நாய னவனையே காணு ரங்கு
மந்தரந் தன்னி லேகன் வளரொளி தாக்கக் கண்டு
வந்தநே ரத்தே மோகித் திங்ஙனே தமைம றந்தார்.
(89)

மருவிய கபீபு தம்மை வானகத் தழைத்து மப்பால்
வெருவிலா திருமுன் பாக்கி மிக்கொளிப் பிரபை
[காட்டிக்
கருவிய மனது சற்றுங் கலங்கிலாக் கருணை கூர்ந்து
பெருகிய ராசி யங்கள் பேசியே புவியில் வந்தார். (90)

ஆகையான் மூசா தம்மி லகுமதின் வரிசை பாரீர்
தோகையாய் மரமேற்றேன்றுஞ் சுகநபி வரிசை தன்னை
யேகமாய் மனுவுஞ் சின்னு மெழுதியே வேட்டின் மீதே
யாகமாக் காப்புச் சாற்ற வருங்கட லேழும் போதா.
(91)

சந்தவிருத்தம்

அந்த மகாமலை யப்புற
மிட்டுற வப்புற மாகையிலே
வந்தொரு வாசறெ றிந்தது
வாமது மையிரு ளாய்வனமாய்ச்
சிந்திய முட்பல சேரிட
மாமதி வேஜிபு ரீலெமைநீர்
சந்தப மின்றியி ரண்டிறக்ஆத்
திங்ஙனே தான்றொழு மென்றனரே. (92)



வணங்கிபு றுக்கினி லேறிய
போது முகம்மது வோதிடுவா
ரிணங்கிய வானவ ரேசொலு
மித்தல மேதெனக் கேட்பதனுற்
பிணங்கொள் சடங்க ளொழுப்பிய
வீசா பிறந்திட மென்றனர்பின்
மணங்கொண் முகம்மது வேகிய
போது வலத்தொரு சத்தமுமாய். (93)

தாழிசைவிருத்தம்

நின்றேவரு மொழியானது நெறிசேர் முகம்மதுவே
யின்றேயொரு மொழிகேட்டெழுந் தருளீர்நிலு
[மெனவே
நன்றாகிய மொழியானது நானேசொல்வ தெனுமாங்
குன்றுதவின் னோர்நீரெதிர் கூறுதையு மென்றார். (94)

அல்லாவுத விப்பேறுகோ டப்பாலு றுமப்பான்
மெல்லாயிட பாகில்வரு மிக்காயொரு சத்த
மல்லார்முகம் மதுவேயகு மதுவேநிலு மென்றென்
சொல்லானது கேளுநற் சொற்சொல்பவ னனே. (95)

எனவேமொழி வரவேஜிபு ரீலேதுரை செய்வா
ரனவாய்மொழி பழுதானது வதினேடெதிர்
[மொழிநீர்
வினவாதையு மெனவோதினர் விரைவாய்நடை
[செய்தார்
வனமாகிய குழலாளொரு மடவாளெதிர் வந்தாள்.
(96)

தோட்டுக்குழல் சரியப்பணி சுடர்வீசிட விருகை
நீட்டித்திரு வனையாளென நின்றாடர ளவடம்
பூட்டிப்பல மணிமாலைகள் புதுவெண்ணில வெனவே
நாட்டிப்பதித் தேதோன்றிய நடுநாயக முத்து. (97)

நபிசெப்புவர் பணிமீதினி னடுநாயக முத்துச்
செவிசென்றிடு தேங்காயிலுஞ் சிறிதல்லது பெரிதாங்
குவிகுங்கும முலையாள் சொல்வள் குருவாமுகம் மதுவே
கவின்முங்கிய நபியேயெமைக் காணீரிரு கண்ணால்.
(98)

எம்மைத்தெரி சியுமென்றன ளியானுமும தும்மத்துக்
கிம்மத்துட னற்காரிய மியல்பாய்மொழி பவளென்
றம்மத்திரு வலையாள்சொல வடல்வானவர்
[மொழிவார்
செம்மைப்பெறு நபியேயிவள் செப்புமொழி தப்பாம். (99)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

மங்கைய ருரைப்புக் கெல்லா
மறுமொழி யுரைப்ப தன்றிச்
சங்கியா தேக வேவிண்
டலத்தவ ருரைத்த போது
வங்குவிட் டகன்ற கால
மச்சமா யொருசொற் கேட்ப
திங்குவிட் டப்பாற் செல்ல
வெம்முன மூவர் வந்தார். (100)

சந்தவிருத்தம்

வயதர்ப தத்தரு மற்றவர் வாலிபர்
வந்துச லாமொழியச்
செயமிகு மிக்குள மூவரி னம்முயர்
சித்தமி தத்தவர்த
முயருச லாமது கைக்கொளு வீரென
வோதுவர் வானவர்கோ
னயமிகு வாலிபர் செப்புச லாமதை
நன்னபி கைக்கொளுவார். (101)

இங்கிவை கண்டபி னப்புற மானதி
லேகயி லேகணமா
யங்கவ ரோர்பசு வானது தன்னை
யறுத்தவ ரேதுசெய்வார்
பங்கது நாலிடு வாருயர் கொம்பு
பணைத்த குளம்பொருகூ
றங்குமி ரத்தமெ ருத்தனை யேயவர்
தாளெருரு கூறுசெய்வார். (102)



சிறிய நரம்பொடு பெரியந ரம்பிவை
தாளெருரு பங்குசெய்வா
ருறுநல செந்தசை யதையொரு பங்கென
வுறியினில் வைத்திடுவோர்
பிறிவிடு பங்கது நரலையு நால்வகை
பேர்கொடு போயினரே
யிறையருள் கொண்டுற வப்புற மாகையி
லேகவெ திர்ப்பதென்னே. (103)

புவியினி னின்றொரு சேவலெ ழுந்து
புறப்பட வேயுடனே
செவியுறு கொம்பு முளைத்து வளர்ந்தன
சேவன்மு னேவருநீ
ளவனியி லுள்ளபி ளப்பதின் மீள
வமிழ்ந்தி — வேபுகுதக்
கவையுறு கொம்பு தகைத்து செலாவகை
கண்டது மீன்றதுவே. (104)

புதுமை யிதென்று நடந்திட வேயொரு
பூம்பொழி றோன்றியதா
மதனிடை நற்புனல் புற்பல நிற்பவ
திற்செறி காலிகடான்
முதுகுட னேவயி றொட்டி யுலர்ந்து
முகங்கள் கரிந்தனவா
லிதனிடை நின்றுற வப்புற மாகையி
லேகலெ திர்ப்பதென்னே. (105)

தண்டலை யொன்றது கண்டன மற்றிடை
தண்புனல் புற்கள்கணுற்
கண்டன மில்லைய தன்னிட மேய்கிற
காலிப ருத்தனவாங்
கொண்டன் முகிற்குடை யிட்டன வெங்கள்
குதாயி றசூல்கனிவாய்
விண்டுற வங்கண்மி கப்பெரி தென்று
விளம்பி நடந்தனரே. (106)

நவமிது வென்றுந டந்தபி னேசிலர்
　　நண்ணிவெ ளாண்மைசெய்வர்
ரவனியி லன்றவர் நட்டுற வன்று
　　வறுக்கமி கக்கதிரா
மிவைதெ ரிசித்துற வப்புற மானதி
　　லேகயி லேசிலபேர்
சுவையுள நற்றசை விட்டமு கத்தசை
　　தோன்ற வருந்துவரே. (107)

தசைக ளருந்துத லங்கள்க டந்து
　　சமைந்து நடக்கையிலே
திசையி லிருந்தொரு மாமண மானது
　　திக்கென வீசியதா
மிசைய நடந்துற வப்புற மாகையி
　　லேகயி லேபெரிதாய்
வசைக ளகன்ற பைத்தல் முக்கத்திசு
　　வந்து தெரிந்ததுவே (108)

கலித்துறை

பயித்தல் முக்கத் தீசின்முன்னு ளகூதிகள்
[வந்திருந்தார்
பயித்த லவரை நசுருனி மார்கள் பலவெருட்டி
யியத்தோ டிருந்தனர் பாமுரைப் போல
[விருக்குதங்கே
ஜயத்தோ டொருபுற மாயொரு வாயிற்
றலைப்பட்டதே. (109)

அந்த நல்வாயி றனிலிறங் கீரென வண்டர்சொல்
வுந்தி யிறங்கின ரவ்வாயிற் போந்தபி ளேதிடுவார்
தந்தை யிலாதவ ரீசாதன் வாயி றப்பாதெனவே
பிந்த முகம்மது வாயிலென் றேயென்றும் பேசுவரே.
(110)

அவ்வாயி லான ததுவாம்பைத் தல்முக்கத் தீசுவெனுஞ்
செவ்வான பள்ளித் திருவாயி லாமதிற் சென்றுமதற்
கவ்வாயிற் பள்ளி யகத்தான போது வமரர்கள்கோன்
சவ்வான தூணைக் கைவிர லாற்றமர் தானிட்டதே.
(111)



ஏறிய வாசியைத் தூண்டுளையிற் கட்டியிஞ்
[சொல்விண்ணோர்
மீறிய பாங்கு சொலியெமைக் கூட்டி மிகுந்ததவ
மீறிய பள்ளியி னுட்சென்ற போதொரு லட்சமுடன்
கூறு மிருபத்தி னுலாயி ரநபி கொற்றவரே. (112)

ஆத முதலொ டுக்கமிற சூலிடை யாகவுள்ள
போத மிகுந்தநபி மார்க்கெமைக் காட்டினன்
[போற்றவல்லோன்
சீத மிகுந்திடு பள்ளியிலே யிவர்கள் சேரவந்து
நாத மிகுந்த சலாமுரைத் தாரென்மு னுடிவந்தே.
(113)

சீராய் நபிக ளுரைத்த சலாமுக்குச் செப்பமுள்ள
மாரா யத்துக் கும்பிரத்தி சொன்னேன்பின் மகிழ்ந்து
சொல்வார்
நேரா யுமக்கு மும்மத்தி னேருக்கு நித்தநித்த
மோரான் கிருபையு மெல்லா நலமு முறுமென்பரே.
(114)

அப்பொழு தாதமுடன் கேட்டே னிந் நவனியினி
ரெப்படி னுள்விடுத் தீராகு லந்தனிலே யிடைந்து
விப்படி நாள்விடுத் தேன்மக னேயெம் மிறையுகைய
மெப்படிச் சோதிக்கும் வண்ணமெல் லாமெனைச்
சோதித்தனே. (115)

சொற்கத் தினின்று வெணையும்கவ் வாவையுந்
தோன்றுருவ
வற்கத் தையற்ற பெரியோன் பிரித்தனன் வாழ்வை
விட்டுச்
சொற்குற் றமற்ற மகனே யிருவரையுந் துசித்தான்
முற்கற் பிணைப்படி யோர்பாவஞ் செய்த முனிவு
கொண்டே. (116)

ஆத மிவைசொன்ன பின்வானர் சொல்வ ரகுமதுவே
போத முறத்தொழு வித்திடுநீ ரென்ற போது
சொல்வார்
மேதை யகன்ற பிதாவா தத்தைத் தொழு
விக்கவென்றுஞ்
சோதி நபிகளை முன்னே தொழுவிக்கச் சொல்லினரே.
(117)

அப்போ திலங்கு ஜிபுரீ லுரைப்ப ரகுமதுவே
தப்பாத்தொழுகை யுமக்கே நிலைப்பட்டந்தாந்தகுநீர்
மெய்ப்பான நாயனுமைத் தான்முன்னே தொழ
வேணுமென்று
னிப்பார வார்த்தைக் கிறக்ஆத் திரண்டங்
கிறைஞ்சினரே (118)

எல்லா ரையுந்தொழு வித்தபின் வானரெங்
கோன்மறைந்தார்
நல்லார் களொக்க மிகுரு பிருக்கையி னல்லவிண்ணோர்
மெல்லாக வந்துமுன் வீருய் விளம்புவர் மெய்ப்
பொருளா
மல்லா வுமக்கு சலாமுரைத் தானல் லகுமதரே. (119)

கொச்சகக்கலிப்பா

மின்னுகின்ற நன்னபியே வேதநபி மார்களுட
னென்னையன்றி நாய னிறைஞ்சவுமு ரியவன்றுன்
பின்னையுண்டோ கேளுமென்றுன் பின்புநபி
கேட்டதற்கு
மன்னனன்றி நாயனொரு வற்கமில்லை யென்றனரே.
(120)

நீதிஜிபு ரீறன் னேசமொழி கேட்டுநபி
யேதுக்குத் தூதாநீ ரென்றவர்க ளோடியம்பச்
சோதி குதாயொருவன் ரேன்றவவன் றூதாங்க
ராதிக்கோர் போற்று மகுமதென்றுர் மாநபியே(121)

துய்ய முகம்மதல்லா தூதாங்க ரொக்குமொக்கு
மெய்யிதென்று சொல்லியிந்த மேதினியின்
மானிடர்க்கு
மையலற வோதி வருத்திவிக்க வேண்டுமதா
லுய்யநல தூதானே மென்ரு ருளநபியே. (122)

ஏகன் கபீபுக ளிறகுலுக் கோதியபின்
ஞகமுட னேயெழுந்து ஆதம லைகிஸ்ஸலாம்
யோக முள்ளநல்ல வுயர்ந்தவம் பியாக்கண் முன்னே
மேக மலையாவும் விதித்தோன் றனைப்புகழ்ந்தார்.
(123)



என்னைப் படைத்து வெனக்கறிவீந் தேயிமையோர்
தன்னைக்கொண் டேயெனக்குத் தாட்சிசெய்வித்
[தேயுவந்து
பின்னை சுவற்கப் பெரும்பதவி தந்துசெய்த
வன்னகுற்ற மானவைக ளானதையெல்
[லாம்பொறுத்தே. (124)

என்னுடைய தௌபாவை யேற்றுக் கபுலாக்கி
மன்னுஞ் சுவர்க்கமதில் வாழ்வும் பரகதியும்
பின்னு மெனக்களித்தே பேசும் வடிவுருவ
மின்னதென்னு நாயனுக்கே யெல்லாப் புகழ்ச்சியுமே.
(125)

கலிவிருத்தம்

இப்படி யிறைதனை யேத்தி வீசிய
கொப்புறு வாதமைக் கூர்க்கப் பார்த்தன
ரப்பொழு துயர்த்தியு மாளும் பாரமாய்த்
தப்பறப் பெருத்ததோர் தலையு மாகவே. (126)

வட்டவான் முகமுமாய் வடிவு மாயவ
ரிட்டமா யங்ஙன மிருந்த பின்னுறப்
பட்டமா கியவிபு ருகீம் பையவே
கட்டுமாப் பள்ளியி லிளகிக் காதலால். (127)

உருப்பமா யெனைநமு றூது போட்டதோர்
நெருப்புமா லதனிடை நின்று மேயெனைப்
பெருப்பமாய்க் காத்தவன் பெண்ணொ டாணல்லா
திருக்குநா யகன்றனை யேத்திப் போற்றுவார். (128)

எந்தனன் மகனிசு மாகீ றன்னையே
வந்தநல் லேவலால் வதைக்கக் கத்தியைக்
கந்தரத் திருத்திய காலந் தன்னிலே
யந்தநற் கத்திகொண் டறுப்ப தன்றியே. (129)

தாக்கிய கத்தியின் முரை மேல்வர
வாக்கிய செம்மறி யருங்க டாய்தனை
ளேக்கியே விடுத்துமென் னூறு மைந்தனைக்
காக்குநா யனுக்கெல்லாப் புகழ்ச்சி காணுமே. (130)

தன்னையே நிகரில்லான் றன்னை யேமிக
மன்னிய நபிகண்முன் மகிழ்ந்து போற்றவே
நன்னய நபிதனை நாடிப் பார்த்தன
னென்னுயர் வடிவுபோ லிருக்கக் கண்டனன். (131)

இன்பமாய்ப் புகழ்ந்தவ ரிருந்த போதிலே
பின்புமூ சாநபி பிரியத் தோடெழுந்
தென்புறா றியதெல்லா மெழுப்பு நாயனை
யன்பினுற் புகழ்ந்தன ரந்தப் பள்ளியில் (132)

என்னுட னிதழ்கனு வின்றிப் பேசினு
னுன்னிய துவாவையு முவந்து கைக்கொளப்
பின்னையென் றுரைத்திடாப் பெரிய நாயனென்
றந்நபி யுரைத்திட வவரைப் பார்த்தனன். (133)

அறுசீர்க்கழிநெடிலடி விருத்தம்

பள்ளியி லிறசூ லுல்லா
பாசமா மூசா தம்மைத்
தெள்ளிதாய்க் கூர்க்கப் பார்க்கச்
சிவப்புள்ளார்க் குரிய மேனி
யொள்ளிதாய் முகமு நீண்டு
வுயர்தலத் திருந்தா ரங்ஙன்
வள்ளனம் மிறசூ லுல்லா
வரிசைகோ டிளகி னுரே. (134)

கலித்துறை

அன்பர் முகம்ம திளகிச்சொல் வார்பள்ளி யக்கணத்தே
யின்ப மிகுந்த வியலன்பி யாக்களி லேத்தியெனை
முன்புள்ள நன்னபி மார்தனும் மத்தினு முக்கியமாய்த்
துன்ப மகற்றி யெனும்மத்தை யேத்தினன்
றுய்யவனே. (135)

என்றே புகழ்ந்து பினும்புகல் வார்நம் மெழிலிறசூ
றுன்றுங் கியாமத்தி லெல்லா ருக்குநடு வேதுணிந்து
நின்றே யறிவு சொலக்கற்பித தேனன்
[னெறிநடந்தான்
மன்றுர் சுவர்க்கநன் மாராயஞ் சொல்லு
[முகம்மதுவே. (136)



அரவங்க டேட்க ளழலாய்ப் படையுண்ட வாலுறுநீ
ணரகம் புகாம லரர்க்கச்சம் பூட்டென நாட்டமுடன்
விரகங் கொடுமைக் கட்டளை யாக்கி
[விடுத்தவன்செய்
துரக மொன்றில்லா னுக்கெல்லாப் புகழ்ச்சியுஞ்
[சுக்கூறதுமே. (137)

மீண்டும் புகழ்வர் சபீபென்று மென்னை
[விளம்பிப்பின்னு
நீண்ட கியாமத்தி லெல்லாவும் மத்தையு நீதியுடன்
றுண்டிச் சபாஅத்துச் செய்தேகொடுப் பேனென்று
[சக்கறவே
பூண்டு கொடுத்த விறைவனுக்கே யெல்லாப்
[புகழ்ச்சியுமே. (138)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

பின்னு மாதமெ ழுந்திருந் தாதியைப்
பெருகப் போற்றிடு வாராகி றத்துநாட்
டுன்னு மானிடர் வாய்புதைத் தேயுளஞ்
சோருங் காலமென் சொன்மகன் றன்னையே
மின்ன வேயவர் கட்கறி வோதிட
விரித்துமங் கவரெல் லாமவர் ஷபாஅத்
தன்ன தான்மிக வீடேத்தந் தந்தரு
ளாதிக் கெல்லாப் புகழ்ச்சியு மென்றனர். (139)

கலிவிருத்தம்

ஆதமிறை யைப்புகழ வண்டர்பதி சொல்வார்
மாதவ மிகுந்திடு முகம்மதிற சூலே
பாதையது மேல்வலது பாரிசத்திற் கேட்ட
நாதமொழி யேதென நமக்கறிய லாமோ. (140)

அந்தமொழி யென்றுமுள வாதியறி வரென்
றிந்தமொழி சொன்னபினெ கூதிகடந் தீனின்
வந்திடுமென் றேயழைத்த வாசகம் தென்றே
பிந்துமவர் சொற்கெதிர் பிறத்திகள் சொல்வீராய்.
(141)

உம்முடைய மிக்குள வுயர்ந்தவும்மத் தோர்க
ளம்மகலெ கூதிபல ராவர்க ளதற்பின்
செம்மையிட பாகினிற் செவிக்குளுறு சத்த
மிம்மைநகு ருனிகடன் றீனிலிரு மென்றல். (142)

அந்தமொழி தன்னெடெதி ரங்குமொழிந் திராய்
முந்தவொளி வாகிய முகம்மது றசூலே
பிந்தமண் ணிருந்திடு பெருத்தநு மும்மத்தோ
ரந்தநசு ருனிபல ராகியொழி வாரே. (143)

பின்னும்வழி மீதில்வரு பேதைதுனி யாவா
மின்னவடன் முன்மொழி விரைந்துமொழிந் திரா
யிந்நகர் விரும்பியுய ரேயநகர் விட்டே
பின்னுளநு மும்மத்தவர் பெருநரகில் வீழ்வார். (144)

வெண்பா

வாசி மேலேறி வரும்வழியி லேகேட்கு
மோசையாஞ் சத்த முணர்வீரோ-நாசமாய்
வெந்நரகி லேயுழலு மேதினியோ ரில்லொருவன்
வன்னரகோ ரத்திநின்ரூன் வந்து. (145)

அஞ்சுந் தொழாதா னவன்றலையி லேபடவே
விஞ்சி யெறிகல்லு விரைந்துபோ-மிஞ்சுசத்த
மாமென்ருர் கல்லெறிந்தா ராகிறத்திற் செல்வருடம்
போமஞ்ஞா ருட்டைவழி போம். (146)

கார்நரகிற் கீழ்த்தட்டிற் கையன் பெருந்தலைமேற்
பாரமலைக் கல்லினம் பட்டதில்லை-நேரமுட
னல்லா தனைவணங்கா தம்மனித ரேநீங்க
ளெல்லாரு மென்படு வீரோ. (147)

முன்பா யுமக்கெதிரே மூவராய் வந்துநின்று
வன்பாய் சலாமுரைத்த தாரென்ரு-ரின்பாக
மாபுயத்தின் மேவு மவுத்துந் தௌலத்து
மாபியத்து மூவருமே யாம். (148)

கலித்துறை

வாலிப ரானவ ராபியத் தாமவ ரைக்குறித்த
தாலுய ரும்மத்து நீரும்பொன் னூரிற் றரிக்குமட்டு
மேலுநல் லாபியத் தென்றுங்குன் ருதென
வேயுரைத்தா
ரால நபியுட னேஜிபு ரிலங் கமர்ந்துநின்றே. (149)



வெண்பா

அந்தப் பசுவை அறுத்துநாற் கூறுசெய்வ
தெந்தப் பரிசென் றியம்புவார்-முந்தவே
சீரேத்த மாகவளர் செம்மல் முகம்மதுவே
பாரேத்தந் தீனும் பசு. (150)

கொம்புங் குளம்புமொரு கூறுகொடு போனவர்கள்
வம்ப ரெசுூதி மரபினோர்-கொம்பிற்
குளம்பி னலங்களொன்றுங் கூடா ததுபோற்
றளம்பி நலவகன்ருர் தான். (151)

வஞ்சிவிருத்தம்

உதிரங்களெ ருத்தனை யொருகூறென்
றெதிர்கொண்டு வெடுத்தவ ராரெனிலோ
வதிர்கின்ற நெருப்பை யல்லாவெனவே
மதிகொண்டு வணங்கிய மானிடரே. (152)

எருவுந்துவர் மேவு மிரத்தமுநீள்
வருகின்ற நஜீசதை வாரிமிகப்
பருகும்படி கைக்கொடு பத்திடுவோ
ரருளொன்றில துப்பர வற்றவரே. (153)

உரிதானுறு சின்ன நரம்புடனே
பெரிதான நரம்பு பிரித்ததனைப்
பரிவாயிரு கைக்கொடு பத்துமவ
ரருளானதி லாநசு ருனிகளே. (154)

கறையற்ற நலத்தனை கைக்கொளுவோர்
நறைபெற்றிடு தீன்வழி நல்லுதவிப்
பொறைபெற்றவ ரென்றுவி ஞோர்புகல
விறையைப்புகழ் வாரிற சூனபியே. (155)

மண்ணுக்கு ளெழுந்து வருஞ்சேவ
லெண்ணிக்கொடு தான்மு னெழுந்தவழி
மண்ணிற்செல ரண்டு மருப்புமதிற்
றெண்ணிக்கொடு மீள்வது தீனபியே (156)

உலகத்தினி லுமதும் மத்ததிலே
சிலரைச்சில பேர்க ளடர்மொழிகள்
கலகத்தொடு பேசிய பின்கவல்வார்
வலுகுற்றமொ ழிந்தது வன்பிழையாம். (157)

எண்ணும லியம்பிய சொல்விழுங்க
வொண்ணும லுழன்று திரிந்தனவாம்
விண்ணுர்பொழின் மீதுபுன் மிக்கபுனற்
கண்ணுர மிகுத்திடக் கண்டதுவே. (158)

கலிவிருத்தம்

அன்னி லத்தி லடர்ந்துமேய் காலிகள்
வெந்நி மேனி மெலிந்து தளர்ந்தது
பொன்னே யெட்டிப் புகழ்பெறுந் தீன்றனை
யுன்னி விட்டநும் முகம்மத்தி னேர்களே. (159)

மற்றுங் கண்ட வளாக மதிற்பசும்
புற்றண் ணீரொன்று மில்லாப் பொழிலதின்
உற்று மேய்கின்ற காலி யுறுந்தசை
பற்றி மெத்தப் பருத்து முரத்ததே. (160)

தீனே யெட்டிச் செறிந்த முதலினே
யீன முற்ற தெனவே யிகழ்ந்திடுந்
தான முற்ற தவத்த ரிவரென
வானி லுற்ற ஜிபுரில் மவுலுவார் (161)

மருக்கொ ளுஞ்சிறை வானவர் சொல்லினுர்
திருக்கொ ளுநபி சேரும்மத் தோர்க்கெலாம்
பெருக்க மாகப் பிழைபொறுக் கத்துவா
விரப்பீர் தீனி னிலேப்படுத் தென்னவே. (162)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வென்றிவழி போகையின் மிகுத்திடும் வழிக்கரையின்
மிக்கொடுவெ ளாண்மைசெய்தபே
ரன்றவர்க ணட்டுற வறுத்தபி னறுக்கவு
மதிற்கதிர்கள் விட்டிடுவதேன்
வென்றிகொடு காபிர்களே வெட்டுமவ ருக்குதவு
மிக்கமுத லேப்பயிர்செய்வோ
ரொன்றெழுப தோடுநன் ஞூறுயிர மதாகவு
முறும்பயிர் விளேந்திடுவதே. (163)



நல்லதசை யானதை யிகழ்ந்துபிண மானதசை
நம்முளதெனக் கொள்பவரியார்
சொல்லிய கலால்மயிலே யேத்துசிசெய் தேமிகுதி
சொற்பிழைய தாகியகரும்
வல்லியை யுவந்தவண் மனேக்குற நடந்தவர்கண்
மங்கையரு மப்படிசெய்தாற்
கல்லேநர கத்தினிடை நல்லுணவு கண்ணினிடை
காட்டிபழ லுட்டிடுவரே. (164)

வந்தவழி மீதிலொரு வாடைமணம் வீசியது
மக்கநகர் வாழுநபியே
யெந்தமண மென்றமர ரிஞ்சொலொடு கேட்கநபி
யானறியே னேதுமெனவே
நந்துபிற வூனருகி ருந்தருளு மாசியா
நற்று ணேவி யார்கபுறிலே
சுந்தரம தாகவிரு போதினு மிறங்கிய
சுவர்க்கமி லொடுக்குமணமே. (165)

அக்கபுறு தன்னில்வரு மாதிதனெ டுக்குமண
மந்தயுக மாகுமளவு
மிக்கரும மானதை யியம்பியபி னேயமர
ரென்னருகு விட்டகலுவார்
திக்குலகு வானினிடை யோவலது சேணினிடை
சென்றதுள தோவினவியான்
சக்குறவி ருக்கையி லெழிற்பளியின் மிக்கொடு
சடக்கெனவெ திர்ந்துவருவார். (166)

வந்திடு புகழ்ச்சிபுரி யீலொடு சுவர்க்கமின்
மலக்குகளி லோர்தலைவர்தான்
கொந்துசெறி தட்டமதிற் கிண்ணமது
கோதியது பாலமுதநீ [மூன்றதனிற்
ரிந்தமுத மூவகையு மெங்கணயி னுர்திருமு
னேந்தியவர் வைத்துமொழிவார்
சிந்தையிற் பொருந்தியிதி லொன்றதை
[யெடுத்தமுது
செய்கவென நின்றனர்விணுேர். (167)

ஏதகை யெடுப்பதென வேகருதி நிற்கையி
லிலங்கவொரு சத்தநபியே
நாதவற லுன்றிடுகி னீருமும்மத் தானவரு
நண்ணியறன் மீதினிடையே
சேதமுற வேயமிழ்வீர் செப்புமது வுண்டிடுகிற்
சேர்ந்தவும்மத் தோர்களுடனே
பாதக மிகுந்தவழி கேட்டிலுறு வீர்பெறுவீர்
பாலுணுகிற் றீனினிலையே. (168)

என்றமொழி கேட்டிலகு கிண்ணமுறு பாலதை
யெடுத்துணவு செய்துஜிபுரீல்
வென்றியுள கையினிடை மிச்சமுள பாலதை
விருப்புட னளித்தபொழுதே
மன்றலுறு தீனதை யுறைப்பொடு பிடித்தீரென
வானர்மொழி யோதியபினே
சென்றியொரு சத்தம்வரும் பாலதை
செய்திடுகில் வள்ளனபியே. [யெலாமமுது
(169)

ஆனநலு மக்குளவும் மத்தவர்கள் பொற்பதியி
லாவர்க ளெனச்சொனபினெ
வேனலிடை தேடுமூலி காலினிடை தட்டலென
வேகருதி மிச்சமுளபாற்
பானமுத ளித்திடு மெமக்கென வுரைத்தபின்
பலன்கண்மிகு பள்ளிதனிலே
யீனமகல் செஞ்சிறை விரிக்கிலெழு வான்படுவா
னெட்டுஞ்சிபு ரீலுரைசெய்வார். (170)

மிச்சமுள பாலது கிடைப்பதிலை யென்றிட
மிகுத்தநபி யுற்றுரைசெய்வா
ரிச்சையுள பாலது கிடைப்பதிலை யென்னமுன்
னெழுத்துமுடி வானதுளதோ
வச்சிபுரி யீல்சொலுவ ரண்டபதி மற்றுயிரு
மாதமை யமைக்குமுதலே
வச்சிரமிரண் டாயிர மதற்குமுன மேயெழுதி
வைத்தனன் வகுத்த பெரியோன் (171)



முற்பட வொளிப்பலகை யத்திடம் விதித்தவன்
முடிப்பது தவிர்க்குமவரா
ரிப்படி யுரைத்தபி னெழிற்சிபுரி யீனபிகை
யைக்கருணை கொண்டுபிடித்தே
யப்பளியி னுற்றவெளி யானபொழு தோர்பெரிய
வங்கணொரு கற்றெரிதலாற்
றப்பற மலைக்கலை மலக்குகள் வளைந்து
தசுபீகுதகு லீலுஞ்சொலுவார். (172)

அக்கலை மிதித்தெமை யமைத்தவிறை
ருனஜிபு ரீலுரைசெய்தே [யைத்தொழுமென்
வொக்கவுமி ரண்டுறக் ஆத்தவ ரிறைஞ்சின
ருறத்தொழுத பினுரைசெய்வார்
மிக்குள மலைக்கலு மிகப்பெருமை பெற்றதென
வெற்றிவரி சைப்பலனென்றே
தக்கபுவி யொக்கவு மதிற்செறி படைப்பவை
தனைச்சுமை பெருத்தகலிதே. (173)

மண்டல மனைத்தையு மதிற்செறி படைப்பவை
வகுத்தவ னமைப்பையுரமேற்
கொண்டது சுமக்கவொரு கோண.மின் முறிந்தறக்
கொற்றநபி யேயிதுவென
வண்டுலவு தொங்கலணி வள்ளனன் முகம்மதுடன்
வண்மையுடன் கல்லெதிர்நின்றே
தண்டியெனை யாவரு மிதித்ததிலை நீரொழியத்
தானென வெதிர்ந்துரைசெயும். (174)

என்னையொரு நாயக னமைத்தமுத னுள்வரையி
னெங்கும்படைப் புண்டவர்கள்கால்
வெந்நினிடை பட்டதிலை வேதநபி யேயென
விளம்பநபி செய்குவர்துவா
மன்னியது வாபறக்கத் தாலுமலைக் கல்லுமுயர்
வான்புவி தனக்குமிடையே
மின்னற்கொடு நிற்குமுக மாமளவும் பின்னையது
மேதினியின் மீதுவிழுமே. (175)

—□—

# 6. ஏணிச் சிறப்பு

கொச்சகக்கலிப்பா

மங்கா நபிக்காய் வரிசைமலைக் கல்லிலொரு
சிங்கா சனமிறங்குஞ் சேர்ந்தகியா மத்ததுநா
ளங்கான தொவ்வொருநா ளாயிரமாண்
[டாகுமெனத்
தங்கா மனைவருக்குஞ் சாற்றினார் தன்னபியே. (176)

மின்னிலங் குஞ்சிபுரீல் வீதிமலைக் கல்லினின்று
முன்னின்வா னின்மலக்கு முன்னியிசு மாயிறனை
யுன்னியிவர் கூவ வுயர்வான வர்க்குமுன்னி
லென்னுஞ் சிபுரீலை யேதுமக்கு வேண்டியதே. (177)

சொற்கத்தின் முன்னிச் சுகந்த றிலுவானிதனை
வற்கமுடன் கூவியெந்தன் வண்மைச் சலாமுரைத்தே
நற்கஸ்தூ ரிப்புயத்தார் நம்மிறகு லங்குவரு
தற்குமிகு ருஜேணி தானிறக்கச் சொல்லுமென்றார்
(178)

சொல்லயிசு மாயிலெனுந் துய்யோன் றிருமலக்கு
மல்லவிழ்மஞ் சாயிறனை வாய்மொழியாய்க் கூவினரே
சல்லிபயில் மஞ்சாயீல் ஐம்காயி லையழைக்கக்
கல்வி ஐமுகாயீல் கல்காயி லையழைத்தார். (179)

சங்கையுள்ள கல்காயீல் சாவுறுயா யிறனையே
யங்கிலழைத் தார்சா வுறுயாயீ லெனுமவர்தான்
கொங்கவிழ்நூ ருயிறனைக் கூவவே நூருயீல்
செங்கைக்கறு காயிலெனுஞ் சேர்மலக்கைக் கூவினரே.
(18 )

முந்தி கறுகாயீல் முகறுயா யிறனையே
சிந்தைசெய்து கூவத் திருமுக றுயாயீலு
மிந்துமுக மானறிலு வானியா யிறனையே
வெந்தமின்றிக் கூவி மிகுரு ஜிறக்குமென்றார். (181)



வல்லா னுடைய மலக்கா மிவர்கண்மிக
வெல்லாருஞ் சொற்க மியல்பாம் பிருதௌவுசின்
மெல்லா யிருக்கும் விறலேணி தன்னையிணை
யில்லா னருளா லிமையோ ரிறக்கினரே. (182)

கலிவிருத்தம்

ஏணித்திரு நிலைபொன்னதி லிலங்கும்பல மணிகள்
சேணுற்றிடு மதனிற்படி செப்பிற்பதி னேரைந்
தேணிப்படி யொவ்வொன்றினி லிடையிற்செலு
[தூரங்
கோணத்திடை தேசிக்குதி ரைநாற்பது வருடம். (183)

விரைவாய்நிரை வையாளி விடுக்குந்துலை யுளதாம்
வரைமேவிய முன்னிற்படி வண்வெள்ளி யிரண்டென்
றுரைதாவிய படிபொன்னதி லுரமாம்படி தரளம்
நிரைதாவிய படியானது நீலம்பல வன்னம். (184)

நலமாகிய நவமாமணி நற்பொன்புகர் கொண்டே
பலவன்ன மதாய்மேனியின் பாரப்பிர காச
மலைசூழ்தரு மெழுவான்படு வான்முட்டி யிலங்கு
நிலையேணி கியாமத்தள வாயங்ஙன நிற்கும். (185)

வெண்பா

தரைக்குணர ரோர்க டான்மவுத்தா நேரம்
பரக்கவவர் முழிக்கும் பார்வை—யிரைத்ததரை
யென்றிசைக டோறு மிலங்கேணி யூடுவரு
மண்டர்களைப் பார்ப்பதுவே யாம். (186)

கலிவிருத்தம்

இம்மத்துள நபியேயென விமையோர்சொல்வ ருமது
உம்மத்தவ ருக்குமிக வுயரும்வரி சையதா
மம்முற்றிடு முன்னிற்படி யதிலேபிசு மிற்சொலி
செம்மைப்பெறு வலக்காலதை வைத்தேறுக வென்றார்
(187)

வலக்காலதை முன்னிற்படி வைத்தேறின தப்போ
தலமாகிய சொர்க்கப்பதி தனிலேயுள துகிலா
னலமாமதி முகமாமது நறையோடு துடைத்தே
யலராலிமை யவராயிர ராலாத்தி யெடுத்தார். (188)

தருமாநபி ரண்டாம்படி தனிலேறின ரண்டா
யிரவானவ ராலாத்தி யெடுத்தாருயர் மூன்றா
மூரமாகிய படியேறின விடனேமொகு மொகென
வருவானவர் மூவாயிரர் வந்தேயெதிர் கொண்டார்.
(189)

நாலாம்படி தனிலேறினர் நாலாயிரம் வானோ
ராலாத்தி யெடுத்தார்பினி லஞ்சாம்படி சென்றார்
மாலானதி லையாயிரம் வானோரெதிர் கொண்டார்
மேலாகிய வாறாம்படி மெல்லப்பதம் வைத்தார்.
(190)

ஆறாம்படி தனிலேறின ராறாயிரம் வானோர்
வீறாயெதிர் கொண்டார்பினின் மிக்காகிய வேழா
நூறாகிய படிசென்றிட னோக்காயெதிர் கொள்வா
ரீறானதி லானேவல்கொ டேழாயிரம் வானோர். (191)

இருனாலு படிக்கேசெல வெண்ணாயிரம் வானோ
ரருகாகநி றைந்தேயெனக் காலாத்தி யெடுத்தார்
திருமேவிய நவமாம்படி சென்றேனொரு பெரியோன்
வரமேவிய நவமாயிரம் வானோரெதிர் கொண்டார்.
(192)

பத்தாம்படி செலவேயுயர் பதினாயிரம் வானோர்
கொத்தார்கொடை நபிபாலெதிர் கொண்டார்பதி
[னொன்றா
முத்தாம்படி செலவேமொகு மொகெனக்குழு
[வொன்றாய்
வித்தாரம தாய்வானவர் வீறாயெதிர் கொண்டார்.
(193)

ஈரஞ்சொடி ரண்டாம்படிக் கெய்தக்குழு ரெண்டா
யாரஞ்செய்து வானோர்நபிக் காலாத்தி யெடுத்தார்
தீரம்பதின் மூன்றாம்படி செல்லப்பல கணமாய்ப்
பேரந்தா ராலாத்தி யெடுத்தார்பிரி சத்தால். (194)

உயரும்பதி னாலாம்படி யுறவேமிகு குழுவாய்ப்
புயலந்தர ராலாத்தி யெடுத்தார்கள் புகழ்ந்தே
பயமன்றிநன் மூவஞ்சு படிக்கேசெல விமையோ
ரியல்கொண்டெழு பதினாயிர ரிசுமாயில் மலக்கின்.
(195)



கூட்டத்திர ளாய்வந்தெதிர் கொண்டார்பதி னாறா
மேட்டுப்படி யதிலேயுற மெல்லப்பதம் வைத்தா
ராட்டற்பரி வீரர்செல வறுகாயிற னுடனே
நாட்டிப்பதி னாறாயிர நல்வானவர் வந்தார். (196)

வெண்பா

பத்தேழாம் பொற்படியிற் பங்கயஞ்சே ரும்பதத்தை
வைத்தேறும் போது மலக்குகடான்-வித்தார
நாய னபியென்று நன்னாற்பத் தொன்பதினா
றாயிர ராலாத்தி யெடுத்தார். (197)

கலிவிருத்தம்

திருவொன்றிய பதினெண்படி சென்றேனறு காயீல்
வருமந்தர ருடனேபதி னாறாயிரம் வானோர்
முருகொன்று கழுத்துப்பணி முன்கைப்பணி யுடனே
யரியொன்றிய முடிபூண்டவ ராலாத்தி யெடுத்தார்.
(198)

பத்தொன்பது படியிற்பதம் படவே ஜறுஜாயீல்
சுத்தங்கொளும் வானோரவர் துடர்வாயுள கழுத்திற்
பத்தங்கொளு முகம்ரண்டது பணைகொண்முக
[மொன்றிற்
சத்தங்கொளு நாநாற்பது தன்னாலிறை தன்னை. (199)

விதமாகப் புகழ்ந்தேபதி னாறாயிரம் விண்ணோ
ரதபாக வுவந்தேநபிக் காலாத்தி யெடுத்தார்
பதநீளிரு பதெனும்படி படவேபறு காயீ
லிதமான மலக்கின்பவு செழவந்து நிறைந்தார். (200)

வந்தார்பதி னாறாயிரம் வானோரொளி வாலே
நந்தார்முடி சூடிக்கொடு நன்னெற்றியின் மீதே
யிந்தாரிவர் றூகானிக ளென்றேயெழு தியதாங்
கொந்தார்முடி வானோரெதிர் கொண்டார்முனில்
[வந்தே. (201)

இருபத்தொரு படியிற்செல விமையோர்தகு யாயீன்
மருவுற்றிடு குழுமிக்குள மதிபோல்வத னமுமா
யொருமைப்படு மனதோர்சிறை யொன்றொன்றது
[பச்சை
திருவுத்திடு வொளிவாலவர் திண்போர்வை புனைந்தே.
(202)

வருவார்பதி னூருயிரம் வானேரவ ரெல்லா
மருகாகவ ளேந்தேயெமக் காலாத்தி யெடுத்தா
ரிரவேநபி யிருபத்திரு வேணிப்படி செலவே
திருவானவர் மஞ்சாயிறன் சேனைத்திர ளானேர். (203)

பஃறொடை வெண்பா

அவ்வானவ ராரெனவே யறையுமெய்ப் பேறுடையோ
ரோவ்வா நரகி லுயர்தீயைச்-செவ்வாய்ப்
பொலிக்குமொழி கொண்டுபடைப் புண்டவர்க
[ணரகிற்
சலிக்குகின்ற பாவிகளைத் தானே-மெலிக்கு
நரகத்தின் முக்கியுயர் நற்சுவற்கத் தேற்றி
வரிசைகவு தற்கருகே வைப்பார்-பெருகுமிவ
ரோவ்வொருவர் கையி ஞெளிவாய்த் தடிபிடித்துத்
துவ்வல்மலக் கோர்கள்சலாஞ் சொல்லியே-
மேலா னருளால் விரும்பி நபியருகே [யவ்வவர்கண்
யாலாத்தி யேந்திஞ-ரன்று. (204)

இருபத்து மூன்ரு மேணிப் படிமீது
மருமொய்த்த தாமரைத்தாள் வைத்தார்-கருமத்தா
லெத்தியாயீல் மலக்கு வென்னுமவர் கூடப்
பத்துநூ ருயிரவர் பாலில்வந்து—சுத்தத்
தசுபீகு செய்துகொண்டு தண்ஜிபுரி யீலோடே
யசவாகக் கேட்பரிவ ராரென்றே-வசமாகப்
பாவிகடன் பாவமதைப் பாழ்படுத்திப் போட்டவர்த
ஞவிக்குறுந் துணையா மன்பரென்றே-தூவற்
சிபுரியீல் சொல்லுமதாற் சேணில்வந்த வானேர்
கவல்வார்ஜிபு ரியீலுடன் காவலா-யிவரையல்லா
மிக்கநபி யாகவர விட்டானே வென்னவிண்ணே[தே
ரொக்குமொக்கு மென்றதற்பி னுள்ளன்பா-யககணத்
மேலாஞ் சலாமுரைத்து மெய்குழைந்து வந்தெமக்கு
வாலாத்தி யேந்திஞ ரன்று. (205)

வெண்பா

இருபத்து ஞலா மேணிப் படிக்கே
மருமொய்த்த பூம்பாதம் வைத்தார்-பெருக
பறக்கத்தா நன்னபிமுன் வானின் மலக்கு
யிறக்குத்தா யீல்வந் தாரே. (206)



கலிவிருத்தம்

முடிபொ றுத்தவர் முன்வான கத்துளோர்
வடிவி ருக்கும் வலதுகை நீண்டவர்
கடிபெருத்தவர் கைவிரல் ரண்டிடைப்
படிவர் வான ரெழுபதி ஞயிரம். (207)

இருவி ரற்கிடை யெய்து மலக்குகண்
முருக விழ்ந்திடு முன்கைப் பணிமுடி
மருவு மிக்குள வானர் சிறகெலாம்
பரிய முத்துப் பதித்த சிறகினேர். (208)

அந்த வான ரனைவரும் வந்தென்முன்
புந்தி யாரச் சலாமும் புகன்றவர்
வந்து வந்தெதிர் கொண்டபின் மாற்படி
சிந்தை கொண்டிரு பத்தைந்திற் சென்றனர். (209)

இருபத் தைந்தெனு மேணிப் படிதனிற்
றருமச் செங்கரர் செல்லச்சம் காயிலாம்
பெரும லக்கின் பிறகே யிறங்கியே
வரும லக்கு மெழுபதி லக்கமாம். (210)

உறைந்த வானர் தசுபீகு மோதவே
சிறந்த வாய்முத்து மாணிக்கஞ் சிந்திடு
மறங்கள் சேர்நபி கண்டஜ பென்னவே
திறந்து கேட்பர் ஜிபுரியி றன்னுடன். (211)

புகழு முத்தும் புதுமணி சிந்திய
திகழும் வானரைச் செப்பீ ரெமக்கென
நிகழு நன்னபிக் கேசொல்வர் நீள்விணேர்
மகிழும் பேரிசு ருயில் மலக்கிவர். (212)

அந்த வானவ ரங்ஙன் சலாஞ்சொல்லி
யெந்தன் முன்னினின் ருலாத்தி யேந்திஞர்
சந்த மேவிரு பத்தா றெனும்படி
விந்தை மேவு பதஞ்செல விண்ணவர். (213)

கரத்தின் மீதொளி கரன்றிடும் வாள்பிடித்
துரத்தல் லாவை யுறப்புகழ்ந் தேத்தியே
வரத்தி னேடு ஜமாயில் மலக்குநே
ருரத்த நந்நபி முன்வந் துதித்தனர் (214)

பஃறொடை வெண்பா

உதித்தமலக் கின்பிறகே யொக்கவந்தார் திக்கின்
மதித்தபுக ழாற்சல வாத்தோதிக்-கதித்த
மலக்குடனே பத்திலக்கம் வானோ ரொவ்வோர்
மலக்குக் கிருசிறகு வாய்த்ததே—பிலத்தசிற
கொன்றெழு வாஞென்று வுயர்படு வான்மட்டுந்
துன்றியமுத் துப்பதித்துத் தோன்றுமே-வென்றிசெறி
யொவ்வொரு முத்தைஞ்ஞா றுளவருசத் தூரவழி
செவ்வியொளி வீசுந் திக்கெல்லா-மெவ்வுயிர்க்கு
மேலா நபிக்கிவர்கண் மேவிச் சலாமுரைத்து
வாலாத்தி யேந்தினு ரன்று (215)

பாழா மபுஜகுறன் பல்லுடைத்த தாளிருபத்
தேழாம் படிமிதித்தங் கேறவே-தாழாப்
பறையிரண் டாமலக்குப் பஞ்சா யிலுக்குச்
சிறகிரண்டி லோர்சிறகிற் சேர்ந்து—நிறைதூவற்
றொண்ணூறு டாயிரமாஞ் சொல்லுமவ்வோர்
தூவலுக்குத்
தொண்ணூறு டாயிரமாந் தோற்றுநிறத்-
தொண்ணூறு
டாயிரநா வுண்டா மருந்தூவ லுக்குவந்த
வாயிதழ் நாவாலே வகுத்தோனை-யோயாமற்
சேர்ந்துதசு பீகுரைத்துச் செப்பிச் சலாமெனக்கு
வேந்தி யாலாத்தி யெடுத்தார் (216)

நாலேழெ னும்படியி நல்லநயி ஞர்கமலக்
காலேற வீறுங் ககனினின்று-மேலான
மூமறுயா யீல்மலக்கு முன்னில்வந்தா ரம்மலக்கு
மாமழைக்கு நாயனுடன் மன்றுடித்-தாமதியா
வடியவர்க் காயுவந்து பினுமாதி யுடனே
படியிலுள மூமீனவர் பக்கன்-முடியாக்
கிருபைசெய்யல் லாவெனவே கேட்டிரக்கு நல்லோ
ருறுதியுட னேயவரோ டொக்கச்-செறிமலக்குப்
பத்திலக்க மாயவர்கள் பார முகத்தொளிவு
கத்துமதி போலவிண்ணுங் காசினியும்-பத்தி
யொளிவிளங்கு மம்மலக்கோ ரொக்கச் சலாஞ்சொல்லி
வெளியினபி முன்பெதிர்த்தார் மேல் (217)



கலிவிருத்தம்

இருபத் தொன்ப தெனும்படி யேறவே
வருவர் முன்பில் பறுக்கியா யீல்மலக்
கருதி யெண்பதி ஞயிரம் வானவர்
பெருக வந்து பிரளய மானதே (218)

கழுத்தி லாபர ணக்கதிர் மின்னவே
முழுத்த சென்னி முடிதரித் தோர்செவ்வா
யழுத்து வாய்மைத் தசுபீ கவர்தம்மி
லெழுத்தி னோடு சலாமு மியம்பினர் (219)

இறங்கு மெண்பதி ஞயிரம் வானருந்
திறங்கொ ளுநபி சீர்பதம் போற்றியே
கறங்கச் சோபனங் கூறிக் கணமெலா
மறங்கள் சேர்நபிக் காலாத்தி யேந்தினர். (220)

இவர்கண் முன்னி பறுக்காயீ லென்பவர்
நவம ணிச்சிறை நற்சிபு ரீலுடன்
கவல்வ ரிந்தக் கதிர்முக ராரெனப்
புவன மெட்டும் புகழ்ஜிபு ரீல்சொல்வார். (221)

மன்னு கின்ற வரிசை நபிகளின்
முன்னின் முத்திரை பெற்ற முகம்மத
ரென்ன விண்ணவர்க் கேந்த லியம்பவே
மன்ன ராமென வானவர் சொல்லுவார். (222)

யானு ரைத்த சலாமுக் கெதிர்மொழி
தானு ரைப்பது வோவிவர் தாமென
வானர் வள்ளன் மருங்கிற் சலாஞ்சொல
வீன மன்றிப் பிரத்தி யியம்பினர். (223)

பிந்த வானவர் பெருமாள்சொல் வார்வரு
மிந்த வான ரெவர்கேளும் வள்ளலே
சந்த மானும தும்மத்தோர் தங்களை
யெந்த நாளு முவப்போ ரிவரென்றார். (224)

அங்கு விட்டுய ராறைந் ததாம்படி
தங்க வேகவுத் தீயாயீ றன்னுடன்
மங்கு னின்று மொருசங்க வானவர்
திங்கள் போலொளி சேரு முகத்தினோர். (225)

இலங்கு திங்க ளெனுமிமை யோர்கடன்
புலன்கள் வீசப் புகழ்ந்தரு காகநின்
றலங்கன் மார்ப ரகுமதுக் கேசலாந்
துலங்க வோதித் துடர்ந்தெதிர் கொண்டனர். (226)

பஃறொடை வெண்பா

முப்பத்தோ ராம்படியின் முண்டகத்தாள்
[வைத்திடவே
தப்பற்றோ னேவுஞ்சறு சாயிலுடன்-மெய்ப்புற்று
நூற்றுயி ரம்வானோர் நோக்கின்முத் தாற்படைத்த
வீறுன தூக்குவிளக் கேந்திச்-சீறு
தவ்வவர்சலாஞ் சொல்லிநபிக் காலாத்தி யேந்திப்
பவ்வமென வந்தார்-பணிந்து. (227)

நண்ணூர் தொழும்பதத்தார் நல்லநபி யிறகு
லெண்ணூங் கெனும்படியி லேறவே-கண்ணும்
வறுக்காயில் வந்தார் வருங்காற்றை யேவச்
சறுக்காத முன்னியவர் தானு-மிறைக்கா
மலக்கவர்க்கு மேழுதலை வாய்த்ததே யொவ்வோர்
தலைக்கெண் பதுநாவு தானு-மலக்கு
விதமாக வொவ்வொருநா மீதிலிருப் போர்நாற்
பதினுயி ரம்வானோர் பாரதிரக்-கதிர்சேர்
முடிதரித்தோ ரம்மலக்கின் முத்தி னொளியி
னிடமதுமட் டாய்நின் றிலங்குமே-யடவுடனே
யம்மலக்கோர் வந்து வருகிற் சலாமுரைத்தங்
கெம்மருங்கே வந்தெதிர்த் தாரே. (228)

கலிவிருத்தம்

முப்பதொடு முப்படியின் முன்னிநபி செல்ல
வப்பொழுது சொற்கமுன்னி வானவர்க டன்னிற்
செப்புமவர் பேர்ஜெபு றுயிலவர் கூடப்
பொற்பதியி னின்றுசத பூவையர்கள் வந்தார். (229)

மங்கையர்க டங்களை முகம்மதி றசூல்கண்
டெங்குமுள வன்ஜிபுரி யீறன்முக னோக்கிச்
செங்குமுத மானதிரு வாய்மலர விண்ணோ
ரங்குவரு விண்ஜெபு றுயிலொடு சொல்வார். (230)



உங்கடலை வன்பொனி னுயர்ந்தபதி முன்னித்
துங்கறிலு வானியுடன் சொல்லியுகை யங்கேண்
மங்கையர்க டன்வடிவை வள்ளனபி கண்டே
தங்குபுவி மீதிலுமத் தோர்தமக் குரைக்க. (231)

அங்குகையம் வந்தபி னரம்பையரை வள்ளல்
செங்குவளை யன்னவிழி கொண்டுதெரி சித்தார்
மங்கையர்மு கங்கண்முன்னின் வானினிடை தோன்றிற்
றிங்களென மண்ணுலகு சேரவொளி வீசும். (232)

அந்தமட மங்கைய ரகும்மதி றசூல்பால்
வந்தவர்ச லாஞ்சொலியும் வாய்திறந்து சொல்வார்
சுந்தரமி குந்தவெங்கள் சொல்லரிய வாழ்வு
நந்தலிலை யாவிகொடு நாங்கண்மிக வாழ்வோம். (233)

எங்கள்கண வன்றனுகை யப்படி நடப்போ
மெங்களைம வுத்தடர்வ தில்லையொருக் காலு
மெங்களுண வுக்குடை தனக்கழித லுண்டோ
வெங்கடன் சலாத்தையு மும்மத்தவர்க் கியம்பும்.
(234)

பஃறொடை வெண்பா

என்ற வர்களெல்லா மியம்பி யடவடவே
மன்ற லிறசூல் முகம்மதுக்கு-வென்றியுட
னாலாத்தி யேந்தவே யங்குவிட்டு முப்பத்து
நாலாம் படிக்கே நடக்கவே-மேலாகக்
கூக்குசா யீலெனவே கூறுமலக் குத்தேசி
வாக்கான வெம்பரிமேல் வந்தனரா-நோக்குடனே
பத்திலக்கம் வானவர்கள் பாங்கில்வந்து
[நின்றெமக்குத்
தத்திதத்தி யாகச் சலாமுரைத்தே-சித்தமகிழ்ந்
தாலாத்தி யேந்தவே யாறைந்தோ டைந்துபடி
மேலாகச் சென்றார்-விரைந்து. (235)

கலித்துறை

பொன்பதி முன்னிற் றிலுவானி யாயீல் புகழ்மலக்கின்
பின்வரு வார்திரை கட்குமுன் னுன பெருமலக்கோர்
மின்வரு பூணணிந் தேபத் திலக்கம்விண்
[ணோர்களொக்க
வொன்ப தோடைந்து தினமதி போன்முக முள்ளவரே
(236)

பெருமுடி பூண்டு பசுந்துகில் சாத்திப் பிறுதவுசின்
மருமலர் மேனி தனில்வீசு மொவ்வொரு வானர் தலைப்
பொருண்முடி நீள மறுபதென் றூர்முழம்
[பொன்முடிமேற்
றிருமணி முத்துப் பதிணு லுலகைத் திறைகொள்ளுமே.
(237)

கலிச்சந்த விருத்தம்

இதுகண்டுயர் ஜிபுரீலுட னிறசூல்முகம் மதுதான்
மதியொன்றிய விமையோர்திரு வடிவுக்கிணை
[யெவரென்
றெதிர்நின்றிவை சொலவேயிமை யவர்தன்றிரு
[விறையோர்
முதிரும்புகழ் நபிதம்முடன் மொழிவார்பனி
[யொளிவார். (238)

நபியேயும துமத்தவர் நல்லமறைச் செயலுஞ்
செவிதாக வறிந்தேயமல் தான்செய்தவர் சொர்க்கப்
புவிமீதிடை சென்றுலொரு பொருளாணைவிண் ணோரிற்
செவிதாமழ கவரேயெனச் சித்தங்களி கொண்டார்.
(239)

சித்தங்களி கொளவேஜிபு ரீலேதுரை செய்வார்
சத்தஞ்செயு மறுமைப்பதி தனிலும்பதி நாயன்
சுத்தங்கொளு முமதுள்ளமிற் றேன்றும்படி தருவா
னத்தந்தரு நபியேயென வதின்மெத்த மகிழ்ந்தார்.
(240)

வெண்பா

அப்படிமேற் சென்றபொழு தமரர்களு மென்னருகி
லிப்படிவந் தாலாத்தி யேந்தவே-முப்பதோ
டாறும் படிமிதித்தா ரண்டர்தெள ருயிலங்கே
வீருக வந்தார் விரைந்து. (241)

பஃறொடைவெண்பா

பத்திலக்கம் வானவர்கள் பக்கலில்வந் தார்குவிந்த
வத்தனைபேர் மேனியெல்லா மாபரணந்—தத்தி
யொளிவீசு மாபரண மொவ்வொன்று தன்னில்
வெளிவீசு நாவுபல மேவித்-தெள்வேறு
நாவொன்றுக் கோர்மலக்கு நண்ணியே யம்மலக்கோ



ரேவுதசு பீகுந்தகு லீலுமாய்-மேவி
யெமக்குச் சலாஞ்சொல்லி யெதிர்கொளவே
[வானோர்
தமக்குமன்னு யிம்மலக்கைச் சாற்றீ ரெமக்கெனலாய்த்
தம்பமிபு ருகீநபி தம்முன்னே நிற்குகின்ற
வும்பரென்றார் வானவர்கோ னுற்று. (242)

கலிச்சந்தவிருத்தம்

முப்பதோ டேழு படிக்குண் மிதிக்க
முனிற்ககன் மன்சாயீ
லப்படி மீது வுவந்து விறங்கின
ரங்கவர் கூடவரு
மொப்புள வானவர் பத்துநா றுயிர
மொவ்வொரு பேர்பிறகே
செப்புகி லோபதி னுயிரம் வானவர்
சேரவி றங்கினரே. (243)

வந்து வளைந்த மலக்குகள் வள்ளன்
முகம்மது மேன்மொழியுஞ்
சந்த மிகுஞ்சல வாத்தினை யெம்மிறை
தம்முனில் வைப்பவரென்
றந்தரர் தம்மர சன்சொல வெங்க
ளகும்மது நன்னபிதா
மிந்தம லக்குகள் கண்டுலை யாதிவ
ரேதென வோதுவராம். (244)

ஏதென வேநபி கேட்கவி ணோரிறை
யேதுரை பேசுவரா
மாதவ மானபி யேயினி மேல்வரு
வானர்மி கப்பெரிதென்
றீதுமொ ழிந்தபின் வந்திடும் வான
ரெமக்கெதிர் கொண்டிடவே
பீதமி கும்படி முப்பதோ டெட்டிடை
பின்புத ரித்தனரே. (245)

ஆடக மான படிக்குளின் முத்து
மனேக மழுத்தியவாஞ்
சூடிய வொவ்வொரு முத்தினி டைக்கிடை
சொற்புகழ் வானவர்கள்

கூடிவி தத்தொடு வைம்பதி ஞயிரர்
    கூறிவி சைத்தகபீகு
நாடியெ ழுந்தரு ளும்படி நன்றென
    நன்னபி யைப்புகழ்வார். (246)

சோகன மானது கூறி யெதிர்ந்து
    துலங்கிய வானவரை
யேகனு வந்திடும் விண்ணவ ரேயிவ
    ராரென வேமொழிவார்
வாசன மேவிய வந்தர மீதின்
    மலக்குக டாமெனவே
நாகமெ னும்புயர் முப்பதோ டொன்பது
    நற்படி சென்றனரே. (247)

சென்றபின் வானவர் திக்குக ளிற்றெனி
    செய்துவெ திர்ந்துசொல்வார்
மன்றன் மிகுத்த முகம்மது வேநும்
    மனம்மயராது கொள்வீ
ரென்றவர் செப்பிட வேஜிபு ரீலொடு
    யேதுமு ழக்கமென
வென்றி யுமக்கு முகம்மது வேவெரு
    வாதையு மென்றனரே. (248)

வரிசையு மற்றொரு வர்க்களி யாமிகு
    வாழ்வு முமக்கிறையோன்
விரிவோ டளித்தனன் விண்ணவர் சிந்தை
    விழங்கு முகம்மதுவே
யரியவ னுக்குயர் நீருமு மத்தவ
    ரானவ ரும்முவந்தோர்
பெருகிய நீள்பதி னுலக கும்புகழ்
    பெற்ற முகம்மதுநீர். (249)

வல்லவ னுக்கு வழிப்படு கின்ற
    முகம்மது நீரெனவே
சொல்லிய வானவர் கோடெனு கேட்பர்
    துடர்ந்த மலக்குகளார்



நல்லம லக்குக ளானவர் தான்மிக
    நன்மை யுவந்தவரென்
றெல்லையில் விண்ணவர் சொல்ல மலக்குக
    ளியாவுமெ னைப்பணிந்தார். (250)

நேரிசைக் கலிப்பா

நாற்ப தாம்படி செல்லச் சமாயிலா
நல்ல வானரென் முன்வந்து சாலிகா
மார்க்கும் வள்ள னபியேயிங் கேவலா
லறமு நன்றி புவிவா னடங்கலும்
பார்க்க வேவொளி பெற்ற துமக்குள
பார மான வொளிவுகொ டேயென
வூக்க மாகப் புகழ்வ ரிவர்களா
ரோது மென்னச் சிபுறையி லோதுவார். (251)

நேர்வ ழிக்குத் தலைவ ரிவரென்றே
நிகழ்த்த வேபத்து நூறா யிரமலக்
கோர்கள் வந்து விறங்கின ரங்கவ
ரொக்க வந்த பெரும்வா னவரெல்லாம்
பார்கொள் வானம் படையுண்ட நாண்முதற்
பணிந்த சென்னி யெடாமல் வணங்கிய
பேர்கள் வந்தெமக் காலாத்தி யேந்தவே
பின்பு நாற்பத்தொன் றும்படி செல்லுவார். (252)

மண்ணை யெண்ணினு மண்கலை யெண்ணினு
மழையை யெண்ணினு மந்தயி ராப்பக
லெண்ணை யெண்ணினு நாழிகை யெண்ணினு
மிலங்கு நாற்பத்தொன் றும்படி தன்னிலே
விண்ணில் வானவர் ஸப்புஸப் பாகவே
மிகுத்தி றங்கிய தெண்ணத் துலையுமோ
நண்ணி வானவர் தசுபீ கொடுவர
நபியுல் லாஜிபு ரீலொடு கேட்பரே. (253)

கலிவிருத்தம்

வந்த வானவ ராரென வாய்திறந்
தந்த நேரஞ் சிபுரீ லறைந்தன
ரிந்த வானரை யேகன் படைத்தது
சிந்தை யாரப் பணிவிடை செய்யவே. (254)

தடங்கொள் வான்புவி தன்னைய மைக்குநாட்
டுடங்கி யிந்தச் சுரரொவ் வொருவரைத்
திடங்க ளாகத் திரட்டிக் கவுமவ
ரிடங்க ளன்றித் தலையு மெடுத்திலார் (255)

மாக மண்ணை யமைக்குமந் நாளினம்
பாகி னிற்பவர் பார்க்கி லின்ஞரின்ஞு
ராகு மென்றறி யாமனல் லாசையா
லேக னுக்குத் தகுபீ கியம்புவார். (256)

ஈறி லானிசு ருபீல் மலக்கவர்
சூற தூதுமட் டவர்சொற் றசுபீகு
மாறி டார்கண் மறுசூறு மூதிலோ
ஊறி லாதவ ரொக்க மரிப்பரே (257)

மூத றிந்தவர் மூன்ருவ துங்குழ
லூதி லொக்க வுயிர்போன வானவ
ராதி யேவல்கொண் டங்கே வுயிர்கொடு
நீதி யாக விளங்கிநிற் பார்களே (258)

இந்த வாய்மை ஜிபுரீ லியம்பவே
மந்த ரப்புய வள்ளன் முகம்மது
மெந்த னும்மத்து மிப்படி யோமரித்
துந்துங் காயத் துயிரும் பெறுவரோ. (259)

அனைத்து மிப்படித் தானல் லகுமதே
யெனச்சி றப்புட னெண்ணுக் கருவிண்ணோர்
கனைத்த சத்தக் கடல்புடை பேர்தல்போன்
மனத்தி லென்னை மகிழ்ந்தெதிர் கொண்டனர். (260)

பஃறொடை வெண்பா

வள்ளன் முகம்மதச வாக்களுடன் சொல்வர்படி
தெள்ளியநாற் பத்திரண்டிற் செல்லவே-
[யொள்ளிமைசேர்
ஜாமியா யில்மலக்குத் தாம்வந்தா ரம்மலக்கு
வாமமுடி பொறுத்தோர் மாமுடிமேற்-சேமத்
தழுத்துமுத்து மாமணிதா னம்புவியும் வானு
முழுக்கவொளி வீசிநிற்கு முட்ட-வழுத்துமணி
யொவ்வொன்றுக் குள்ளே யுயர்ந்ததுனி யாவடங்கு



மவ்வளவ தாமணிக்குண் டாம்பெருமை-செவ்வி
வெளிமலக் குள்ளதிரு மேனிபல வன்ன
வொளிவெறிக்க வேயெதிர்கொண் டுன்னித்-
[தெளிவுடனே
சான்றோர் நபிக்குச் சலாமுரைக்க நாற்பத்து
மூன்றும் படிமிதித்தார் மூன். (261)

முக்கியஞ்சேர் நாற்பத்து மூன்றும் படிமிதிக்கத்
திக்குகளி னின்றொளிவு சேரவந்து-மிக்க
விவரா ரிவராரென் றென்னவொளி கேட்கச்
சிபுரீ லொளிவுடனே சேர்ந்தே-நவில்வா
ரகுமதிற சூலிவர்தா மாகுமென்ற போது
திகுதிகென வந்தவொளி செப்புங்-ககனைப்
படைத்தோ னிவர்க்கு நபிப்பட்ட மதனைக்
கொடுத்தானே வென்னவிண்ணோர் கோமான்-
விடுத்துரைப்பா
ரொக்குநபிப் பட்டமிவர்க் குள்ளதென்ற போதுபல
திக்குகளில் வந்தவொளி சேரவே-மிக்கபுவி
யாதமுக்கு மிவ்வரிசை யன்பாய்க் கொடுத்ததெங்கள்
சோதியிறை துய்யோ னெனத்துதித்த-போது
ஜிபுரீயில் பின்னுந் திசையி லொளிவோடு
நபிதனையும் போற்றி நவில்வா-ரிவர்காணு
மெல்லாரும் போற்ற விலங்குநபி யிறசூ
லுல்லா வணக்கத் தொழுகுவோர்-நல்லாரி
னல்லோர் கலக்கமற்றோர் நாடுவோர் ஹக்கதனை
யெல்லா வகையாலு மேகனுக்கு-மெல்ல
வழிவந்த வள்ளன் முகம்மதென வானோ
ரெழில்கொண்டு சொன்ன ரிசைந்து (262)

கலித்துறை

சொன்னபி னற்பத்து நாலாம் படியிற் றுடர்ந்து
சென்ற
பின்னதி ரும்படி கேட்டே னமளி பெருந்தொனியா
லென்னுறுப் பொன்று முதவாமன் மாவி னிளந்தளிரி
னன்னது போல நடுங்கிவிண் ணோரை யணையு
மென்றேன் (263)

விண்ணோர் தலைவரெனை யணைத்தே சொல்வர்
விண்ணவரு
மண்ணோ ரும்போற்று முகம்மது வேநல மானதுட
னெண்ணு னதின்றிக் கிருபைசெய் வானிங் கிறையு
மக்கென்
றெண்ணுப் புகழ்ந்தபின் கன்சாயில் வானரங்
குற்றனரே. (264)

அங்கில் வருமலக் கோர்தலை நீள மறுசினிழற்
றங்கு மவர்கையிற் சங்கிலி யோர்தலை தாரகையை
மங்குலை வெற்பை மனிதரை வானரை மண்ணுலகைக்
கங்கையைத் தாங்கிய மீன்கழுத் தோர்தலை
கட்டியதே. (265)

பொற் பருஞ் சங்கிலி பூட்டிய மீன்றலைப் பூச்செவிளு
மற்பெரு மாமணி யால்வால் பசுந்த மரகதத்தால்
விற்பெரு கின்ற கழுத்தோர் சவடி விளங்கும்
பொன்னுற்
கற்பெரு மாணிக்க முத்து மதனிற் கதிர்விடுமே (266)

மாணிக்க முத்து மழுத்துஞ் சவடியில் வானர்கையி
லாணிப்பொற் சங்கிலி யோர்தலைப் பூட்டியதாகுமற்ற
நீணித்த வோர்தலை யைப்பிடித் தேயங்கு நிற்பவரோ
டேணிப் படிவரு வானோ ரிருபதி னாயிரரே. (267)

இருபதி னாயிரம் வானோரு முத்தங்கி யிட்டவர்கண்
மருவும வர்சிறைத் தூவல்கடான் பச்சை வன்னமதிற்
சுரிதருஞ் செம்பவளங் கோத்தொளிவு துலங்குஞ்
செம்மை
யுரிதரு மொவ்வொரு தூவலின் கீழொரு நாவு
முண்டே. (268)

தூவலின் கீழி னிதழ்வாய் செறித்துத் துளுத்தெழுந்த
நாவத சைத்துப் பலவித மாகவு நற்றசுபீ
காவலு டன்மொழிந் தெல்லோரும் வந்தெமை
[யாசரித்துத்
தேவர்க ணின்றபி னாற்பத்தைந் தாம்படி சென்றனரே
(269)



சென்றபி னின்னஞ் செலும்வழி தானெவ் வளவுசெப்பி
ரென்றவர் தன்னொடு நன்னபி கேட்க விமையவர்கோ
னின்று மொழிந்தனர் நீணபி யேயற்ப நேரமல்லோ
சென்றது வின்னஞ் செலும்வழி தூரங்கள் செப்பரிதே
(270)

செப்பரி தென்றபின் னேசில வானர் திகுதிகென
வப்படி தன்னரு காகவந் தார்க ளவர்களெனக்
கெப்படிச் சொல்வ திறைக்கே தெரிவ தெரிமுகத்தோ
ரொப்போ டணிதுகில் வான்புவி தன்னி லொளிவிடுமே
(271)

ஒளிவீசும் பச்சை யுடைபோற்ற வானவ ரொக்கவந்து
வெளிவீதி தன்னினபிக் கேசலாஞ் சொல்லி
[விண்ணவர்கோ
னளிவீசு மாலை நபியே சலாத்தி னரும்பிரத்தி
தெளிவீர மாய்ச்சொலு மென்றார் பிரத்தியுஞ்
[செப்பினனே (272)

அவ்வான ரொக்க நபியே யுமையின் றரியதுய்யோன்
செவ்வாய் வரிசையில் வைத்தான் றருவது
[சேரத்தந்தா
னிவ்வாறு சொல்லச் சபுறயி லேயிவ ராரெனவே
குவ்வான துக்குண் மழைகோ டிறங்கிய கூட்டமிதே.
(273)

பஃறொடை வெண்பா

மாரிவரி சித்தவிண்ணோர் வந்து சலாஞ்சொலவே
வேரிவரு சித்தபுய வேதாம்ப-ரேரிவரு
நாற்பத்தா றும்படியி னண்ணவே சம்சாயீற்
சீர்ப்பெற் றொளிரிடுவாட் செங்கையிற்கொண்-
[டார்ப்பதத்தை
யார்க்குஞ் செயுமிறையை யங்கே யவரொருக்கா
லேர்க்கத்தசு பீகுசொல்லி யேத்தவே-யூக்கததான்
முன்வான கத்திலும்பர் முத்திகொடு வல்லாவை
யென்வாறாய்ப் புகழ்ந்தங் கேத்துவார்-மன்னவா
யெம்மை யுடையவனே யென்றுமழி வற்றவனே
தும்மை யுடையதொரு சொற்பொருளே-செம்மையுட
னெல்லாத்தை யும்படைத்தி ராசதங்கள் செய்பவனே
சொல்லா லரியவனே துஞ்சானே-வல்லா

யருப்ப முடனே யுருப்பமா ருதவனே
பெருப்ப முளவானம் பெரும்பூமி-விரிப்பாம்
பதினு லுலகினிடைப் பட்டவை யாவுக்கும்
விதமா யிராசதஞ்செய் வேந்தே—பதமா

மரிய பெரியவனே யன்பா யடியார்
விரிய பிழைபொறுக்கு மெய்ப்பொருளென்-றறுசை
யுடையவனை மூன்வானி லும்பர் பலபோற்றப்
படியில்வரு சம்காயீல் பண்பா—யடிபணிந்து
மூண்டுசலாஞ் சொன்னதற்பின் முன்னபிநாற்
பத்தேழா
நீண்டபடி சென்றார்-நினைந்து (274)

கலிவிருத்தம்

நலமாகிய படிசென்றிட நவமானமன் சாயீல்
வலபாகினில் வருவார்பதி னாறாயிரம் வானோர்
தலமேழையும் விலைகொள்ளொளி சட்டைப்பணி
பூண்டே
கலைமேனி புனைந்தோரொளி கதிர்கொண்முடி
வைத்தோர் (275)

மதியொத்தொளிர் முடிபெற்றவர் மறையாயத்துக்
[குறுசா
லதிரப்படி வந்தாதியை யன்பாகப் புகழ்ந்தே
யெதிர்கொண்டு சலாமுஞ்சொலி யேசோபனமொழிய
முதிரும்புகழ் ஜிபுரீலொடு மூப்பாநபி கேட்பார் (276)

மறையாயத்துக் குறுசோதிய வானோரெவ ரெனவே
யிறையோன்ஜிபு ரீலோதுவ ரெழிலாயுபு விவர்பேர்
பொறையான்மிகு மிறையோனுயர் புகழு
மறுசொளிவா
னறையாருமிவ் வானோர்தமை நன்றாகவ மைத்தான்
(277)

என்றேயவர் சொலநாற்பதோ டெட்டாம்படி மீதே
மன்றார்முகம் மதுசென்றபின் மலக்காமறு யாயீல்
சென்றாரிவர் மழைகாற்றிவை சேரக்கொடு வருவோர்
குன்றாதவ ருடனேசில குளிர்வானவர் வந்தார் (278)



பனியாலவர் முகமேகலை பருதித்திரன் புனலா
னனியாநுதல் பவளங்கொடு நற்காற்றர ளத்தாற்
றுனியாவுள கோணத்தினுந் தொடர்வானுள
கோணிற்
நனியாகிய விறையோன்றனைத் தசுபீகுசெய் குவரே
(279)

இவ்வானவ ரெதிர்கொண்டபி னேழ்முயர் படியிற்
றவ்வாமொழி நபிசென்றபின் றானேவரு மணமொன்
றவ்வாசம தானன்னபி யல்கம்துலில் லாகி
செவ்வாய்கொடு மொழியச்சிபு ரீலேமணஞ் செப்பிர்
(280)

நறையேதென நபிகேட்டபி னல்வானவர் சொல்வார்
பிறையாநுதன் மடமாதர்கள் பெருகும்பிறு தவுசி
னுறைவாசலி லொருவாசலை யுமக்காயிறை திறக்க
மறையோர்புகழ் மணிவாசலில் வருமாமண மென்றார்.
(281)

உறுநீள்பிறு தெளசானது வும்மைக்கொடு வரிசை
பெறுநீர்பிறு தெளசைக்கொடு பெற்றீர்வரி
[சையெனச்
சிறைநீளிய ஜிபுரீல்மொழி செப்பப்புள கிதமா
யறநீளிய படியன்பதி லானூர்மொழி தேனூர். (282)

மால்சென்றிடு நபிமுன்பினில் வானின்றுயர் சம்தா
யீல்வந்தனர் நாலாம்வெளி யிமையோர்களின் முன்னி
மேல்வந்தசம் தாயீலவர் வேந்தாஞ்சிபு ரீலே
பால்நின்றும துடனேவரு பவரார்சொலு மென்றார்.
(283)

பாவப்பெரு மிருளுக்கொரு பருதிக்கதிர் போல்வா
ராவிக்குறு துணையாரகு மதுநன்னபி யிவரென்
றேவற்சிபு ரீல்சொன்னபி னிமையோர்சொல்வ
[ரிவரை
மேவிப்பெரு நபியாயிறை விடுத்தானேசொலு மன்னு
(284)

அரியோன்விடு மிறசூலிவ ராமென்றனர் ஜிபுரீல்
விரிவாகிய நாலாம்வெளி விண்ணோர்பதி சொலுவா
ருரிதாகிய தலமீதிடை யுயரும்மிவ ருக்காய்த்
துருசாகிய வரிசைப்பலன் சொல்லத்துலை யாதே.
(285)

பின்னுஞ்சிபு ரீறன்னொடு பெரும்வானவர் மொழிவார்
மன்னுஞ்சிபு ரீலேயுமை வல்லோனிவ டத்தின்
மின்னும்வரி சையில்வைத்தனன் மிக்காயிவர் தமையிங்
குன்னும்வரி சையில்வைத்தன னொருவன்புக
[ழுடையோன். (286)

ஒருவன்புக ழுடையோனெமை யுடையோனுயர்
[துய்யோ
னொருவன்பழு தற்றோனொரு நினைவுக்கு ளடங்கா
னருமந்தவ னிறையோன்றனக் கானோரை யுயர்த்தித்
தருவன்வரி சைகளென்றிறை தன்னைத்துதி செய்தே.
(287)

மின்பெற்றிடு நாலாம்வெளி விண்ணோரடி பணிய
வைம்பத்தொரு படிமீதினி லானரபு துல்லா
மன்பெற்றிடு மகனாகிய வள்ளன் முகம்மதுபால்
பொன்பெற்றிடு படியிற்சில புகழ்வானவர் வந்தார்.
(288)

வருவானவ ரறுசின்னொளி வதனாற்படை யுண்டோர்
பருமாமர கதமாமணி பசிமேனிய ரவரோ
டொருமாமணி யதுவுநறை யுறவீசிய பொழுதே
விரிமாமணி வேதாம்பரும் விண்ணோரெவ ரென்றார்.
(289)

அண்டர்க்கிறை மொழிவாரிறை யருள்சேர்முகம்
[மதுவே
கொண்டற்குடை நபியேயிறை குதறத்தொளி
[வானோர்
தண்டற்செயு மடியார்கள்செய் தௌபாவதை நிதமுந்
தண்டிக்கொடு போம்வானவர் தாமாமிவ ரென்றார்.
(290)



அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

சிதறத்துல் முந்த காவாஞ் செம்பொனா மிலந்தை
[தன்னிற்
குதறத்தாற் றென்றல் வீசுங் குலவுமத் தென்ற றன்னை
யெதிரற்ற துய்யோ னிங்கே யேவினா னுமக்கு வீச
வதிரிட்ட தென்றல் வீசு மழகிய மணமீ தென்றார்.
(291)

வெண்பா

மின்பெற்ற வானர் விரைவிலெதிர் கொண்டதற்பி
னன்பத்திரு படியி லாகவே—யின்பச்
சறுகாயீ லம்மலக்குச் சாயறுயா யீலோடே
வறுயாயீ லென்பவரும் வந்தார். (292)

ஒவ்வொருவர் தன்பிறகே யொக்கவரும் வானவர்கள்
பவ்வமெனப் பத்துநூ றாயிரவர்—குவ்வைத்
தலைனோக்கி மேற்சிறகு தான்வெளியை நோக்கிக்
கலைநோக்கு நன்னபியைக் கண்டு. (293)

கையாரக் கட்டிக் கவலுவா ரேதமக்குத்
துய்யோன் றரும்வரிசை சொல்வதென்னோ
[மெய்யாய்விண்
ணோரார்க்கு மன்னா வுமக்குமும்மோ டுற்றவர்க்கு
மாராய மென்றெதிர்ந்தார் வந்து. (294)

அன்பத்து மூன்றுபடிக் காலநபி செலவே
மின்பெற்ற வேழாம் வெளிமலக்கோ—ரன்பு
தருந்தலைவ னாகுமசு சாயாயீ லம்மலக்குப்
பரிந்திலங்க வந்தார் பணிந்து. (295)

சீரா மலக்குடனே சேர்ந்துவரு வார்முப்பத்
தீரா யிரருமங்கே யெய்தினா—ரோரோர்
மலக்கோர் தலைவைத்த மாமுடியி னீளமது
சொலக்கேண்மின் யார்களே சூழ்ந்து. (296)

வானர் முடிநீள மன்ஜிபுரீல் கையதினா
லான முழமறுப தாகுமே—மீனமின்றி
முடியொன்றி னானூறு முத்தழுத்தி வைத்தான்
மிடியின்றி வாழுமொரு வேந்து. (297)

நாநூறு முத்திலொன்று நற்புவியை மூடிமிச்சந்
தானூறு வாட்டைவழி தானுண்டே—தேனூறும்
வாக்கா முகம்மதுதான் மாபுதுமை யீதெனவே
தாக்காஞ்சிபு ரீலுடனே தான். (298)

மன்னர் ஜபுறயீ லேவல்லோன் வரவிடுத்த
தென்ன புதுமை யீதென்றே—சொன்னதற்பின்
மன்றூர் முகம்மதுவே வானோர் பெருமையின்ன
நன்றாகக் கண்டதிலை நாம். (299)

இரவிலொரு நாழிகையி லென்காண்பீ ரென்று
சுரர்கள்பதி யெம்முடனே சொல்ல—வருமவர்கண்
மேலாஞ் சலாமுரைத்து மெய்க்கவே யைம்பத்து
நாலாம் படிமிதித்தோம் நாம். (300)

கலிச்சந்த விருத்தம்

அன்பத்து நாலுபடிசென்ற போது
யடர்திக்கி னின்றுவொளிவென்
முன்புற் றிறங்கு மதுநிற்க வானின்
முகின்மே லிடித்தவிடிபோன்
மின்பெற்ற வானர் புகுதுங்க ளென்று
மிகுசத்த மொன்றதிரவே
யென்புத்தி நெஞ்ச மிடிகண்ட மஞ்ஞை
யெனவே பயந்துவிடலால். (301)

பயர்கின்ற தேது நபியே யிவ்வானர்
படியும்மத் தோரையுமையு
மயர்வன்றி நித்தஞ் சினேகித் திருக்கு
மவர்காணு மென்னவிமையோ
ருயர்கின்ற மன்ன ருரைசெய்த போது
வுறுமாரி தன்னையெழநீள்
பயிர்கண்ட தென்ன நயினூர் மகிழ்ந்து
படியன்ப தைந்திலுறுவார். (302)

படியன்ப தைந்தி னபிசென்ற போது
பலவான ரந்தரமதி
லடறங்கு பூவை வெளியைப் படைக்கு
மந்நாட்டு டங்கியவர்கள்



சடமொன்றி மொய்த்த சிறகுக்குண் மிக்க
தலையைப் புதைத்துவெருவி
முடிவன்றி யுள்ள விறையைப் புகழ்ந்து
முழுதுந் தசுபீகுசெய்வார். (303)

அவர்தங்கண் மேனி யவரெண்ண லன்றி
யயனின்ற வானர்தலையுங்
சுவர்கின்ற கண்கள் கொடுகாண லன்றிக்
கண்ணீர்க ளோடுமருவி
யெவருந் தெரிந்து வறியாம லஞ்சி
யிறையோன் றனக்குருகியே
தவிர்கின் றதன்றி மிகவும் பணிந்து
தானே சுசூதுசெய்வார். (304)

ஆதார மின்றி யாகாச மீதி
லடர்கின்ற வானவர்கடான்
மாதா பிதாவு மிலையான துய்ய
வல்லோன் மலக்குகளிலே
கோதான தற்ற அமலே மிகுத்த
குவிவான ராகுமவர்தா
னீதாக நின்று தொழுவார் மரித்து
விளகுங் கியாமமளவும். (305)

இறையேவல் கொண்டு இசுறுபீல் சூறூ
திரண்டூதக் கேட்டபொழுதே
சிறையான துக்குண் மூழ்கின்ற சென்னி
திகிலென்றெ டுத்துமொழிவார்
பொறையா லுயர்ந்த விறையே இயாங்கள்
புனலாறு கண்சொரியவே
முறையால் வணங்கு மதுவிந்த நாளின்
முன்னிற்க வேணுமெனவே. (306)

முன்னிற்க வேணு மெனவே வணங்கு
முதுவானர் பேருசொலுமென்
றுன்னித்து ரைத்த நயினூர் தமக்கு
முயர்வானர் கோனுரைசெய்வார்

சென்னிக்குண் மொய்த்த சிறைவைத்த வானர்
திருநாமம் லாயீனெனவே
பின்னிற் பெருத்த கடலொன்று கண்டு
பெருவாரி யைக்குறுகுவார். (307)

பூமிக்கு ளுள்ள கடலிற் றரித்த
போர்நண்டு வண்டருன்மீன்
ருமப் பெருத்த வளையிப்பி நத்தை
தசையட்டை மட்டிகையினோ
டாமைக் கணங்கள் புழுமற்று முப்பு
மந்தப் பெருங்கடலினுட்
சேமித் திருக்கு மழையூடு வீழுந்
தேரைக்கு மக்கடலதே. (308)

அந்தக் கடற்கு ளொருவானர் நிற்ப
ரவர்காற் பரண்டையதின்கீ
ழிந்தப் பெருத்த புவியே ழடங்கு
மிரைநீர்ப் பரண்டையளவா
முந்திப் பெருத்த தலைதான் விதித்த
வுடையோ னுயர்ந்தவறுசைச்
சந்தித் திருக்கு மதுகண்டு வள்ள
ருனேமி கப்புதுமையாய். (309)

ககனோர் தமக்கு வரசே யெதிர்த்த
கடல்போன் மிகப்புதுமையைப்
பகர்நே ருதித்த திலையென்ற போது
பனிமேனி வானர்மொழிவார்
நகமீது மிக்க புனலே யழைத்த
நபியே யெதிர்த்தகடருன்
செகமேல் வெளிக்கு ளிடையில்லை யாகிற்
றினமிக் கெழுந்தபகலோன். (310)

எழுவானி னின்று படுவானி லேக
வெழுபூடு மூர்வைபறவைக்
குழுவா மனித்த ரிவையொக்க வெந்து
குகையே வெடித்தபுகையா
முழுவாரி தன்னை யிறையந் தரத்தின்
முன்னுள் விரித்துலவைமே
னழுவாதெ டுத்து மறைவிட்ட தேது
நரருக்கு நன்றிசெயவே. (311)

# 7. எழுவான் சிறப்பு

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வானோர்கண் மன்னனிவை சொன்ன பின்னரி
மறைவாரி யூடுருவவே
யானேம தற்கு ளிருகால் கரங்க
ளணிமேனி ரோமநனையா
மீனோடு வாரி தனைவிட் டடுத்த
விரிமுன்னின் வானமருகே
போனோமவ் வானின் மணிவாசன் மீது
புதுமைக் குழாமிகுதியே. (312)

அவ்வான மீது பலவெள்ளி கண்ட
ததினோர் பெருத்தகயருன்
செவ்வான வீதி யிருபத்தோ டேழு
திகழ்காத முள்ளதெனவே
தெளவா மொழிந்த படியே நடந்த
தருமாள யார்களுடனே
குவ்வான துக்கு ணெறியே நடத்து
கோமான் முகம்மதுசொன்னர். (313)

முன்வானின் வாச னிலைரண்டு செம்பொன்
முழுதோர் நிலைக்கொருநிலை
மன்பான வள்ள னபிசொல்வர் நூறு
வருடப் பெரும்பயணமென்
றின்பான வாதி திருநாம மான
வினிமைப் பெருத்தகலிமா
வன்பா யெழுத்து மெழுதித் துலங்கு
மவ்வாசன் மேற்படியிலே. (314)

கலித்தாழிசைவிருத்தம்

முழுநிலை வாச றனக்கொரு வானவர்
முன்னிலை வானவரோ
டெழுபதி னுயிரம் வானர் நெருப்பு
வெரிந்த பெருந்தடிகொண்

டழகிய வாசலி னிற்பர்ப சாசுக
    ளாசினி வாசல்களி
லொழுகுள வானர் வெளிக்குள் வரும்பொழு
    துண்டை நெருப்பெறிவார். (315)

அக்கத வானதை வானவர் தட்ட
    வருங்கடை காவல் செய்வோ
ரிக்கடை வாசல் விடச்சொலு வோரெவ
    ரென்றபி னேஜிபுரீ
லக்கடை காவல்செய் வோரொடு சொல்வ
    ரகும்மது நாமுமென
மக்கமில் வாழு முகம்மது வோவென
    வாசறி றந்தனரே. (316)

கடைவிட வேநபி வானவர் கோனொடு
    ககனகர் மீதுசெல்வா
ரடன்முனின் வானமு மம்புவி தானுமை
    ஞூறு பெரும்வருட
நடையுள தாகுமவ் வானி லடைப்ப
    நவின்றிடி லவ்வளவா
மிடமுனின் வான மதற்கிடு பேரும்
    றபீகென வேமொழிவார். (317)

அக்கக னத்தை யமைத்தன ஞதி
    யகிற்புகை யாலதனுண்
மக்கமு கம்மது சென்றிட வேமுனின்
    வானினி டங்களெலாந்
திக்குக டோறு மிகுந்து கணங்க
    டிரண்டொரு வூசிதனை
வைக்கவி டங்கள தின்றி நெருங்கி
    வணங்குவர் வானவரே. (318)

எண்கள தன்றி வணங்கி வான
    ரிவர்க்கு நடுப்படவே
வண்பயில் பொன்குரி சானதி லேயொரு
    வானர் மிகப்பெரிதா



யொண்கொடி ருப்பரவ் வானவர் தம்மை
    யுயர்ந்திடு பூமியுடன்
விண்பதி ஞலுல கத்தையு மாதி
    விழுங்கென வேவுகிலோ. (319)

இலகிய வானவர் வாயதி னுக்கிவை
    யேதென வேயெளிதா
மலையுறு பூவின் வெளிக்குளோர் மோதிரம்
    வந்துவி ழுந்தனபோல்
பலன்மிகு வோர்வல பாகிடை யேயெழு
    பதுமணி மாளிகைதா
னலமிகு பொன்கொடு வெழுபது மாளிகை
    நற்புக ராலிடபால். (32.)

வானவர் முன்னெழு பதுமணி மாளிகை
    மரகத மணிகொடுபின்
ருனெழு பதுமணி மாளிகை யிலகிய
    தண்மணி யானடுவே
யானவர் பெயர்சொலு மெனநபி கேட்டபி
    னமரர்கள் கோன்மொழிவார்
கானுல வியவிமை யோர்முனின் வானுள
    கருகுலங் காப்பவரே. (321)

காவல்செய் வோரை யடுத்து சலாமொழி
    கட்டுரை யும்மெனவே
தூவன்மி குஞ்சிபு ரீல்சொல்வ தானபி
    சொற்கொடு மிக்கசலாம்
பாவுமி தற்கெதி ருற்ற பிரத்தி
    பகர்ந்து நலங்களெலா
மேவுமு மக்குமு மத்தவ ருக்கு
    மிகப்பெரி தென்றனரே. (322)

வெண்பா

பொற்கிரிபோ லாசனத்திற் போந்திருக்கும் [வானருடன்
வற்கநயி ஞர்முகம் மதுவிறகு—னற்குணத்தாற்
சீர்குலாந் தோளாரநாற் றிக்கிலுள்ள மாளிகைக
ளார்க்கெலா மென்று ரமர்ந்து. (323)

மணங்கொள் மசாகீன் மகளா சியாவுக்
கிணங்கு மணிமாட மெழுபதாங்-கணங்கொண்முகிற்
செங்கை குலைவீது செல்விகதி ஜாதமக்குச்
சங்கைபுக ழும்மெழு பதாம். (324)

மருக்கொள்ளு மிம்ருன் மகள்மறிய முக்கு
மிருக்குமணி மாட மெழுபதாந்-திருக்குலவு
நும்முடைய செவ்வி நுவல்பாத் திமாதமக்கு
மம்முடைய வில்லெழு பதாம். (325)

அங்குநின்று வித்துனியா வாலமதை யாலநபி
செங்குவளைக் கண்ணுற் றெரிசித்தா-ரங்கே
எருக்கமாய் கிந்திலொன்று தோன்றுவது போல
இருக்குமா மிப்பூ விடம். (326)

கொத்தலரு மாலநபி கோவா னவருடனே
யத்தலம்விட் டப்புறத்தி லாகவே-சுத்தக்
குருப்போ தனையபச்சைக் குப்பாய மேலிட்
டிருப்போரைக் கண்டா ரெதிர்த்து. (327)

மங்குன் மதிவாகர் வலமுமிட மும்வாசற்
சங்கை வலவாசற் றனைநோக்கி-லங்கே
பெருகநகைப் பாருவந்து பின்னிட வாசற்கண்
டுருகிமிகத் தானழுவா ரூற்று. (328)

பழகாப் புதிய பசுங்குப் பாயந்தொட்
டழகா யிருப்பரிவ ராரென்றே-நிழல்காணு
வேதநபி கேட்டதற்கு விண்ணவர்க டன்வேந்
தாதமிவ ரென்ரு ரமர்ந்து. (329)

மடக்குத்தாழிசைவிருத்தம்

எம்முடைய தாதைதன் வலப்புறம் விழித்துள
மெழப்பிறிய முற்றிடுவதேன்
தம்மிடது பாலினில் விழித்தழுவ தேதிவை
தனைப்புகல்விண் ணோர்களரசே
நம்முடைய நாயனுயர் பொற்பதியில் வாசலவர்
நல்வல துபாலிட துபால்
வெம்முடைய தீநரக வாசலுள தாகுமென
விண்ணவர் நபிக்குரை செய்தார் (330)



வலத்திடை சுவர்க்கமது வாசலதி லேதமது
மக்களிலொ ருத்தர்புகுதி
னலத்தொடு நகைப்பரிட பானரக வாசலிடை
நண்ணிய மகற்குரு கியே
மலர்க்கணீ ருகுப்பரென வானவர் மொழிந்தபின்
முகம்மதுமவ் வாதமருகாய்
நிலைப்படு சலாமதை யுரைத்திட வதற்கெதிர்
நிகழ்த்தினர் பிரத்தியவரே. (331)

எதிர்த்தவர் புரத்தியை யுரைத்திளகி நற்புக
ழெமக்குரிய மிக்க மகனென்
றுதித்தெழு மதிக்குல முகக்கணி னடுப்பட
வுவந்தெனை முகந்துமொழிவார்
விதித்தவ னுவப்புள நலத்தமக னேமிகுதி
வீறுகளு மக்குளதுவாங்
கதித்தபல செய்தியறி வித்துறு நவப்புதுமை
காணவு மழைத்தனனல்லா. (332)

ஆதமக வாகிய முகம்மதை மிகப்புகழு
மப்பொழு தெழிற்சிபுரியில்
வேதநபி யேயிவர்க ளைக்கடிது நின்றுதொழு
விக்கவென ரண்டிறக்ஆத்
தாதரவு டன்றொழுத பின்னரெமை
அம்பர மிரண்டினருகாய் [யண்டர்கொடு
வீதிசெறி கின்றகத வைக்கைகொடு தட்டவிரு
விண்கடை திறப்பரிமையோர். (333)

அக்ககனின் முன்னின்வெளி யானதி னடுப்பட
வஞ்ஞூறுவரு டத்தின்வழியா
மிக்கவிரு வானுள வடைப்பமது வும்புகலின்
மேற்படிய தாகுமெனவே
மக்கநபி தாமுமுயர் வானவர்கள் கோனுமிரும்
பாலமைத்த வானமதனுட்
புக்குவரவ் வானுடைய பேரது கைதூமெனப்
புகன்றனர் மிகுந்தநபிக்கே. (334)

அந்தவொளி வானமதி னின்றுமுன்னின் [வானமதை
யங்கிருந்து பார்த்தபொழுதோர்
கிந்திலது நாலுவ தெனத்தெரிவ தாமது
கிழர்ந்தவிரு வானமதனுட்
சிந்தைகளி கொண்டிட மிகப்புதுமை கண்டனன்
சிறந்திடு சிறைச்சிபுறயீல்
விந்தைநபி யேபுதுமை கண்டதை யெவற்குமறி
விக்கவரி தென்னமொழிவார். (335)

அக்ககனி லோர்வடிவ தாகவிரு வாலிப
ரமந்தவிரு பொன்குரிசிலே
மிக்குறவி ருப்பவிவர் பேரது விளம்புமென
விண்ணவர் நபிக்குரைசெய்வார்
மக்கநக ரத்தினி லிருந்தரசு செய்யுமுயர்
வள்ளனபி யேயிளைஞர்தா
னிக்கினு மிகச்சொல் எகியாநபிய தாமொருவ
ரீசாநபியு மாமொருவரே. (336)

அங்கவர்க ளுக்கெதிர் சலாமதை யுரைத்தபி
னதற்கவ ரெதிர்த்தமொழியு
மிங்கிதம தாய்மொழிந் தபின்ஜபுற யீல்சொலுவ
ரின்பநபி யேயிவர்களைத்
துங்கமுற வேதொழுவி யும்மென விளம்பினர்
தொடர்ந்துதொழு வித்தவுடனே
கொங்கவிழும் வானவர்கோன் வானமது
கொண்டனபி யைக்கொடுசென்றூர் [மூன்றருகு
(337)

செம்புகொ டமைத்ததிரி வானமத னின்பெயரு
செப்புவர்கை றாகுவெனவே
யும்பர்திரி வானுள மணிக்கதவு தட்டவெளி
யுள்ளவர்கள் வாசல்விடலாற்
செம்பொன்மணி முத்ததுகொ டேபடை
செழுந்துகில் புனைந்தஜிபுரீ [யுணப்படு
லம்பர்மணம் வீசிய அகும்மது தமைக்கொடு
வமர்ந்துவெளி யுட்புகுதுவார். (338)



அவ்வெளி யகத்தினி னவங்கள்பல கண்டன
ரதன்னையழ கானஜிபுரீல்
குவ்வவர்க ளுக்குரை செயக்கடவ தல்லவெனக்
கூறியபின் வள்ளனயினூர்
முவ்வெளியி னின்றுவிரு வானதை விழித்திட
முழுங்குமெழு வான்படுதிசை
யவ்வெளியி லேசிறிய கிந்திலது நாலுவது
போலுமிக வேதெரியுமே. (339)

இப்புதுமை கண்டபினிவ் வானிலிரு வாலிப
ரிலங்கு பதினுலுதிவசத்
தப்பினிலு தித்தமதி போலெழிலி லங்குமவ
ரங்குற விருப்பரவர்பேர்
செப்புமென வேநபி சிறந்தஜிபு ரீலொடு
திருந்தவுரை செய்யநபியே
யெப்பொழுது முள்ளவிறை யோனருள் யாகூபுநபி
யூசுபுநபி தாமிவரென்றூர். (340)

பின்னுமவ டத்தொருவர் பேர்வயது சென்றவர்
பெருத்தவுட லாய்நெடிதுமாய்ச்
சென்னிபெரி தாயிரு புயங்கள்பெரி தாயொளி
சிறந்தமுகந் தாடிசிறிதாய்ப்
பொன்னினழ காகிய சிங்காசன மதன்னிடை
புகழ்ச்சிகொ டிருப்பவவர்பான்
மின்னியவு ரோமமுடன் மொய்த்த தொரு
விளக்கமோ டிருப்பரழகாய் [வாலிபர்
(341)

இங்கிவ்வ ரார்சொலு மெனச்சிபுற யீலொடு
மிலங்குநபி கேட்டபொழுதே
யங்கொருவர் தாரூதழ கானநபி யாமருகி
லானவிளை ஞோர்சுலையுமான்
சங்கைநபி யென்றபி னவர்க்கருகு நின்றுயர்
சலாமதை யுரைக்கமொழிவா
ரங்குமிகு நன்னபி சலாமதை யுரைத்திட
வதற்கவர் பிரத்திமொழிவார். (342)

மன்றல்கள் சிறந்தபுய வள்ளனபி யேயுமது
வண்மையும்மத் தோர்க்குமுமக்கு
நன்றியுந லங்களு மிகப்பெரிது வென்றநபி
னலத்தஜிபு ரீனபியுடன்
வென்றிநபி யேயிவர்க ளைத்தொழு வியும்மென
விளம்பியபின் வள்ளனயினா
ரென்றுமுள நாயன்வச னங்களை யுரைத்திடு
மியல்ஜிபுரி யீலொடுசொல்வார் (343)

நீரமர ருக்கரசர் தாவூது புவிக்கரசர்
நீளிய புகழ்ச் சுலையுமான்
வீரனன்ன பிக்குமிகு வாழ்வொடுந டப்பவைகள்
வேறுமொரு வர்க்குளதுவோ
நேரிவரி ருக்கையி லியானவர்க ளுக்குமுன்
நின்றுதொழ வெட்குவனென
மாரிமுகி லிட்டகுடை நீழலி னடக்குநபி
வானவர்தமக் குரைசெய்தார் (344)

அப்பொழுது வானவ ருரைப்பர்நபி யேயுமை
யமைத்தபெரி யோனிவர்களை
யிப்பொழுது வந்துதொழு விக்கமொழிந்
விளம்பியபின் வள்ளனயினார் [தானென
செப்புவர் கலைக்குயர்வ தோகவுழ்வ தோவெனத்
தெளிந்துதொழு வித்தவுடனே
யப்புறம தானசது வானமதி லேநபியை
யண்டர்பதி கொண்டுசெலுவார் (345)

வெண்பா

வெள்ளியா லவ்வான் விதித்தானவ் வான்றனக்குந்
தெள்ளிதர் மூன்றாந் திருவெளிக்கு-முள்ள
நடுப்படவஞ் ஞூறாட்டை நல்வருடத் தூர
மடைப்பமுமத் தூரமுமே யாம் (346)

அவ்வான் றனக்கு மரியபெயர் சாகீறாம்
செவ்வா யவ்வானிற் சிலபுதுமை-குவ்வான
மெல்லாம் படைக்குமுன்னே யகீனின் மரத்திருந்த
னல்லார் நபிகண்டார் வந்து. (347)



வானோர்க் கரசு முகம்மதிறசூ னபியைத்
தானோக்கி வாய்திறந்து சாற்றுவார்-தீனோரே
கண்டபுது மையெல்லாங் காசினியின் மானிடர்க்கு
விண்டிடவேண் டாமென்றார் மேல். (348)

அங்கி லொருவான ரரியபொற்சிங் காசனமேற்
றங்கி யிருப்பரவர் தாளிரண்டும்-பொங்கியெழு
மண்ணேழுந் தைத்துருவி நிற்கு மணிக்கழுத்து
விண்ணறுசைத் தொட்டிருக் குமே. (349)

கலிச்சந்தவிருத்தம்

கந்தரம லக்கிருகை நீளமெழு வான்படுவான்
றொட்டிருக்கு நெட்டமுடிதா
னந்தரமி ருக்குமுக நாலதுவ தாகுமுன்பி
னாகுமிட பால்வலதுபா
லுந்திடு மொருமுகத்துக் கோர்முக மஞ்ஞூறு
வருடத்து வழியவ்வகல
மிந்தவரு டத்துவழி யாமவர் வலத்திசை
யெழுந்தமர மொன்றுள துவே. (350)

வலத்திசையி லுற்றெழு மரத்தொவ்வோ
மணத்தபழ நிற்குமதிலே [ரிலைக்கொரு
யிலக்கண மிகுத்தவ ரிரண்டுளது வோர்வரி
யெழுத்ததிலின் னவூரினிலின்ன
தலத்தினிலி ருப்பவனி னான்மகனி னான்றனக்குத்
தக்கவன் விதித்தவிரண
நிலைத்ததுமிம் மட்டொழிய வேகுறைத
நெல்லளவு மில்லையெனவே. [லேற்றமொரு
(351)

மற்றவரி மீதினி லெழுத்துமின்ன வூரிலின்ன
மண்ணினிலி ருப்பவனினான்
பெற்றமக னின்னவன் மவுத்துமின்ன நேரமதிற்
பின்னுமொரு மூச்சுமிலையென்

றுற்றகனி யானதி லெழுத்துளது வென்றுநபி
யோதுபள்ளி வாயில்வெளியிற்
பற்றலர்கண் மார்பினிடை வாளிவிடு
[யார்களொடு
பாசமொ டிருந்துரைசெய்தார். (352)

மண்ணினி லிருக்குநர ரொவ்வொரு வருக்குவிரு
வாயில்வெளி மீதுளதுவாம்
புண்ணியம றங்களொரு வாயில்செலு மிங்கிவன்
பொசிப்பிரண மொன்றினில்வரும்
விண்ணவர் வலத்திடையி னிற்பர்சில வானர்பனி
வெண்டுளியில் வெண்மையுடையோர்
நண்ணிய விடத்திடையி லுற்றிடு மலக்குக
ணவிற்றிட வொணுதவிருள்போல். (353)

மண்டல மடுக்கிலுள மண்ணதனை யெண்ணினு
மழைத்துளியை யெண்ணுகிலுநீ
ளண்டரிரு பாகினி லமைத்தவிமை யோர்கடனை
யங்குற வெணத்துலைவதோ
கண்டனன் மலக்கவர்தன் முன்பொருபொ
காணுமது நீளமகலம் [னின்பலகை
விண்டிடலஞ் ஞூறுவரு டத்துவழி யுண்டென
விளம்பினர் முகம்மதிறகுல். (354)

அப்பலகை தன்னிடை யமைத்துள பிராணிபல
தானவைகள் பேருமுளதா
மொப்புள மலக்கவர்கை யோர்வலைய
யொன்றுபெரு வல்லையமதாற் [முள்ளதொளி
செப்புமிரு வானிலுள கோணதையும் பூவினுள
திக்கதையு நீக்கிநோக்கியே
யெப்பொழுது மப்பலகை தன்னையு மரத்தையு
மிமைப்பற விழிப்பரவரே. (355)

ஊழியி லுதித்தவிற சூல்ஜிபு ரியீலொடு
முரைப்பரிலர் செப்பமதுகண்
டாழிய மனம்பயம தாகிவிடு வாரெவ
ரடற்சபுற யீலுரைசெய்வா



ரேழுபுவி யுள்ளவரு மேழுகக னுள்ளவரு
மிங்கிவரைக் காண்கிலுழல்வார்
வாழுமொரு நாயனருள் சேருமிசு றுயீலெனும்
வானமலக் கல்மவுத்திவர் (356)

வெண்பா

எல்லாப் பிராணி யிவைக ளுயிரையெல்லாம்
வல்லா னருட்படியே வாங்குவார்-நல்லாரங்
காங்கவர்தன் ளுவியையு மானபெரு வல்லபத்தால்
வாங்குவா ரெம்முடைய மன். (357)

மடக்குத்தாழிசை விருத்தம்

என்றபி னவர்க்குயர் சலாநபி யுரைத்தன
ரெதிர்த்தமொழி யோதியபினே
நன்றிசெயு நாயனருள் சேரும்விசு வாசியென
நல்லநபி சொல்வரவரை
யென்றுமுள நாயனருட் டோழனென வேநபியை
யின்சொலொடு சொல்வர்முகமோ
வென்றியுள வானவர் முகங்களது போலல
மிகக்கிருபை யற்றமுகமே. (358)

பஃறொடை வெண்பா

உள்ளத்தி ரங்கா வுயர்ந்தவிசு றுயில்சொல்வார்
வள்ளனபி யேயுமக்கு மாராயந்-தெள்ளுமும
தும்மத்தோர்க் கெல்லா முறுநலவு தப்பாதென்
றிம்மத்தா லேத்துமிசு றுயிலுட—னம்மைத்தா
னீதியுட னீடேற்று நீண்டநபி கேட்பர்துய்ய
வாதியு வந்தவிசு றுயிலே-சோதியுயிர்
வாங்கவுமை யேவும் வலுப்பமுடை யோனுணை
யீங்கெமக்கொன் றேது மெனவிசைப்பார்-பாங்காக
யிருவ ரொருநேர மிறக்க விதியானு
லொருவ னெழுவானி லொருவன்-பருதி
படுவானி லானுற் பலபடைப்பின் முன்னே
யடவா யவரை யறிவீரோ-திடமா
யுமைநபியா யேவு முடையோன்றன் ளுணை
யமைதுனியா வான மனைத்துந்-தமர்நபியே

யுங்களிலே முன்போ ரொடுக்குவைத்துத்
[தோற்றலென் றன்
செங்கணுக்குத் தோற்றுமெனச் செப்பியே-யிங்கே
யரிய பராத்திரவு வாறு லவ்வாண்டி
லுரிய வுயிர்போக்கு மொலியோலை-விரியவந்தென்
கையி லிறங்குமதாற் காண்பேனிவ் வாண்டிவர்கண்
மெய்யிலுயிர் போவதெ னவே. (359)

கலிச்சந்த விருத்தம்

சிட்டிலவர் கண்டுநரர் சென்றிடுத லியானறிவன்
 செய்தியிது வென்றதற்பினை
கட்டழக ராயொருவ ரைக்கருணை யுற்றுநபி
 கண்டனரங் கேதுசெய்வா
ரட்டதிசை மானில நரர்கள்செய் வணக்கமதை
 யங்கொருவ ராய்வணங்குறு
ரிட்டமுட னுரிவர் விளம்புமென வானரிதி
 ரீசுநபி தாமிவரென்றுர். (360)

ஆதிகிரு பித்தவிதி ரீசுநபி யொக்குமென
 வாலநபி செப்புவர்சலாஞ்
சோதிநபி செப்பிய சலாமதற் கெதிர்த்தமொழி
 சொல்விநல முஞ்சொனபினை
நீதிவெளி யிற்ககன ராஜனவர் கட்குமுன
 நின்றுதொழு மென்னநயினு
ரோதியவர் கட்குமுன நின்றுதொழு வித்தபிற
 கும்பர்பதி கொண்டுசெலுவார். (361)

கலிவிருத்தம்

அம்பரமைந்திடை யண்ணறனைக்கொ டமர்ந்துவவ்
[வான்கதவை
யும்பர்திறந்திடு மென்றபினங்குள ருட்செறி
[தாள்விடலாற்
றம்பமிகுந்த முகம்மதுவைக்கொடு சற்குண
[வானவர்கோன்
செம்பொனதைக்கொ டமைத்திடுவானிடை சென்று
[புகுந்தனரே. (362)



அண்டமதற்கிடு பேரதுசாவிய வங்குமிகப் புதுமை
கண்டமுகம்மது டன்சொல்வர்மிக்க கபீபுமுகம்மதுவே
மண்டலமீதுள மானிடருக்குமிவ் வானின வங்கடனை
விண்டிடலின்றி யமைத்திடுமென்ன விளம்பினர்
[வானவர்கோன். (363)

அந்தவெளிக்குற நின்றுசதுக்கக னுனதை யாலநபி
யிந்துமுகக்க ணுறத்தெரிசித்தபினிலங்குச துக்ககனோர்
கிந்தில்விளக்கது நால்வதுபோலிரு கிருபைவி
[ழிக்குறுமென்
றந்திமதிப்புகழி யார்களோடோதின ரன்பர்
[முகம்மதுவே (364)

வெண்பா

நாலாம் வெளிக்குளைந்தா நல்வெளியெத் தூரமென
மேலா நபியிறசூல் விள்ளுவார்-காலமதி
லஞ்ஞூறுட் டைப்பயண மாகுந் தடிப்பு
மஞ்ஞூறுட் டைப்பயண மாம். (365)

பொன்னுர் வெளியிற் புகுந்ததற்பி னோர்மலக்கு
மின்னுர் பெருங்குரிசில் வீற்றிருப்பார்-முன்னுளி
லாதி யமைத்தா னவருடலம் பார்க்கிற்
பாதியழலாற் பாதி பனி. (366)

ஓங்கு நெருப்பு முருக்காது வெண்பனியைத்
தாங்கும் பனிநெருப்பைத் தள்ளாது-வாங்கே
வரப்பா டுளமலக்கு வல்லவனே டன்பா
யிரப்பா ரவடத்தே யென்றும். (367)

கலிவிருத்தம்

நெருப்புத் தன்னையு நீள்பனி தன்னையும்
பொருத்தும் வல்லவ னைப்புகழ் மூமினுர்
கருத்துத் தன்னைக் கருணைகொ டேமிகத்
திருத்து முன்னைப் பணிவிடை செய்யவே. (368)

என்று தானிவ ரின்ப துவாச்செய
மன்றல் வானர் மருங்கின் மலக்குக
ளன்று தானுவந் தாமீனு மீனென
நின்று வாய்மை நிகழ்த்துவர் நித்தமும் (369)

இதத்த வான ரிவரரு கேயொரு
பதத்தர் தம்மை பயகாம்பர் கண்டனர்
விதத்த செங்கண் மிகப்பெரி யோர்தலை
யுதித்த தாடியு ரோம நரைத்துளார். (370)

விள்ளு வார்மதி வீசு முகத்தினோர்
தெள்ளி தான திருப்பெய ரார்சொலும்
வள்ள லாகிய காறூ னபிகவு
முள்ள பேர்கள்பே றுற்றக பீபிவர். (371)

சந்தவிருத்தம்

அடர்நெருப் பதனினு லறலினு லரியதோ
ருடலெடுத்த விமையோரு முயர்மூமி னவரு
மடன்மிகுத்த நபியே யுமையணைந்த கவுமுக்
கிடைவி டாதுற விரப்பர்மட் டிலாதுவா. (372)

என்றுவா னவரியம்பி யிவருக் குறுசலா
நின்று நன்னபி நிகழ்த்திட வெதிர்த்தமொழியு
நன்றி யும்பல நவின்றபி னலத்தவிறகு
லன்று வானரை யடுத்து உபதேசமறைவார். (373)

அறையு மிக்கவுப தேசமென வாலநபியும்
பொறையி ருக்குமிமை யோர்தனுடன்
[கேட்டபொழுதே
யிறைதழற் கொடறற்கொ டுடலெடுத்த விமையோர்
நறைமிகுத் திடுநபிக்கு உபதேச நவில்வார். (374)

கலிச்சந்தவிருத்தம்

ஆதிநபி யேயுமை யணைந்தவும்மத் தோருக்
கோதுமிசு வாக்கிடவு முட்செறி யுணுவின்
மீதினிடை கொம்பதனை விட்டிடவு மென்றே
யீதுவுப தேசமுட லின்புறுமி தன்னுல் (375)

என்றுநபி தம்முட னியம்பவிமை யோர்கள்
வென்றியர சன்சொலுவர் மிக்கவிற சூலே
நின்றுவிவ ரைத்தொழுவி யும்மென நிகழ்த்த
வன்றுநபி யங்கவர்முன் னின்றுதொழு வித்தார் (376)



நின்றுதொழு வித்தநபி னிறைந்தஜிபு ரீரு
னன்றிநபி யைக்கொடு நலந்திகழு மாரும்
வென்றிவெளி யிற்கதவை மென்கைகொடு தட்ட
மன்றல்செறி வானர்கடை வாசல்விடு கின்றூர். (377)

வாசல்விட வானரொடு வள்ளனபி யாரு
மாசினிபு குந்தனரவ் வானதனை யாதி
மாசகல்ப சும்மரக தங்கொடுப டைத்தான்
வீசுமதின் பேர்காலி ஜாவெனவும் விள்வார். (378)

அவ்வெளி யிலேபல வருஞ்சிறைவின் ணோரைக்
கவ்வைமொழி யாதநபி கண்டன ரதற்பின்
செவ்வியவர் நீளொளிசிங் காசன மிருக்கக்
குவ்வின்முன் னுதித்தவரைக் கொண்டனபி கண்டார்.
(379)

அங்கவர்தன் மேனியி லடர்ந்திடு மயிர்க்காற்
சங்கைகொள்குப் பாயமது தைத்துருவி நிற்குங்
கொங்கவிழ் பசுந்துகில் குறிப்பொடு புனைந்தோர்
திங்களெனும் வண்முகஞ் சிவந்தபச்சை யாலே. (380)

மலக்குகண் மருங்கினிடை வந்தவர் தமக்கே
நலத்தொடு சலாமது நவின்றிடுதல் கண்டே
தலத்தினை யமைத்தவிறை தன்ஜிபுரி யீலே
யலர்த்துகி லுடுத்தினவ ரார்சொலுமி னென்றூர்.
(381)

கண்ணினில் விழிக்குளிரு காலணி செருப்பின்
மண்ணதனை விட்டுவடி வாக்குமிற சூலே
திண்ணிய புவிக்குளிமு ருனருளுஞ் செல்வ
ரண்ணலுயர் மூசாநபி யாகுமிவ ரென்றூர். (382)

என்றுமவ ரிக்கதை யியம்பியிவர் தன்மு
னின்றுயர் சலாமதை நிகழ்த்துநயி னுரே
வென்றிகொ டெழுந்துபுய மீதுற வணைத்தே
நன்றிகொள் சலாமதி னயந்தமொழி சொல்வார்.
(383)

முற்பட வுதித்தெழு முகம்மதிற சூலே
சொற்கநன் மாராயமுமக் கென்றவர் துதித்தே
நிற்கையில் விண்ணோர்பதி நிகழ்த்தினர் கபீபே
வெற்கமற நின்றுதொழு வித்திடு மூசாவை (384)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

என்னவே மூசா தம்மை யியனபி யிரண்டி றக்ஆத்
தன்னவா னத்தே நின்று வமர்ந்திமா மத்துச் செய்ய
பின்னில்வா னவர்க்கு முன்னிப் பெரியவன் றூதைக்
[கொண்டு
மின்னவே யேழாம் வான மீதிடை கொண்டு
[சென்றார். (385)

வெண்பா

ஆறும் வெளியினின்று மப்பாலே ழாம்வெளியின்
வீறு னருளால் விரைந்துள்ளே-மாறுமற்
சென்றாரவ் வானைவெள்ளைச் சேர்ந்த மரகதத்தா
லொன்று னமைத்தா னுவந்து (386)

பஃறொடைவெண்பா

அந்த வானுக்கு வரும் பெய ருலாமியாச்
சந்தவா னேழுதனி னின்றே-பிந்திலா
வாறும் வெளியை யகுமதிற சூலெதிர்த்துச்
சீறு விழியாற் றெரிசித்தார்-வீறுகக்
கிந்திலொன்று போலக் கிருபைவிழிக் குத்தோற்று
மந்தவெளி வான மதினுள்ளே-முந்தப்
பலபுதுமை கண்ட பயகாம்பர் தம்மோ
டிலகுஜிபு ரீனின் றியம்புவா-ருலகமைத்த
வல்லவன்றன் றூதேயிவ் வான்புதுமை மானிடர்க்குச்
சொல்லவிதி யல்லவென்றார் சூழ்ந்து (387)

வெண்பா

அந்தக் ககன மதனிலொரு மாடமுய
ரிந்தைப் பழித்த வெளின்முத்தாற்-சந்தித்
திலங்கு மாடத்துக் கிசைபொருத் தொன்றில்லா
நலங்கமாய்க் கண்டார் நபி. (388)



கலிவிருத்தம்

அந்த மாட மதின்பா கனைத்தினும்
பந்தி யாய்ப்பதி னுலா யிரமியற்
சிந்தில் வீசுங் கிளர்ந்து தெரியவே
யந்த நாய னறுசி னொளிவினால் (389)

நலக்கு முற்றிடு நாயன் புகழ்ச்சியைச்
சொலித்தண் மாளிகை சூழ விராப்பகன்
மலக்கி னோர்கள் பிதற்கணம் வாறது
விலக்க ணங்கொண் டெழுபதி னாயிரம். (390)

முத்து மாளிகை முன்வாச றன்னிலே
நத்தை சேர்தலை தாடி நறைத்தவர்
கத்த னைமங் கருதிக் கருதியே
சுத்த மாயிருப் பாரங்கன் றோன்றவே. (391)

அந்த மாட மருகிலோர் தண்டலைக்
கொந்து வாரி குளிர்தென்றல் வீசவே
சிந்தை வாழச் செயுஞ்செழும் பூம்பொழி
லுந்தி வாழ்மர மொக்கக் கனிகளே. (392)

கலிச்சந்த விருத்தம்

பலபுற்பமு மதுமொய்த்திடு பழவற்கமு மூளதே
நலபொற்பொழி றனிலுற்றவர் நலமாகிய சிறியோ
ரிலகித்திட வுளதாமதி னிடையேயொரு மடமா
னலையுற்றெழு மதிபோன்முக மழகாக விருப்பார்
(393)

ஆரப்புக லருகோர்சுர ரங்குள்ள வவர்க்கே
பாரித்திடு சிறைதானெழு பதினாயிர முளதா
மேருச்சிறை யொன்றுக்கெழு பதினாயிர முகமுஞ்
சேரும்முக மொன்றுக்கெழு பதினாயிரந் திருவாய்.
(394)

உரமாகிய திருவாயவை யொன்றுக்கெழு பதினா
யிரனாவுள தாமொவ்வொரு வியனாவு வதற்கே
பரமாகிய பாஷையெழு பதினாயிர முளதாந்
தரமானவ லைப்பாஷைக டன்னாற்புகழ் வாரே. (395)

தீனெதிய நயினார்ஜிபு ரீலோடுரை செய்வார்
வானோர்பதி யேநித்தில மாடம்மது வாச
லானோர்பெயர் சொலுமாளிகை யருகாமிமை யவரார்
வீனுறிய பொழிலேதென விண்ணோர்பதி மொழிவார்.
(396)

மடைவாளைகள் குதிபாயுயர் மதினுநக ருடையீ
ரடைவாயுரை செயுமுள்ளமி லறியும்படி கேளுந்
தொடைவாழ்புய நபியேவெகு சுரர்துன்றிய பள்ளி
யிடமாகிய பைத்தல்மகு மூறுப்பள்ளி யென்றார். (397)

மக்கத்துறு பள்ளிக்குயர் பைத்தல்மகு மூர்நே
ரொக்கும்மென நயினாரொடு முயர்வானவர்
[சொனபின்
றிக்கெண்ஜிபு ரீலேசுரர் திகழ்பள்ளியின் வாசற்
புக்குநரை முதியோரெவர் புகலுமென மொழிவார்.
(398)

இலகும்பெரு முதியோரிபு றாகீநபி யென்றார்
மலர்துன்றிய பொழிறங்கிய மதியாகிய சாரு
நலதண்டலை சொற்கமதி னுயன்செகீ துகடன்
புலனொன்றிய வுயிரைக்கொடு பூங்காவிடை வைப்பான்
(399)

சீருற்றிடு பொழினின்றிடு சிறியோரும தும்மத்
தோர்பெற்றிடு சிறியோர்களி லுயிர்விட்டவ
[ரிமையோர்
பேருற்றிடு றாகென்றவர் பெரிதாகிய றாகு
நேருற்றவர் வருடந்தொறு ஞாலத்திடை வருவார்.
(400)

தவறுமனன் வருடந்தொறுந் தரைமீதிறை யருளா
லிவர்தான்லெயி லத்தில்கதி ரிரவேபஜிற் மட்டுந்
தவிராம லிறங்கின்றவர் தாமென்றபி னயினா
ரவர்காதிடை செலவோதின ரன்பானச லாமை
(401)

சீரான சலாமுக்கெதிர் சேர்வாய்மையுஞ் சொற்க
மாராயமு மொழிந்தேபினும் வசனிப்பர் கபீபே
தோராதவு மக்குமுமைச் சூழுங்கவு முக்கு
மேராகிய நலவானது யான்கண்டன னென்றார். (402)



நீர்வந்திடு தலமீதிடை நிலைதானுற முன்பின்
னூர்நின்றது முளதோவிலை யரிதாகிய தலமென்
றேர்வந்திடு மிமையோர்சொல விறகூல்முகம் மதுபின்
றீரொன்றிபு றாகீம்நபி திருமுன்பினி னின்றே. (403)

இபுறாகீம்நன் னபிகாதுற விறகூல்முகம் மதுநேர்
தவறுத சலாமோதினர் தானுமெதிர் மொழிந்தார்
புவிராஜர் மொழிந்தேயுயர் புகழோடுற விளகிக்
கவின்வாயித ழாலேயிரு கண்ணுக்கிடை முத்தி. (404)

கண்ணுக்கிடை முத்திக்கொடு கலல்வா ரிபுறாகீம்
நண்ணித்திடு நபியேயுயர் நல்சாலிகு தாமென்
றெண்ணுக்குறு மகனேநல விங்கேகிய தென்றே
வண்மைத்துரை நயினார்முகம் மதுவைப் புகழ்வாரே.
(405)

செல்லார்குடை நிழன்மீதிடை செகமேல் வருபவரே
யொல்லார்புகழ் நபிகேளு முமக்குமுமத் தோர்க்கு
மெல்லாநல வுங்கண்டன மென்றேபள்ளி யதனுள்
நல்லாரிபு றாகீம்நபி நயினாரொடு மொழிவார். (406)

பின்னுள்வரு நபிபள்ளியைப் பிறதக்கண மெழுகான்
மன்னுனரு ளாலவ்வகை பைத்தல் மகுமூறை
முன்னுள்பிதற் கணமாய்வரு முதுவான வரோநீ
ரென்னுள்வரை பிறதக்கண மியல்பாய் வருவீரே.
(407)

கோதற்றிடு நபியேநெறி குறையாதும துபிதா
வாதத்தையு வப்பாயிறை யமைசெய்யு மதன்முன்
மாதுற்றிடு ரண்டாயிர வருடம்மதற் கப்பா
லேதொப்பிலி யைக்கச்சுக ளியாஞ்செய்குவ மென்றார்.
(408)

கலித்துறை

நித்த மெழுபதி னாயிரம் வானவர் நிரைநிரையாய்
முத்தொளிர் பள்ளியைச் சூழ்ந்தே தவாபு மூயன்று
[செய்வோ
மித்தல மீதிலொரு நாளிடை யின்றி யெய்திவந்தோங்
கத்தன ருட்படி வாரேம் பின்னங்கு கயாமமட்டே
(409)

# 8. நரகத் தியல்பு

கலிச்சந்தவிருத்தம்

மறுமைப்பதி யளவாகவிவ் வண்ணம்வரு வோமென்
றறமொய்த்திடு நயினரொடு வடல்வானவர்
[சொனபின்
பிறையைப்பிளவு செய்தோரிடப் பிறமாய்விழி நோக்க
மறமொய்த்திடு கனலாலொரு வானோர்தமைக்
[கண்டார். (410)

கனலாலுட லுளவானவர் கதமாயொரு குரிசா
சனமீதினி லிருப்பாரவர் தங்குங்குரி சகலம்
வனமேலற றருநீண்முகம் மதுவாகிறில் வருடங்
கனமாயிர வருடத்தொலை காணுமென மொழிவார்.
(411)

தளிருற்றெழு மரமீதிலை தனையெண்ணினு முகிலின்
றுளியித்தனை யெனவெண்ணினுந் துகண்மண்கலை
[யெணினுந்
தெளிவுற்றிடு பெருவானவர் திருமுன்புகை கரும
மிளகிக்கொடு செயும்வானரை யெண்ணத்துலை
[யாதே. (412)

எண்ணத்துலை யாவானவ ரெழுவம்பரு மாய்வன்
கண்ணத்தன முடையோர்வெகு கன்னெஞ்சர் மிடுக்கர்
நண்ணிப்பவர் பேரேதிறை நன்றிக்கட லுடைய
விண்ணிற்ஜபு றயிலேயென வேதாம்பரு ரைத்தார்.
(413)

தழலாலுட லுளவர்னவர் தன்பேரெது வெனவே
யழலாகிய நரகுக்கதி காரஞ்செயு முன்னி
நிழல்காணவு யரிதாகிய நெறிசேர்முகம் மதுவே
மழைபோலருள் கரனேயிவர் மாலீக்கென
மொழிவார். (414)

மாலிக்குத னக்கேசொலும் வளமான சலாமென்
றுலிக்குறு மாமன்றனை யமரர்க்கிறை யேவப்
பாலுக்குறு மொழியானபி பதமான சலாமை
மேலுக்கிர மாயோதினர் மெய்த்தி யமரர்க்கே. (415)



நபிவிண்ட சலாமானது நரகுக்கொரு முன்னி
செவிசென்றிட வேயுத்தரந் திக்கென் றுரையாமற்
சவிபொன்ற மொழிந்தாரது தன்னூற்சபு றயிறுன்
கவிதங்கிய விதழாலிறை கபீபாமிவ ரென்றார். (416)

சந்தவிருத்தம்

கலைகள் கற்றநபி தம்மையிரு கட்கடையுறத்
தலையெ டுத்தவர் விழிக்கநபி தம்முடலெலா
மூலையி லிட்டமெழு கென்னவிரு கால்கையுதவாமல்
வலையி லுற்றவிள மஞ்ஞையென வாடிமெலிவார்.
(417)

மனமயங் குவதுகண் டமரர்மா லிக்குஉடனே
கனல்கொ ளுத்திவளர் காயமுடை யீர்நபியைநீ
ரனல்கொள் கண்கள்கொடு வச்சமுறப் பார்ப்ப
[தியல்போ
வெனமொ ழிந்தனர் நபிக்குள மிரங்கியியல்பாய்.
(418)

வள்ளலெங்க ணபிசொல்வர் வருவான வருடன்யா
னுள்ளமஞ்சி யுருகின்ற படியிப் படியென்றால்
விள்ளுமெந்த னுமத்தோ ரிவர்விழிக் கெதிர்நின்று
லெள்ளல்பட்ட வர்களெப்ப டிப்பயந்து ழலுவார்.
(419)

என்று வள்ளலும்மத் தோரவர்க் கிரங்கியயர
மன்றல் சேர்ஜபுற யீலுடன்மா லீக்குசொலுவார்
வென்றி சேர்நபிதன் மிக்கவும்மத் தோர்க்குநரகத்
துன்று தட்டிலொரு தட்டுளது சூடுசெயவே (420)

என்ன மாலிக்கு மிடித்தனின் மிகுத்தகுரலாற்
சொன்ன வாறுகொடு நன்னபி சுரர்க்கிறைவரோ
டென்ன பாவமது செய்திடுகி லெந்தனுமத்தோர்
தன்னை யாதிநர கத்திலொரு தட்டிலிடுவான். (421)

மிடைய தன்றிவலி யத்தொழுகை விட்டவருமே
யுடைய வன்றனை மறப்பவரு மூறுமதுவுண்
டிடையும் வஞ்சரு மிழிப்புறுச னுவின்முயல்வோர்
கொடிய நஞ்சரவு ணக்குலைவர் கும்பிதனிலே. (422)

அங்கு நிற்கையி லழுங்குரல் செவிக்குறுதலா
லிங்கு நின்றழு மியற்ககன ரார்சொலுமெனத்
துங்க மன்ஜபுற யீல்சொலுவர் தூயநபியே
யங்கு வானவர்க ளகாற்றூமி யழுங்குரல்களே.
(423)

இம்மத்தா னபியே புவியிருந் தருளுநும்
மும்மத் தோர்க்கவ ரிரங்கியழு மோசையிதெனத்
தம்மிற் றுழுமழு தாரழுத தம்பநபிபா
னம்மைத் தானுடைய நாயனெகி நண்ணிவருமே
(424)

ஏக னேவுமொகி யெவ்வண மிறங்குநபிபான்
மாக மேவுநபி யேயுமதும் மத்தவர்கடா
ஞக மேவுலகி னற்றொழுகை தன்னைவலியப்
போக விட்டவர்க டன்னைநர கப்புவியுளே. (425)

ஓது மாலமதி லுள்ளவர்க ளிற்கொடியதோர்
தீது றும்பெரும தாபுசெய விற்பன்மதுவை
மேதை யாலுணவு மைக்கொடு விலக்கினதற்பின்
கோத டுத்தமது வுண்டவரைக் கும்பிதனிலே. (426)

கலித்தாழிசைவிருத்தம்

முன்னீரென வொடுகைப்பொடு முழுதுமுடி வறக்காய்
வெந்நீரையு முணவித்துற மிகநோவுகள் செய்தே
வன்னீசொரி யுந்தேளொடு மலைநாகம துடனே
யென்னேவல்செய் யாரைக்கொடு விவ்வேதனை
[செய்வேன். (427)

புகையாகிய நரகேயுடல் பொடியாய்ப் பத்திலக்கம்
வகையானவ தாபேசெய்வன் வகைகேண்முகம் மதுவே
மிகையானஸ ஞவானதை விலகின்றதின் பின்பே
பகையானஸ ஞவேசெயிற் படிதங்குமும் மத்தை.
(428)

சீருய்வரு நரகத்துள திரடேளொடு பத்து
நூருயிர பேதங்கொடு நோவானவ தாபு
மாருவகை செய்வேனென வல்லோனெகி வரலால்
வீருகிய நயினர்வரும் விண்ணோருடன் கேட்பார்.
(429)



இந்தப்பிழை செய்தோர்பினு மியல்பாகிய தவுபாச்
சிந்தித்திவர் செயிலோவெனச் சிபுரீலுரை செய்வார்
வெந்திற்றிடு நரகக்குழி மீதேயிவ ரையல்லா
வுந்தித்தவ தாபேசெய வுறவெட்குவ னென்றார் (430)

மீண்டுமவர் பட்டோலையை விரியேனென விறையோன்
றூண்டுமுகம் மதுபாலொகி தான்வீட்டபி னயினு
ராண்டோன்ஜிபு ரீலேமிக மன்றுடும தாபு
மீண்டுங்கன னரகந்தனை யான்காணும தற்கே. (431)

மாலிக்கொடு சொலுமென்றபின் வானோர்சொல
[மாலீக்
காலிற்றிடு நரகப்பெரு மறைபூட்டிய பூட்டிற்
சீலத்தொடு கலிமாமொழி செப்பித்தம துகையா
னீலப்பெரும் பூட்டைத்தொட நெடும்பூட்டகன்
[றிடுமே. (432)

கலிவிருத்தம்

அங்கிசொரி யுங்கத வகன்றபொழு தங்கள்
பொங்கிநர கங்கழுதை போலலறக் கண்டே
யிங்கிதுவெ னைக்கருதி யேவருகு தோவென்
றெங்கள்ஜிபு ரீல்சிறகி லேயொதுங்கி நின்றேன். (433)

நின்றுஜிபு ரீலொடு நிகழ்த்தினன்விண் ணோரே
துன்றுநர கங்கனல் சொரிந்தெதிரி டாமல்
வென்றிகொண்மா லீக்கொடு விளம்பியமத் தீரென்
நன்றுநபி சொல்லவிண்ணோ ரங்கவர்க் கறைந்தார்.
(434)

வெந்நரகு முன்னியெதிர் வெம்புநர கத்தை
யிந்நரக மேயமையு மென்றவ ரமத்த
மன்னரகு தன்னையுயர் வள்ளனபி யுல்லா
வுன்னுடைய மானமென வூனரகுட் புக்கார் (435)

அங்குநர கிற்சிலரை யாலநபி கண்டார்
தங்குமுத டொட்டகை தடித்தவுதட் டைப்போற்
பொங்குதழற் கட்டியைப் பொசிப்பர்கள்
[பொசித்தால்
வெங்கனல்ப வனவாயில் வீசியிற்று வீழும். (436)

இங்கிவர்க ளார்சொலு மெனச்சபுற யீலோ
டங்குநயி னார்முகம்ம தன்பினொடு கேட்கச்
சங்கைகொளத் தீம்கண்முத றன்னைமிக வம்பாய்ச்
செங்கைவலி யாற்பறித்துத் தின்றவர்க ளென்றார். (437)

பின்னுநர கிற்சிலர் பெருத்திடும்வ யிற்றார்
வன்னிமுகங் கீழ்ப்பட வருந்தியிழுப் புண்பா
ரன்னவர்க ளாரெனப்பி னண்டர்பதி சொல்வார்
தின்னநினை யாப்பலிசை தின்றவர்க ளென்றார். (438)

வேறுசில பேரெரியும் வெந்நாகு தன்னி
னாறுதசை தின்றிடுவர் நற்றசையை விட்டே
நீறுமிவ ராரெனத்தன் னேரிழையை யன்றிச்
சீறியஸ னாக்கள்பல செய்தவர்க ளென்றார். (439)

பேசுநர கிற்சிலர் பெருத்ததலை யைத்தீ
யாசமியில் வைத்துற வரைக்குமது கண்டே
மாசினைய டுத்தயிம் மனித்தரெவ ரென்னத்
தேசமிற்கைக் கூலிபற்றித் தின்றவர்க ளென்றார். (440)

எண்ணுநர கிற்சில ரிடுக்கமுட னேதீக்
கிண்ணமதி லேதழற் கிளர்ந்தெழுவெந் நீரை
யுண்ணுவர்க ளங்கதனை யூட்டினசு ரத்தாற்
கண்ணொடு முகத்தசை கழன்றதனில் வீழும். (441)

வள்ளமின் முகத்தசை வடிந்துவிழு வோரார்
விள்ளுமென வேநபிக்கு விண்ணவ ருரைப்பார்
கள்ளமன தாலிவர் கடற்புவி யிடத்தே
யுள்ளமழி யக்களதை யுண்டவர்க ளென்றார். (442)

பொங்குகனன் மிம்பரிடை போயிறங்கு வோரா
ரிங்கிவரல் லாவருளு மேவல்செயு மென்பார்
மங்குவில கற்றவிரு மானிடரே யென்பார்
சங்கையுட னேயிருந்து தாமப்படிச் செய்யார். (443)

*வேறுசில மங்கையரை வெந்நரகு தன்னின்
மாறியிரு கைதனை வரைந்திறுகக் கட்டிச்
சீறியெரி கின்றகருந் தீயினிடை ஞான்று
நீறுபடு மங்கையரை நீர்சொலுமி னென்றார். (444)

* வேறு சில மங்கையரை-மதலைக்கமுதூட்ட மங்கையர்க்கு மறைவிதிபலகேதுவாலு முள்ளனவாம். இங்கனம் நாயகர் நரகிற்கண்ட மங்கையரது எண்ணத்தினால் வேதனைப்பட்டதென்று கொள்க.



இந்தமட வார்கட னிளமையது குன்றி
விந்தைசெறி மேனியெழில் வேறுபடு மென்றே
சந்ததி தனக்கிரு தனத்தமு திய்யாத
வந்தமட மங்கையர்க ளாமென வறைந்தார். (445)

வன்னிநர கிற்சில மடந்தையர்க டன்னீள்
சென்னிமுடி யைச்சுரர் சினத்தினொடு தூக்கிக்
கன்னியை யதாபுசெயக் கண்டுஜிபு ரீலே
யென்னபிழை செய்துபி னிறந்தவர்க ளென்றார் (446)

தந்தலைவ ரன்றிநெறி தானகல் கருமா
குந்தலைவர் தன்னிலகு கூர்விழிகள் காண
[1]மென்றலை விரித்தமற மின்னிவளென் றும்பர்
மன்றலைவ ரெங்கணல் முகம்மதொடு சொன்னார் (447)

வேறுசில மங்கையர்கள் வேதனை மிகுத்த
நாறுதனி லேயவர்க ணாவதனைத் தூக்கி
நீறுபட வெந்துருகி நீண்டகடைக் கண்க
ளாறுபடு மிந்தவல்லி யார்சொலுமி னென்றார். (448)

ஏவுநபி யேயிவ ளெழிற்கண வனைத்தா
னாவுகொடு பேசிய நலந்திகழு முள்ள
நோவுசெயும் வல்லியென நூறுமிகு விண்ணோர்
மூவுலகு மெண்ணிய முகம்மதுக் குரைத்தார். (449)

நீலநர கிற்சில நெடுங்கண்மட வார்கள்
மேல்தலைகள் கீழிலுற வேதனை படக்கண்
டாலநபி வானிலம ராக்கிறைவ ரேமா
ஞாலமதிற் செய்பிழை நமக்குரை செய்வீரே. (450)

மண்ணுலகி லிந்தமட வார்கள்புரு டன்சொ
னண்ணியவ னேவலி னடந்திடுவ தின்றி
யெண்ணியவ னேவலை யிகழ்ந்து திரிகின்ற
புண்ணிய மறந்துவிடு பூவையர்க ளென்றார். (451)

அங்கிநர கிற்சில வருங்கண்மட வார்க
டங்கடசை யைக்கடித்துத் தானருந்தக் கண்டே
மங்கையிவ ளாரென மனாளனன்றி மற்றோர்
தங்கள்புரு டற்கழகு காட்டினவ டானே (452)

1· மென்றலை-இவ்வெதுகை யினவெதுகை

கலிச்சந்தவிருத்தம்

முன்னெத்தியின் முடியைக்கொடு முதுகால்கர
மொடியப்
பின்னற்கொடு கட்டித்தழல் பெருந்தேளர வுடனே
துன்னக்கிடை கொண்டேயுடல் சுடவேதனை படலால்
வன்னிக்குளு ழன்றாவெனு மடவாரெவ ரென்றார்.
(453)

கலிவிருத்தம்

வள்ளனபி யேயிவண் மகப்பெறு முழுக்கு
முள்ளனை லுக்குமுழுக் கொன்றுவிதித் தாலும்
வெள்ளமதின் மூழ்குமதை விட்டுற விருந்து
வெள்ளல்படு மங்கையிவ ளாமென விசைத்தார்.
(454)

சந்தக்கலிவிருத்தம்

வட்டமான நரகிற்சில மடந்தை யர்கள்கண்
கெட்டுவூமை செவிடாயழல் கிழர்ந்தெரி யுநீள்
பெட்டகத்தி டையுழன்று பெருகக் கரைதல்கண்
டிட்டமாக விவரேது பிழைசெய்தவ ரென்றார். (455)

கள்ளமாகிய ஸனாவிடை சனித்த கொடிய
பிள்ளையைத் தனதுகேழ்வர் பெறுபிள்ளை யெனவே
விள்ளுகின்ற மடவார்க ளிவராகு மெனவே
வள்ளலாகிய முகம்மதொடு வானவர் சொல்வார்.
(456)

வெண்பா

எங்க ணயினா ரிற்சூல் முகம்மதுவுந்
தங்கு புதுமைகளைத் தானோக்கிப்—பங்கந்
தருமரவு தேட்கள்பொல்லா தாருடலை யுண்ணும்
பெருநரகைக் கண்டார் பின். (457)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

ஓடைநர கிற்சில வுடற்பெரு விடக்கென
வுமிழ்ந்துவிட நாறுமதுகண்
டேடுலவு மாலைநயி னார்ஜிபுற யீலுட
னெதிர்த்துவிவ ராரசொலு மெனக்
காடில்வய மரவிடை வையாளிவிடு கின்றநறை
காதவழி வீசுநபியே
யீடுபடு கின்றவிவர் கோளினொடு குண்டுணி
யியம்பினவ ரென்றுரைசெய்தார். (458)



மாசுகண் மிகுத்தவர்க ளிற்சில மனித்தர்கள்
மலைத்தலை பணைத்தவிருகால்
வீசுகை யுடற்செறி யுறுப்பவை களைக்கனலில்
வெந்தெரிதல் கண்டுநயினா
ராசினி யிலுற்றவ மரர்க்கிறைவ ரேயிவர்க
ளார்சொலுமி னென்னவொலுவோ
டேசெயும் வணக்கமதை விட்டுவொலு வானதை
யிகழ்ந்திடுமிம் மானிடரென்றார். (459)

விண்ணவர் கலித்தநர கிற்சில மனித்தர்தன்
மிகுத்தமுடி யிற்கரியதோர்
கண்ணினி னெருப்பது கணக்கனென நின்றெரிதல்
கண்டிவர்க ளார்சொலுமென
மண்ணிடை யடித்தெரிவ தின்றிநடை செய்திடு
முகம்மதெனும் வள்ளனபியே
திண்ணமுட னேயளவி லேநிறையி லேசதிகள்
செய்தபெரும் பாவிகளென்றார். (460)

நீணிய கறுத்தநர கிற்சில மனித்தர்தன்
னிமிர்ந்தமுது கிற்பெருநெருப்
பாணிக ளறைந்தெழ வதாபுபடச் சுண்டுவிரி
யம்புவியி லேயிவர்கள்செய்
வீணவை களேதென விளம்புமென வேவெளியில்
விண்ணவர் நபிக்குரைசெய்வார்.
பேணுதலை விட்டவர் முகம்பெறப்பொய்ச்
[சாட்சிசொன்ன
பித்தரிவ ரென்றுரைசெய்தார். (461)

வெண்பா

சேந்தவெந்த னும்மத்திற் றிரியினங்க டங்களையு
மாந்தர்களி லேபெருஞ்சீ மான்களையுங்—காந்து
நரகுதனி லேமிகுதி நான்கண்டே னென்று
விரகநபி சொன்னார் விழித்து. (462)

அந்நர கிலுள்ள வதாபையெல்லாங் கண்டதற்பின்
மன்னு நயினார் முகம்மதுதன்-முன்னின்
றெழின்மிக்க வேழா மியற்ககனோர் தம்மைத்
தொழுவித்தார் பின்னே தொழ. (463)

வள்ளறெழு வித்தபின்பு வானவர்கோன்
[வள்ளலைக்கொண்
டுள்ளங் கனிகொண் டுயரவே-மெள்ளவெழுந்
தாரங்கே நின்றெழுபத் தாயிர நல்வருடத்
தூரங் கொடுபறந்தார் சூழ்ந்து (464)

—□—

# 9. சொற்கச் சிறப்பு

வெண்பா

கார்மேவு நீழற் கபிபுதமைக் கொண்டுவெள்ளை
சேர்மேக மொன்றருகே செல்கின்று—ரூர்மேக
மென்றுரவ் வான்பூமி யீரே ழுலகடப்ப
நன்றாயுண் டென்றார் நபி. (465)

அந்தவெள்ளை மேக மருகேநின் றேநபியைச்
சிந்தைவெள்ள மான ஜிபுரீலும்—புந்தி
மருளதனை நீக்கு முகம்மதுவைக் கொண்டோ
ரிருளருகு சென்று ரே. (466)

அந்த விருளின் னகலமது நீள
முந்த மொழிந்த முகிலளவாம்-வந்த
விருளதனைக் கண்டு வன்புதுமை தானென்
றருணபியுள் ளேநினைப்பா ரங்கு (467)

வான மறுசு மலைநரகு பொற்பதிமண்
ணீனமறும் வாரி யெரினரர்ஜின்-தான
மிடங்கொற்ற பல்படைப்பு மிவ்விருளிற் குள்ளே
யடங்கிற்றே வென்றுநினைத் தார். (468)

தானமதி னின்று தனித்தோ னருட்படியே
தீனவர்கள் போற்றுஞ் சிபுரீலும்-ஞானபரன்
மக்கத்திற் கெண்டிசைக்கு மன்னா முகம்மதுவைச்
சொற்கத்திற் கொண்டுசென்றார் சூழ்ந்து. (469)



சொற்கப் பதிபுகுந்து சுற்றித் திசைநோக்கி
மெற்கமற வாழுமந்த விண்ணுலகம்-வற்கமுறு
வேழுவா னேழுபுவி யிப்பரப்புண் டென்றதிலே
வாழுவார் சொன்னார் மகிழ்ந்து (470)

களிவீசும் பொற்பதிக்குக் கால்கிளர்ந்த திக்கி
லொளிவீசுந் தட்டதனூ றுள்ளதே-வெளிவீசு
மொவ்வொருதட் டின்றுலைதா ரேறுதிலைஞ்
செவ்விவழித் தூரமென்றார் சேர்ந்து. [னூறுட்டைச்
(471)

பொற்பதி மேற்றட்டின் புகலரிய மாளிகையு
மற்பயிலு கின்றமணி வாசல்களும்-பற்பலவு
மொள்ளிதா யோங்கி யொளிவுவித மாய்வீசு
வெள்ளியா லேபடைத்தான் வேந்து. (472)

தாமமுறும் ரண்டாந் தட்டவைக ளுள்ளதிலே
மாமணியான் முத்தான் மரகதத்தாற்-சோமன்
கதிர்போல வேயிலங்கக் கண்டநடு சொற்கம்
அதினென் றுரைத்தா ரறிந்து. (473)

ஆங்கிற் சிறந்த அதினென்னுஞ் சொற்கமதி
லோங்கு மொருவருவி யுள்ளதே-தீங்கு
வுரையா மறுசுவற்கத் தோடருவி யந்தக்
கரையாற்றி லேபகுந்த கால். (474)

ஆங்காரஞ் செய்யு மதினென்னுஞ் சொற்கத்தைப்
பாங்கான வெள்ளைப் பளிங்கினு-னீங்காம
ளுடுமணற் கஸ்தூரி நல்லம்ப ராமதனுட்
பூண்டுநறுங் குங்குமப் பூ. (475)

பூமணஞ்சேர் சொற்கப் பாருப்பதுகஸ் தூரியா
மாமலையிற் கற்கண்முத்து மாமணியாற்-றேமனையிற்
கட்டின்மணி முத்ததினுற் கால்கணவ ரெத்தினத்தால்
விட்டிலகு மேபொளிவு மேல். (476)

மின்னுருங் கட்டில்களின் மேல்விரித்த மெத்தைபசும்
பொன்னு விரத்தினத்தாற் பூவாடை-பன்னுளும்
வீசுகின்ற பல்லணியின் மேற்படியின் மிக்கதெல்லா
மாசகன்ற முத்து மணி. (477)

மாருமை லோடும் வரிசையாற் றின்புனல்கள்
வீரும் பனித்துளியின் வெண்மையா-நூரு
மடிக்கரும்பிற் றேனி லறவினித்து நானக்
கடிகமழு மென்ரூர் களித்து. (478)

முருகுநிற்கும் பூம்பொழில்கண் மோதுகரை யோரத்
தருகுநிற்குஞ் சொற்கபதி யாறெல்லாம்-பெருகிநித்த
மோய்ந்தோட லன்றி யொளிருமுத்து மாமணிமேற்
பாய்ந்தோடு மெங்கும் பரந்து. (479)

மன்றல் செறிந்து மயங்காப் பசுமலரைத்
தென்ற லுதிர்த்துஞ் செழுஞ்சோலைத்-துன்றுமொளி
யைம்பொன்னு லாகு மழகிலங்குஞ் சுற்றுமதிற்
செம்பொன்னு லெனரூர் தெரிந்து. (480)

பூமணங்கள் வீசப் பொலிந்திலங்கு முந்திரிகை
மாமரங்க ளெல்லா மரகதத்தாற்-றேமிணங்குஞ்
செங்கனிகள் வெண்மையதாஞ் சேர்ந்த வதனிலைக
ளங்கமிகுஞ் செந்துகிலே யாம். (481)

கலிவிருத்தம்

அங்கதனிற்கனி தேனிலினித்து வரும்பனி
[வெண்மைகள்போற்
சங்கைபெருத்திடு வெண்ணெயினெய்ப்பம தானமதுக்
[கனியுட்
டங்குபருப்புள தோவிலைநின்று தழங்கிலை நீளமெனே
செங்கைகமுழப்பனி ரண்டுளதென்று திருந்த
[வுரைத்தனரே. (482)

சுந்தரமுந்திரி யந்தருவேரு துடங்கிநு னிப்பணர்மட்
டுந்துபழங்கள் தனிந்துறநிற்கு முறுங்கனி தேடியவர்க்
கந்தரமேவிய கொம்புவளைந்து வருங்கனி யைத்தரவே
வந்துவளைந்த பழந்தினவங்கின் மணப்பழ
[மொன்றெழுமே. (483)

அங்குளதண்டலை யிற்கனிதானொரு வாழிய
[சாடிகள்போற்
கொங்கையினின்றிடு மாதுளமென்கனி கூறிய
[முத்ததினுற்
சங்கைமிகுத்த சுவற்கநகர்ப்பலர் தானணி யுந்துகிருன்
வெங்கதிர்ற்சசி யிற்கிரணம்பல வீசிய மாமணியால்.
(484)



அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அண்டர்பதி யின்குதிரை யின்கலணை செம்பொனே
டருந்தரள மாமணியினுற்
கண்டனைய தேனருவி பாலருவி நீரருவி
கள்ளருவி நாலருவியுந்
தண்டலை வளர்ந்துயரு மாளிகைக டோறுமிவை
சாடல்கொடு வோடிவருமென்
றெண்டிசை யிலங்குபுக ழியார்கணடு வின்வரிசை
யெங்கணயி னுருரைசெய்தார். (485)

மாளிகையு யர்ந்ததல மும்புரிசை யும்பெருகு
வானிலொளி ரத்தினமதா
நீளியவ ருங்கனக மாவிரச தங்கொடு
நிறத்துடன மைத்தனனல்லா
வீழியிதழ் மங்கையரை யெம்மிறை யமைத்தனன்
மிகுத்தவழ காலவர்கள்வேய்த்
தோழியரு டன்தரள மாகியப டங்கினிழல்
சூழ்தரவி ருப்பர்தினமே. (486)

சந்தவிருத்தம்

இலகிய மடமயி லிவர்களொவ் வொருதிக
ளெழுபது வகைநறைசேர்
நலதுகி லணிவர்கள் பலவகை நிறமெழ
நறைகொளொவ் வொருவகைசேர்
கலையது வெழுபதோ டிருபது வகைபல
கதிர்விடு மிகவருகே
பலகலை தனிலொரு கலைபுவி வரின்மறு
பதியள வெழுமணமே. (487)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வாசமிகு சொற்கபதி மாதர்பணி முன்கைமுனில்
வானிடை வெளிப்படுகிலோ
காசினியி லுற்றசசி யாதவனு ளிப்பிரபை
காரிருளி னிற்கரியதாம்
பேசிய மணத்தகனி வாயினினி னித்திவலை
பேர்செறி யுவர்க்கடலிலே
யாசினித ரித்துவிழி லோபெரு முவர்க்கணிறை
யாழ்கடலி னித்துவிடுமே. (488)

வாரணி தனத்தியரி லோர்மகளிர் மிக்கமுனின்
வானிடை தரித்துவெழில்சேர்
போரணி விழிக்கடை கொடேதலையை யெட்டிவிரி
பூமியை விழித்திடுகிலோ
சீரணி முகத்தொளிவி னாலிவ்வுல கத்திசைகள்
சேரமதி கெட்டுழலுவார்
காரணி குழற்பெண்ணமு தாலவனி யுற்றநரர்
காதல்கள் பெருத்தழிவரே. (489)

வெண்பா

மின்னிலங்கும் பொற்பதியின் மீறும் பலவாழ்வு
நன்னலமுங் கண்டதற்பி னாடியே-பொன்னிலங்கும்
பூவிலே சேர்நபியைப் போற்றுஸிது றத்துல்முந்த
காவிலே கொண்டுசென்றார் காண். (490)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அந்தவி லந்தைதம ரம்பொன தின்பண
ரந்தியி னிந்தொளிபோன்
முந்தியி லங்கிய தண்டர ளங்கடன்
முந்துசெ ழுந்துகிரா
லுந்திவ ளர்ந்திடு கொம்பதி லொன்றி
லுயர்ந்தூற நின்றிலதா
னெந்தனி லொன்பதொ டஞ்சுட னிந்தை
யிகழ்ந்திட நின்றதுவே. (491)
எழுபது விலையுள தெனவுற மொழிபவ
ரிறையருள் பெறுமிறசூல்
பழுதற வொருவிலை யிடையுள வெளியது
பகரிலெவ் வளவுளதா
மெழிலுட னிருபதோ டிருபது வருசம
தியலொடு செலுதுலையா
முழுமர மதிலுள விலைதரு மொளிமயின்
முதுகுள வொளிநிறமே. (492)

வெண்பா

கோமே தகத்தாற் குதாயமைத்த கொப்பினிலை
மாமேவு பச்சை மரகதத்தாற்—பூமீதி
லூடாலா கும்முரையா ரோரிலைகொண்டிப் புவியை
மூடலா மென்றார் முயன்று. (493)



ஓங்கி யெழுந்தவிலைக் கொவ்வொன்றுக் கோர்மலக்கு
நீங்கிலென வெண்பனிபோ னிற்பரே-யாங்கே
தொழுமதிசேர் வானர்சிறை தோன்றரண்டும் பச்சை
முழுமதிபோல் வீசு முகம். (494)

பெருக வொளிவீசும் பெருத்த முடிவானோர்க்
கிருபுயமு நின்றங் கிலங்குமே-யொருபுயத்துக்
கோர்புயமோ ராட்டைவழி யுளதெனவே யுரைத்தார்
தார்புயத்தின் மேவுநபி தான். (495)

துனியாவை மூடுந் துளிர்த்த விலைமீதே
பனியாற் படையுணுமும் பர்க்கெல்லா-நனியாக
வொண்ணுலா வுங்கரத்தி லோர்தடியுண்
வெண்ணிலா வீசும் விரிந்து. [டத்தடிதான்
(496)

திங்கண் முகவானர் திருநெற்றி யின்மீதே
துங்கமுற வேவெழுத்துத் தோற்றுமே-தங்கச்
சிதறத்துல் முந்தகா சேர்ந்தவர்க ளென்றே
குதறத்தி னாலே குறித்து. (497)

ஓங்கு மிலந்தை யுயர்ந்த கனிபசுந்து
தூங்கு மொருமலைபோற் றோன்றவே-பூங்கரும்பின்
றேனுலா வுங்கனிக்குச் சேர்ந்தகொட்டை
வானெல்லாம் வீசு மணம். [தானிலையேழ்
(498)

மண்டலிகர் போற்றுநபி வாழ்மரத்துண் டாம்புதுமை
கண்டதிச யிக்கக் ககனர்கோன்-பண்டுநவ்வி
பாலைமறி யுண்ணப் பலனுக்கு நம்மிறசூ
லாலநபி யைப்பிரிந்தா ரங்கு. (499)

பஃறொடை வெண்பா

எம்மைப் பிரியா வெழிற்ஜிபுரீ லெங்கெனவே
நம்மைப் பிரியா நபியிறசூ-றம்மிருகண்
கொண்டோர் திசைநோக்கிக் கூர்க்கவே
[பார்க்கவங்கே
கண்டார் ஜிபுரீலைக் கால்கரங்க-ளுண்டா
மூறுப்பெலாந் தானொடுங்கி யுள்ளம் புழுங்கி

மறுப்படாத் தசுபீகு வாழ்த்தி-யுறுப்பில்லா
வல்லாவுக் கஞ்சியவ ரங்கத் தெழும்வியர்வு
நில்லாமற் குங்குமத்தை நீரிலே-மெல்லக்
கரைத்துவிடும் புனல்போற் கான்றொழுகு மென்ன
வுரைத்தனரெங் கோமா-னுவந்து. (500)

கலிவிருத்தம்

வியல்வாறுகொள் ஜிபுரீலுடன் வினவவெதிர் நயினா
ரியல்பாஞ்சிபு ரீலேயிவ ணெம்மைப்பிரி வதெனோ
முயன்மாறிய மதியானன முடையீரெமை யுடையோ
னுயர்வாழ்மர மிதின்மேல்வர வொண்ணாதென
[மொழிந்தார். (501)

இங்கிவ்விடம் விட்டந்தர மேகிலிறை யொளியாற்
பங்கம்பட வெந்தேகரி படுவேனென மொழியு
மங்கந்தனை நபிகேட்டுள மறவும்பய முறலாற்
றுங்கஞ்செறி ஜிபுரீலிற சூறன்மனந் தேற (502)

கலித்துறை

தண்ணெ ணுங்குண நெஞ்சினைச் சிறைகொடு தடவிக்
கண்ணி ரண்டிடை முத்திநல் லகுமதே கண்பதவி
யெண்ண தின்றியிங் செய்தின விருதயத் தச்ச
நண்ண வில்லையென் றமரர்கோ னவின்றனர்
நயந்த்த (503)

வரிசை யாயுமை யுயர்த்திநற் றகுதிகள் வருத்திப்
பிரிச மாகவே யும்மையிங் கழைத்தனன் பெரியோ
னரிய நற்றுணைச் சபுறயீ லுரைத்தபி ஞதிக்
குரிய நன்னபி யுளம்பயந் திடுவதை மொழிந்தான்
(504)

அன்ன காலையி லதிருமோர் சத்தமாங் கமரர்
மன்ன னேயென துயர்கபீ பெனுமுகம் மதுவை
மின்னு மிவ்வொளி தனிலுற மூழ்கிவித் திடுமென்
றுண்ணு முன்னுண ரும்மிறை யோன்மொழி யோசை.
(505)



ஒளியின் மூழ்கிட நபியையென் றுடையவ னேவற்
றெளிவு பெற்றிடுஞ் சபுறயீ றிருவிற சூறன்
அளித ருந்தொனட யணிகழுத் தொடுகையும்
பிடித்தே
வெளியில் வந்தவவ் வொளிதனின் மூழ்கினர்
வேந்தை (506)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

மூங்கிய நபிமுன் னேவன் முயன்றிடு வானவர் நால்வ
ரிங்கித மாக வந்தே யேற்றதோர் வேந்த ணும்ந்
தங்கிய பசுந்த சிங்கா சனமதைச் சுமந்து வந்தா
ரங்கதி லேற வெய்யு மம்பினில் விரைந்து செல்லும்.
(507)

வெண்பா

அம்பின் மிகவிரைந்து வாசனமங் கேயெவர்க்குந்
தம்ப நயினார் தமைக்கொண் டே-நம்பவல்லோன்
வெள்ளொளிவா லேயமைத்த மிக்கட லொன்றருகே
புள்ளெனக்கொண் டேகும் புரிந்து. (508)

விரிவான் கடலினிற்கு விண்ணோ ருடைய
விருதோளுக் குண்டா மிடைதான்-பெரிதா
யறைந்தா ரவர்பெரும்புள் ளாயிரத்தாண் டாகப்
பறந்தாலுங் காணாப் பரப்பு. (509)

அலைதங்கும் வாரியைவிட் டப்புறத்தி லேக
விலகுங் கடலொன் றெதிர்த்ததே யுலகமைத்தோ
னேசையுள நீள்கடலை யுண்டாக்கி நான்பெருத்த
பாசுவொளி வாலே படைத்து. (510)

அந்தக் கடலினிற்கு மந்தமரர் தன்கையிலே
யிந்தப் புவியு மெழுவானு—முந்துமதி
லுண்டாம் படைப்பைவைத்தா லுங்கள்கையி
கண்டாற்போற் றோற்றுங் கணக்கு. [லோர்கடுகு
(511)

அந்தக் கடல்கடந்து வப்பாற்சிங் காசனமேற்
சிந்தித் துறவெழுந்து செல்லவே-முந்தப்
பெருங்கடலின் மூழ்கும் பேரிறகு லங்கோர்
கருங்கடலைக் கண்டார் களித்து. (512)

அக்கடலின் மூழ்கி யதின்புதுமை கண்டஜபாய்
மக்கநயி ஞர்முகம் மதுதா-மிக்குடனே
வானமைத்தோன் றன்னையந்த வாகனத்தின் மீதிருந்து
வான சுகூதிரப்பா ரங்கு. (513)

பஃறொடை வெண்பா

அன்றூடு முள்ள வடியா ரிரப்பையெல்லாங்
குன்றூம லேகொடுக்குங் கோவே-யொன்றூனே
யெந்தனிமை யும்பயமும் மெல்லா யகற்றியரு
ள்ந்த விரவை யெளிதாக்கி-யுந்தனுட
னின்று வசனித்து நெருங்கி மருவுகின்ற
வென்றியடி யானுக்கு வேந்தே-யென்றிரக்க
வந்தக் கடற்கரையி லாகவொரு சத்தம்வரு
முந்து கபீபே முகம்மதே-சிந்தையுற
வென்னைப்பா ரீரெனவா லெங்கணபி பார்க்கவொரு
பென்னம் பெருமலக்குப் பேர்கடலி னன்னகரைப்
பாகினின்று நீரைப் படியா னிறுத்தளந்து
மேகத்தின் கைக்கொடுத்து விட்டிடுவர்-மாகத்தோர்
காதுபுகழ் வள்ளல் கவலுசலாத் துக்கெதிர்ச்சொல்
லோதியபின் னும்பெரிய வும்பர்தான்-சோதி
யகுமதே யென்றுமுள்ள வாதி திருத் தூதே
முகம்மதே யென்றழைக்க வள்ளன்-முகமெதிர்த்து
நம்முடைய நாம நவில்வீ ரெனமலக்குத்
தம்முடைய நாமத்தைச் சாற்றுவார்-செம்மதிபோல்
வாக்கா முகம்மதுவே வள்ளலே யென்பேரு
மீக்கா யீலென்றூர் விரித்து. (514)

கலித்துறை

மீக்காயீ றன்னைத் தெரிசித்தல் லாவை மிகப்புகழ்ந்து
வாக்காமு கம்மதப் பாற்செல வேகில வானவர்க
டாக்காக நின்று தகுபீகு மங்கினிற் சப்புசப்பாய்
நாக்கான் மொழிவது கண்டுமப் பாற்செல்வர்
[நன்னபியே. (515)
அப்பாலு மப்படிப் போலிமை யோர்சப்ப தாகநின்று
செப்பாந் தசுபீகு செய்திடு வாரங்ஙன்
[சேர்ந்துபின்னுந்
தப்பாம லப்புறத்தே செலுங் காலந் தனித்ததுய்யோ
னெப்பாலு முள்ளவன் றன்னிசு ரூபீ லெதிர்ந்தனரே.
(516)



நாடி நிற்கின்ற விசுரூபீ ஞதச் சிறகிரண்டு
மூடி நிற்குமெழு வான்படு வாஞேக்க மூதண்டர்தோ
ணீடி நிற்குமறு சைத்தொடுந் தாளெழு நேமியுள்ளே
தாடி நிற்கும்பத்து நூரூயி ரஞ்சிறை தானுமுண்டே.
(517)

சிறையொன் றுக்குப்பத்து நூரூ யிரமுகஞ்சேர்
[முகமொன்
றுறைகின்ற வாய்பத்து நூரூ யிரமொவ்}]
[வொருமணிவாய்க்
கிறைதந்த நாற்பது நூரூயிர மியஞ வொன்றுக்குப்
பறைகின்ற பாஷைகண் மேற்படி யாமென்பர்
[பாரில்வந்தே (518)

நாவொன் றுரைத்த புகழ்ச்சியைத் தான்மற்ற
[நாவறியா
ஆவென் றடங்கலை யும்படைத் தோனை
[யந்நாவுகொண்டே
பாவொன் றுகின்ற தசுபீகு செய்வர் பலவிதமாய்க்
கோவண்டர் தன்மணி வாயிடைச் சூறெனுங்
[கொம்புமுண்டே. (519)

சூறெனுங் கொம்பி னுளவாத் துமாவத் துளையுளதாம்
வீறணு கும்மி லெளகு மகுபூலு விரிப்பலகை
யீறணு கான்ற னிசுரூ பீற்கேயங் கெதிரிலங்கு
மூறணு காவெழு வான்படு வாஞெக்க முட்டிநின்றே.
(520)

இரப்பார்க் கிரக்கின் றேனேவ லென்றே
[யெழுவான்படுவான்
பரப்பாம் பலகையைப் பார்த்தகண் வாங்கிலர்
[பாரவிண்ணோர்க்
குரப்பாக வேநபி யோதுசலா முக்கங் குத்தரமும்
விரைப்பாய் மொழிந்தனர் நம்மிற சூல்பின்னும்
[விள்ளுவரே. (521)

இந்தத்தலத்திடை யோநீ ரிருப்பதுவென்னவிண்ணோர்
சந்தித்த வள்ள னபியுடன் சாற்றுவர் தார்நபியே
சிந்தித்து நாய னிங்கேநீ ரிருமெனச் செப்புமதால்
வெந்தித்த வாகிற மட்டாக வித்தல மேவுவனே (522)

இந்தத் தலத்திலி ருந்தேது கேட்பி ரியம்புமென
வெந்தத் தலமு நிறைந்தவல் லானென்னை யேவுகின்ற
வந்தப் பணிவிடை செய்தே னெனச்செவி
[யங்குவைத்துச்
சிந்தைக் குணுடி யிருப்பேனிங் கேயெனச் செப்பினரே.
(523)

பங்கே ருகப்புய னீளிசுரு பீலைப் பார்த்துச்சொல்வா
ரிங்கே யிருக்கையி லேகன் றனேவ விரைச்சலது
வங்கே நின்றே தொனியாய் வரக்கேட்பீ
[ரறிவியுமென்
றெங்கோன் றிருநபி கேட்க விண்ணோர்நின்
[றியம்புவரே. (524)

கலிவிருத்தம்

இடிமுழக்கினின் மின்னினி லெழுஞ்சுழற் காற்றிற்
கடுமுழக்கமு மிரைச்சலும் பிரபையுங் கடிதாந்
திடமிகுத்தவன் வசனமே தெனவருஞ் செப்பி
ரடன்மிகுத்தசொல் ஆவெனத் தொனித்திடு
மறிவேன். (525)

—◻—

# 10. அறுசுச் சிறப்பு

வெண்பா

ஆவென்றசொல்லா லடங்கலுமாய்ச் சொல்லுமென்ற
கோவண்ட ரோடுநபி கூறுவார்-மாவொன்றுங்
கத்தனரு ளாலியான் கடந்துவந்த வித்தலத்தை
யெத்தலமென் றோதீ ரெமக்கு. (526)

நண்ணோர்கள் போற்று நபியே தலையெடுத்து
வண்ணாந்து பாருமென வேவறையக்-கண்ணால்
வரிசைதனைக் கண்ட முகம்ம திறசூலங்
கறுசதனைக் கண்டா ரமர்ந்து. (527)



விண்ணோட ருந்தரையின் மிக்கவரும் போற்றுநபி
கண்ணார வேயறுறைக் கண்டதற்பி-னெண்ணோடு
மிங்கொருசொல் லெந்நபியே யென்னறுசி லேறிடு
றங்கொருசொல் லுண்டா மதிர்ந்து. [மென்
(528)

மேலிற் றெரிந்த விளங்கறுசி லேறுதற்குக்
காலிற் கபுசைக கழற்றவே-கோலி
யுளத்தா னினைத்திடவங் கோர்சொற் கபுசைக்
கழத்தாதே றென்றுவருங் காண். (529)

எந்த வறுசு யெவுமல்கியா மத்ததுநாண்
முந்தன் கபுசுபட்ட முக்கியத்தாற்-சிந்தையுறப்
பேறுடனே வீறுபல பேசுங் கபுசுடனே
யேறுநீ ரென்ற னிறை. (530)

எம்முலடய வல்லா யிமுறான் மகன்மூசா
தம்முடனே நீவசனஞ் சாற்றவே-செம்மைத்
தொடுதோல் கழற்றியுயர் தூரிசினா வெற்பி
லடிதோய வேறென்ற யன்று (531)

பொல்லாத் துனியாப் பொறுப்பதுவா மிவ்வறுசு
வல்லா வுனது வரியதல-மெல்லாங்
கபுசான் மிதிக்கவெந்தன் கல்பு வெட்குதென்று
நபிஜவாப் சொன்னார் நயந்து. (532)

ஓயாக் கிருபை யுளநபியே நன்மூசா
வாயாலென் கூட வசனிப்பார்-நீயாகு
மெந்தோழ னின்கழலி லிட்ட கபுசுடனே
வந்தேறு மென்றுரைத்தான் மன் (533)

வேதவல்லோர் போற்றுநபி விரும்புங் கபுசுடனே
யேதமில்லான் றன்னறுசி லேறியே-சோதி
யறுசுதனைப் பார்த்து வதின்பெருப்பந் தன்னை
வரிசைநபி சொல்வார் வடித்து (534)

மண்ணுலக மேழுமுயர் வானேழு மங்கதனி
லெண்ணும் படைப்பு மிவையெல்லா-நண்ணு
மருசுதனக் கோர்வெளியி லாழிவைத்தாற் போலத்
தெரிவதுள தென்றார் திரித்து. (535)

கலிவிருத்தம்

சங்கைசெறி யோரமரர் தானரிய சேவ
லங்குவடி வாயறுசின் கீழவர் கழுத்துச்
செங்கதமி ரண்டுமெழு திண்புவியி னுள்ளே
வங்குருவி நிற்குமவ் வானவர்தலை வெள்ளை. (536)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வெண்டலைச் சூட்டுத் துப்பின்
  மிகப்பெரு வனப்ப தாகு
மெண்டரு சிறகி ரண்டை
  யிராநடுச் சாமந் தன்னி
லொண்டற விரித்து வீசி
  யொளிர்சிறை யடிகொண் டார்க்க
வண்டரு சிறகி ரண்டு
  மசுரிகு மகுரி பெட்டும். (537)

சிறையடிக் கொண்டு சேவல்
  செழுங்குரன் முழக்க மென்னோ
மறையொவ் ஐபுற யீலை
  வானரை யுடைய வேந்த
னிறையவன் பழுதொன் றில்லா
  னென்றுள துய்யோ னென்று
நறைதருந் தசுபீ கோதி
  நன்னடுச் சாமங் கூவும். (538)

விடிந்திடுங் காலந் தன்னில்
  வெண்டலை வளைத்து மீளத்
துடர்ந்தெமை யுடையோன் மேலான்
  றுய்யவன் பழுதற் றோனென்
றடர்ந்தது கூவு மப்போ
  தவனியிற் சேவ லெல்லாந்
திடந்தரத் தசுபீ கோதிச்
  சிறையடிக் கொண்டு கூவும். (539)

கலிச்சந்தவிருத்தம்

இமையோர்சிலர் களையங்குற விறசூல்முகம் மதுபின்
செமையாரிவிழி கொடுகண்டனர் திகழ்வாளெழு
கடலேழ்
கமராகிய புவியேழவர் காலிற்பரண் டையின்கீ
ழமையாதவர் பெருமைச்சட மாதிக்கறி வதுவே (540)



இவ்வானவ ரெவரோவென விசுறுபிலொ டிறசூல்
செவ்வாயுரை செயுமென்றபின் சிறைவானவர்
மொழிவார்
புவ்வாழிறை யறுசைச்சுமை புரிவானரு மொருமைத்
தெளபாமொழி கட்டுவிக டானுமிவர் தாமே. (541)

இறையோன்விடு நபியேயிவர் களைநீர்முடு கிசலா
மறைவீரென வதனுலத புடனேசலா மொழியத்
தறையூடுரு வியதாளினர் தகுமான சலாமின்
மறைசேரெதிர் மொழியுஞ்சொலி மாராயமு
[மொழிந்தார். (542)

வெண்பா

எங்க ணயினு றிறசூல் முகம்மதுநன்
செங்குவளை போன்ற திருக்கண்ணு-லங்குநின்று
மேலாங் கிருபை விளங்கறுசின் கீழ்பார்க்க
நாலாறு கண்டார் நயந்து. (543)

வல்லான் வரிசையினுன் மாறும லோடிநிற்கும்
அல்லா வறுசின்கீ ழாற்றினது-நல்ல
கரையோர மெங்குநறுங் கஸ்தூரிக் குள்ள
விரையோங்கி வீசு மிக. (544)

ஏகனிசு றுபீலே யிவ்வாறெவ் வாறெனவே
வாகர்நபி கேட்க மகிழ்ந்துரைப்பா-ரேகதுய்யோன்
மேலாங்கவு லல்கவுதர் மெய்யாறொன் றுமிசுறி
னீலாறொன் றென்றுரைத்தார் நின்று. (545)

ஓங்குமிவ் வாற்றி னுறுபேர் ஷகாவென்னுந்
தேங்கமழிவ் வாறிரண்டுந் தீனபியே-யீங்கே
யுகமுடிவு காலமோ ரூருளதவ் வூரிற்
செகமதிலிவ் வாறோடுஞ் சென்று. (546)

வள்ள னபியே மிசுறு மெனுமூரிற்
றெள்ளுமிந்த வாறோடிச் செல்லுமென-விள்ளுகின்ற
நேரத்தே நன்னபித னீடலைக்கு மேலொருசொல்
லாரத்தா லுண்டான தன்று. (547)

அங்கோர் பெருமலக்கு வாலநபி யேயுமக்குத்
தங்காம லெந்தன் சலாமென்றா-ரங்கவரை
யண்ணாந்து பார்க்க வலர்பனியின் வெண்மையுடைத்
தொண்ணா யிருப்பா ருவந்து. (548)

அங்கவர்தன் முன்னே யடர்ந்தெழுப தாயிரம்பேர்
சங்கையவர் வடிவாய்த் தான்வந்தே-செங்கைகொடு
வெண்ணைத் தழுவியிரு கண்ணிடையின் முத்திப்
பின்னைப் புகல்வார் பிரித்து. (549)

மண்ணோர் பலரின் வரிசை பெறுநபியே
விண்ணோர் புகழவரும் வேந்தே-கண்ணே
நடவீ ரெனநடக்க நல்லமரர் கூட
வடவாக வேநடந்தா ரமர்ந்து. (550)

##### பஃறொடை வெண்பா

அன்ப ரிறகூ லறுசிற் செலவமரர்
முன்பின் னிடம்வலமு மொய்த்ததே-யன்பாய்
நபியைப் பலவிதமாய் நாவினாற் போற்றிக்
குவியப் பனிமலக்கின் கூட்டஞ்-செவிதாய்
விரிந்திலங்கும் வெண்டரள மின்னெழு பதினா
யிரந்திரை மட் டண்ணலைக்கொண் டெய்தினார்
[-பரிந்திலங்கு
முத்தின் றிரையினின்று முஸ்தபா நன்னபியை
யெத்திரையிற் கொண்டுசென் றாரே. (551)

##### கலித்தாழிசை விருத்தம்

செம்மைப்பெரு மணியாலெழு பதினாயிரந் திரைமே
னம்மைப்பெரு கத்தேடிய நபியைக்கொடு சென்றா
ரிம்மத்துள நபியுந்திரை யெழநின்றவ ரையெல்லா
மம்மொய்த்திடு பச்சைமர கதவத்திரை யானார்.
(552)

செல்லும்மர கதத்தாலெழு பதினாயிரந் திரைநின்
றெல்லிற்கதி ரொளியிற்பனி யிதின்மின்னிய திரைகள்
புல்லித்தெழு பதினாயிர முன்போனதின் பின்பே
யல்லற்றெழு பதினாயிர மப்பின்றிரை சென்றார்.
(553)



விதமாகிய வப்பின்றிரை விட்டேசுந் திசுப்பட்
டதனாலெழு பதினாயிர மழகாந்திரை சென்றே
பதமானவ னிமையோர்மொழி பறையாமுகம் மதுவை
யதபாயுய ரிருளின்றிரை யதனிற்கொடு சென்றார்.
(554)

##### வெண்பா

அங்கத் திரையடைப்ப மஞ்ஞூறு வாட்டைவழி
கங்குல் திரைகடந்து கண்ணான-வெங்க
ளகத்திருக்கும் பார வகும திறகூலைப்
புகைத்திரையிற் கொண்டு சென்றார் போய். (555)

தூமத்திரையினின்று துள்ளும் பனித்திரைமேற்
சேமமுற வேநடந்து சென்றதற்பின்-வாமமுற
மேலாக வேயுயர விண்ணவரு மண்ணலைக்கொண்
டாலாங்கட் டித்திரைக்கு ளானார். (556)

ஓங்குந் திரையிவைக ளொான்றுக்கொன் றின்னடுவே
நீங்கிலைஞ் ஞூறாட்டை நெடுவழியா-மாங்கே
யடைப்பமுமத் தூரமே யாமென்றார் தீனி
னடப்புடைய செங்கோ னபி. (557)

ஆலாங்கட் டிப்புனனின் றானஜப றாத்ததெனு
மேலாந் திரையில் விரைந்ததற்பின்-கோலமிகு
மன்னுமலக் கூத்ததெனும் வண்டிரைகண் டேஜலா
லென்னுந்தி ரைபுகுந் தாரே. (558)

ஏற்றுஜலா லென்றியம்பு மேகத் திரையினின்று
போற்றுஜமா லென்றதிரை போய்நின்றே-
[தோற்றுகின்ற
துய்யபறு தானியென்னுஞ் சொற்றிரைநின் றேசமதா
னிய்யவதிற் சென்றார் நினைந்து. (559)

மாசற்ற வள்ளனபி வந்துசம தானினின்று
யீசத்தெ னுந்திரையி லெய்தியபின்-பேசுங்
குதறத்தெ னுந்திரையிற் கூடினார் வேத
மதுரத்தாற் றீன்விளக்கு மன். (560)

மின்னுகுத றத்ததெனு மெய்த்திரையிற் சென்றுபக்கா
பென்னுந் திரையதனி லெய்தினார்-பின்னு
முரைத்தனா வென்றதிரை யுட்போய் லிபாவெண்
டிரைதனிலே சென்றார் ளிந்து. (561)

சென்ற விபாவான திரையதனி னின்றுகிம்மத்
தென்ற பெருந்திரையி லெய்தினர்-வென்றி
வலுத்தான் கிபுரியா வண்டிரையி னின்று
சுலுத்தானி யெய்தினர் சூழ்ந்து. (562)

துய்யபெரி யோன்கிருபை துன்றி வருஞ்சுலுத்தா
னிய்யவென வோது நெடுந்திரைமட்-டுய்யவே
யண்ண லிறசூலை யடிபணிந்து கூட்டிவந்த
விண்ணவரெல் லாம்பிரிந்தார் மீண்டு. (563)

கலித்துறை

அடுக்காந் திரையிவை யெல்லாங் கடந்துபி னப்புறத்தி
னடுக்காமற் சென்று வொகதானி யத்தெனு நன்றிபல
மொடுக்காணு கின்றதிரை யைக்கண் டாரது
முன்பினுள்ள
முடுக்கான நாயன்றன் வென்றிகள் சேர்பெரு
மைத்திரையே (564)

அந்தப் பெருந்திரை மேலாக நின்று வல்லாபொருத்த
மெந்தப் படியிங் கிறங்குவ தோவென் றிருக்கையிலே
சிந்தித்து மென்றனைப் பாரு மென்றனன் றிக்கன்றியே
முந்தத் துவக்க முடிவுமில் லான்சொல் முழங்கியதே.
(565)

நறை மொய்த்தவென் றன்றிருத் தோழனை
நபிக்குமெந்த
னிறை றகுமத்துக்கு முன்னடு வாக விருக்குமுயர்
பொறை மொய்த்திடு மொருமைப்பா டதென்னும்
புகழ்திரையின்
மறை வத்தை நீக்கிடுமென் றேழனென்முன்
வருவதற்கே. (566)

பெருமைக் குரியவன்றன் னேவ றன்னைப்
பெருந்தலைக்கொண்
டொருமைப் பெருந்திரை நீக்கிய போது
வுயர்வணக்கந்
தருமொய்த் தவான ரெழுபதி னாயிரஞ் சப்புசப்பா
யருண்மொய்த் தவாகிற மட்டாய்றக் கூவினி
லாய்நிற்பரே. (567)



உகமட்ட தாக முதுகுயர்த் தாமல் றுக்கூவினிலே
செகமட்டி நிற்ப ரெழுபதி னாயிரஞ் சேர்ந்துசப்பாய்
முகமெட்டி வைத்த சுசூதிடை யாவர் முயன்றுகமட்
டகமெட்டி வைத்த தலையுமெ டார்சில வண்டர்களே.
(568)

பின்னு மெழுபதி னாயிரம் வானவர் பெருத்தசப்பின்
முன்னி களாய்நின் றிறையோனைப் போற்றி
[முழக்கமுடன்
மன்னெறி யான தசுபீகு செய்வர் மறுமைமட்டு
முன்னி யிடம்வலம் பாராம லுவது வோய்வின்றியே.
(569)

ஓங்கும் பெருமொரு மைப்பா டெனுந்திரைக்
குள்ளவொளி
யாங்கத் திரைக்குறும் வானோர்கண் மெய்யி
லெறிக்குமதாற்
றீங்கற்ற நாயன் றனக்கே பயந்து திடுக்குறவே
யேங்கிப் பெரியவன் றன்னேவ லெங்கென்
றிருப்பர்களே. (570)

வெண்பா

பார நபியொருமைப் பாடாந் திரைதரித்தங்
கோரியக்க முண்டோவென் றுன்னவே-தீர
வுணவுறக்க மில்லானுக் குட்பயந்து வங்கோ
ரணுவுமயங் காதே யமர்ந்து. (571)

கலித்துறை

அந்தப் பெருந்திரை நிற்கையி லோர்சொல் லகுமதுவே
யெந்தன் றகுமத்தி னுக்கடுத் தேகொளு
[மியானலவோ
சந்தித்த வாலம்பத் தெண்ணு யிரத்தையுந்
[தானுடையோன்
வந்துற்ற பல்படைப் பெல்லாம் வணங்க வுரியவனே.
(572)

அல்லா வசன முறக்கேட்ட போது வங்கோர்சுவடு
வல்லான் றகுமத் தடுக்க வைத்தார் வைத்தவச்சுவடு
சொல்லா லைஞ்ஞூறு வருசஞ் செல்தூரந் துலைந்ததென
மெல்லாக நிற்கையின் மீண்டுமங் கோர்சொல்
[விளங்கியதே. (573)

எந்தன் கபிபு முகம்மது வேயிங் கெழுந்தருளி
முந்து மெந்தன்றகு மத்தைமுன் னோக்கி முடுகியிங்கே
வந்திடு மென்றத னாலோர் சுவடெட்டி வைத்தபின்னு
மந்த மணிச்சுவ டஞ்ஞூறு வச்சிரத் தவ்வழியே. (574)

ஏடாரு மாலை நவிதாட் சுவடெட்டி வைத்தொருமைப்
பாடாந்தி ரையி னொளிபத்தி பாய்ந்து பரந்ததினாற்
கோடாத வள்ள னபிகண் பொருமற்
[கொடைக்கரத்தால்
வாடாத கண்பொத்தி நிற்கவங் கோர்சத்தம்
வந்திடுமே. (575)

எந்தன் முகம்ம தகுமது வேயென் றெதிர்ந்தொருசொ
லந்தர மேனின் றதிர்ந்திட வேநபி யச்சமெய்திச்
சிந்தை மயங்கையிற் பின்னு மங்கோர்
[சொற்றிருநபியே
யுந்த மனங்கலங் காதே யுமக்கில்லை யுள்ளச்சமே.
(576)

உள்ளச்ச மில்லையென் றல்லா வுவந்து
[வுரைத்ததற்பின்
வள்ளற் குணத்தி னபியிற சூறன் மனத்திடையே
யெள்ளத் தனையுங் கலங்கா திருக்கையி
[லெம்மிறையோன்
றெள்ளுத்த சத்தம் பினுநபி பால்வருந் திக்கெனவே.
(577)

என்னன்ப ரான முகம்மது வேயென்முன் வாருமென
முன்வரு நாயக னானவ னாமென வேமொழியப்
பின்னங்கு நின்றுட் புகுதவென் றெண்ணிய
[போதருள்சேர்
மன்னுஞ்சிங் காசனம் வள்ளலைக் கொண்டுமுன்
[வைத்ததுவே. (578)

அல்லா திருமுன்பு சிங்கா சனஞ்சென்ற றகுமதுவை
மெல்லாய் நிறுத்திய பின்பெருமை யாள்கின்ற
வேந்தனெனும்
வல்லான் றகுமத் தெனுமொளி யானதை வன்னமின்ன
தல்லாமற் கண்டனர் நம்மிற சூலுளத்
தாசைவைத்தே. (579)



அக்காட்சி யின்பரி சானதை நாக்கொண்
டறைந்திடவு
மிக்கா மிருத யத்தாற் பிரிப்பித்து விளங்கரிதாங்
கக்கா னொளிவத னாலே பொருதிரு கண்மருள
மக்கா நபிகண் மறைந்தது வோவென்றுள் வாடியதே.
(580)

வாடிப் பயந்திருகண் மூடிநிற்க வல்லோன் மனக்கண்
ணாடிக் கண்ணைத் திறந்தானக் கண்ணாலெமை
யாள்பவனை
வேடிக் கையாயி முகக்கட் பார்வைபோல விழிகளின்றி
நாடிக் கொடுதெரி சித்தா ரிருதய நற்கண்கொண்டே
(581)

அகக்கண் கொண்டாதி யைக்கண்டா ரதற்பி
னருண்டிருக்கு
முகக்கண் டிறக்க வொளிவு கண்டார் முதுபாலைதனி
னகக்கண் ணதனி லறல்வீசுங் கபீபு நபியிறசூல்
வகைக்கொண் டுருத்தரித் தாரில்லை மாவொளி
மட்டன்றியே. (582)

மட்டுப் படாத்திருக் காட்சிகண் டேபின்
மகிழ்ந்துளத்தி
லிட்டப் பட்டெம் மிறசூ லிரப்பா ரெமையாள்பவனை
யொட்டுப் படாதவ னேநினைக் காண்கு முறுதிதனைத்
தட்டுப் படாம லிலைப்படத் தாவென்பர்
[தாட்சிகொண்டே (583)

மருத்தா ரணிபுய நம்மிற சூலுக்கு வல்லவன்றன்
றிருக்காட்சி காண்கு மதைநிலை யாகத் திருட்டியன்றி
யுருக்காண லற்றவனைக் காண்கு மப்பரி சாலுளத்திற்
பெருக்காத லாய்மனக் கண்கொண்டு காண்பர்
பிரிசமுற்றே. (584)

ஆதி நபிசொல்வ ரல்லா தனது வழகியல்பை
யோதி யுங்கட்கு ரைத்திட வேயுருப் பம்மெமக்கு
வேத மிலையது வேதா லுருப மிலாதவனை
நீதி மனிதர்கள் பிறப்பித்துக் காண நினைப்பரென்றே.
(585)

மூன்போ லகுமது வேயென் முன்வாரு முடுகுமென
வின்பா யிறையங் கழைத்திட வோரடி
யெட்டிவைத்தே
யன்பா யிருவிர லிற்கிடை யெய்தி யடுத்ததனுல்
மின்பா யுமவ்வி டத்தேகொடுத் தானபி
[வேண்டியதே. (586)

வேண்டு நலவு களும்பெரும் வாழ்வும் விருப்பமுட
ளுண்ட வனீந்ததற் கத்தமுண் டோவிலை யவ்விடத்தி
னீண்ட நபியிரு கண்பார்வைக் காமொளி
[நீதியைத்தான்
ருண்டு மிருதையக் கண்கொண்டு கண்டனர்
[சக்கன்றியே. (587)

சக்கன்றி யுள்ளவனைக் கண்டுளம் பூரித்துத்
[தான்குளிர்ந்து
மைக்கொண்ட வான்புவி யுண்டாகு முன்பின்
[மறுமைமட்டு
மிக்கொன்றி யுள்ள வறிவுக ளியாவும் விதம்விதமா
யிக்கென்று சொல்நபி சிந்தையுள் ளேசென்
[றிடங்கொண்டதே. (588)

மக்கந பிக்கு மனப்புத்தி பூரண மானதற்பின்
றக்கவ னீயுன் னுடன்கேட் டதற்குத் தனித்தனியே
மிக்குட னுத்தரம் பேசு மதற்கு விரகுதந்தாய்
கக்கவ னேயென் றுடற்களி கூர்வர் கருணைகொண்டே.
(589)

உள்ளங் களிகொண் டிருக்கை யிற்றூக்க
[முயர்ந்தபுகழ்த்
தெள்ளு நபிக்குவந் தெய்திட வேயத் திருத்தலத்தில்
விள்ளு மனுவொன் றியங்காம லாரும் விசாரிப்பரோ
வள்ள லையன்றி மற்றெல்லா மடிந்தது
[வோவென்னவே. (590)

கொச்சகக்கலிப்பா

தூக்கந் தெளிந்ததற்பின் றுய்யோ னுடன்கேட்பா
ரார்க்கு மனதி லடங்கா யெமையுடையாய்
காக்கு மெமையுயர்ந்த கத்தாவே கல்க்கெவைக்குந்
தாக்க முள்ளாய்நீயே சலாமான நாயனென்றே.
(591)



நானே சலாமான நாயனென்று நன்னபியோ
டானே னுரைத்ததற்பி னத்தகிய் யாத்தெனவே
தானே னுயர்பருமான் றன்னு லொருநினைவு
தீனோர் புகழ்நபிதன் சிந்தையுள்ளே தோன்றியதே.
(592)

அகவல்

அத்தகிய் யாத்தென் றருணபி மொழிந்தா
ரெத்து மதின்பொரு ளென்றுமுள் ளமையு
முத்தி செறியல் முபாறக் காத்தின்
புத்திகொ ளும்பொருட் பொலிவுகள் பலவு
மழகிய நன்மொழி யஸ்ஸல வாத்தி
னெழில்செறி பொருளுள தெல்லாத் தொழுகையு
மத்தகிய் யாத்தி னருண்மொழிப் பயன்கேள்
சுத்தம தாகிய துய்யநற் செயல்களும்
லில்லாகி யென்ன நிகழ்த்துவை யெல்லா
மல்லா வுனக்கென் றழகிய கதியா
வல்லான் றிருமுன் வடித்துரைத் தனரே
கதியா வைத்திடுங் கபீலை நோக்கி
யதபா யஸ்ஸலாமு அலைக்கஐயு சுன்னபிய்யு
ஒறகுமத்துல் லாகி ஒபறக் காத்துகு
துரிசா மிம்மொழி சொல்லிய பொருள்கேள்
அல்லா மொழிவா னகுமது வேயான்
சொல்லிய சலாமுந் தூய்றகு மத்து
நல்ல கிருபையு நபியே யுமக்கென
வல்லான் மொழிய முகம்மது சொல்வா
ரிம்மொழி போலெமக் கின்பமொன் றில்லை
யம்மொழி யஸ்ஸ லாமு அலைனு
ஒஅலா யிபாதில் லாகிஸ் ஸாலிகீ
னன்மொழி மெய்வாய் நலங்கொ டோதினர்
மென்மொழி யாக விரித்தனர் பயன்கே
ளிந்தச லாமெங் களுக்கே யிறையவன்
சந்த வடியார் சாலீ குகட்கு
மென்றத ஞலிஃற யெம்முட னுரைப்பான்
றுன்றடி யார்களிற் றூசிக ளுளதே
தோசிக ளாயினுந் துய்யவ னேயுனை
வீசொரு பனென விசுவதிப் பார்களே

யுன்னைவிசு வதித்தோ ருவனென் கையினு
லன்னச லாத்தி னவர்களைக் கூட்டினே
னப்போ தறுசைச் சுமந்திடு மலக்குகள்
தப்பற வுவந்து ஷகாதத் துரைப்பா
ரரிய ஷகாதத் தகப்பொரு ளெல்லா
மொருவ னினைசரி யொப்பில்லை யென்றது
மீளவுஞ் சாட்சி விளம்பினர் முகம்மது
ஆளு மல்லா வடியா ரென்றுந
திடமுட னவன்றன் றிருத்தூத ரென்று
மடவுடன் மொழிந்தா ரறுசைச் சுமந்தோ
ராகையாற் றொழுகைக் கத்தகிய் யாத்து
மோகமாம் பத்து மூடிவு மாமே. (593)

கொச்சகக்கலிப்பா

வல்லா னெவர்க்கும் வணங்கப் பரமான
அல்லா மொழிவா னகுமதே கேளுமியான்
சொல்லாங் கியாமத்திற் றோன்ற வெழுப்பியுங்க
ளெல்லாரை யுங்கேட்ப தேதென் றறிவீரோ. (594)

உன்னு மனதி லுதிப்புமெல்லா ராசியமு
மின்னதென நீயறிவா யானறிய வல்லேனோ
வென்னுமொழி சொன்னதற்பி னேகபெரி
[யோனுடனே
பின்னுநபி சொல்வார் பெருத்தகியா மத்ததிலே.
(595)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

எங்களை நாடிக் கேட்ப
தெழில்பத விகளுண் டாக்கும்
பொங்குகா ரணங்கள் கொண்டு
புகழ்நன்மை களினு மென்னக்
கங்குல்வா னூதை வன்னி
கடற்றரை யமைத்த வல்லான்
பங்கய நபியை நோக்கிப்
பதவியே தென்னக் கேட்பான். (596)

அனைத்தையு முணர்கின் றோனே
யரும்பனி கூத நேர
நனைத்தொலு நிரம்பல் செய்து
நன்னிய ஜமாத்தி மாமோ



டினத்துடன் றொழுமென் றேவ
லேற்றிய வொகுத்துத் தன்னை
நினைத்துறத் தொழுது வாற
நீளொகுத் தெப்போ தென்ன. (597)

எந்தனன் னபியே நீரிங்
கியம்புத லுளதா மென்று
பிந்தவு மிறைவன் கேட்பன்
பெருத்திடு நன்மை யேதென்
றந்தரப் பசிக ளாற்ற
லனுதினஞ் சலவாத் தோதல்
சுந்தர விரவின் மாந்தர்
துயின்றக்காற் றொழலு மாமே. (598)

வெண்பா

வள்ளலா மெந்தன் முகம்மதியான் கேட்பதற்கு
வுள்ளதே சொன்னுரென் றோதியே-விள்ளுமிவை
நன்மை பதிமடங்காய் நாடோறு மேவளக்குந்
தின்மைகளை யோட்டுந் தினம். (599)

கலிவிருத்தம்

நல்லார்புகழ் நபிதம்முட னுவானது வின்றி
வல்லான்றிரு வுளமாயினன் மண்மீதிடை தொழுதால்
அல்லாகும்ம யின்னீஅசு அலுக்கென்ற துவாவை
யெல்லாரு மிரந்தாலதை யான்கைக்கொள்வ
னென்றே. (60.)

அல்லாகும்ம யின்னீஅசு அலுக்கென்ற துவாவின்
சொல்லாகிய மகனுவது துடர்நற்செயல் செயவும்
பொல்லாநினை விடவும்பலர் புகழ்நற் செயலுக்கு
மெல்லாவுட லுகையப்பட மிசுக்கினை யுவக்கல். (601)

நிந்தன்முனி வதனுக்கெனை நீகாவல்செய் திடவு
மந்தமிலை யோனேயுனை யன்பாயுவந் திடவுஞ்
சந்தம்பலர் பெறநீமிகத்.தானேயுவந் திடநீள்
நந்தும்பல வடியார்களை நானிங் குவந்திடவும். (602)

உருவன்றியு ள்ளானேயுன துயரும்றகு மத்தைத்
தருமென்றிடு நன்மைச்செய றனிலேமன துறலும்
அருள்கொண்டு வுயர்ந்தேயுன தழகானநல் லுதவி
மருவும்படி யேதேடுகி றேனென்றதின் மகனு. [603]

வெண்பா

அல்லா வுவந்துபின்னு மாலந்துனி யாவுள்ளோ
ரெல்லாரும் போற்று மிறசூலே-சொல்லார
ஆமனற் றசூலதென்னு மாயத்தை யோதுமென
வேமநபி யோது வாரே. [604]

பஃறொடை வெண்பா

கோமா னபிக்குவந்த குறுனுபத் தின்மகனு
ஆமா நபியுமவர் கவுமில்-மூமீனும்
அல்லா வொருவனென்று மான மலக்கவர்க
ளெல்லா மவன்படைப்ப தென்றுஞ்-சொல்லா
லேவல் செய்யும் பேர்களென்று மின்பகுறு
[னிறையோ
னுவதன்றிச சொன்னதிரு நாமமென்றும்-பூவில்
அகுமதுவுக் காயுவந்து ஆதிவர விட்டே
யுகமளவுந் தானடப்ப தோமென்று-மகலிடத்தின்
மற்று மிறங்கு மறைகளெல்லா மாதிவிடு
முத்ததிரு வசனமொக்கு மென்றுங்-கொற்றமிகு
மாதி படைப்பதென்று மாதந் துடங்கியுண்டாந்
தூதரெல்லா மொக்குமென்றுந் தோன்றவே-காதல்
தரவே விசுவதித்துத் தானீமான் கொண்டு
வரநல் லுதவி வழங்கி-யுரமாக
வீமான் றனைக்கொண் டிருப்பதற்கு நன்றியாய்க்
கோமா னெப்போதுங் குறையாத-சீமா
னவின்றத ஞனேவல் செய்துநா டாவிலகற்
றவிர்ந்திடுங்கோ ளென்றார்-தனித்து [605]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

கோதிலான் மொழிக்கு வீமான்
கொடுவரு மூமீ னோர்க
ளோதினு ரிறையெ வற்கு
மொழுகியுட் பட்டோ மேக



டதெல்லாம் பொறுத்தெங் கட்குத்
தெரியவே மீட்சி தானு
மாதலா லுன்பா லாமென்
றறைந்தன ரவர்க டானே. [606]

படைத்தவ னேவற் செய்யும்
பணிவிடை யொழியப் பார்மே
லெடுத்தியே வருத்த மாக
வீடுசெய் தனனு வில்லை
வடித்தவர் நன்மை செய்யில்
வான்பதி புகுவார் தின்மைப்
பிடித்தவர் கரிய கும்பிப்
பெருந்தழல் பெறுவ ரென்றே. [607]

பஃறொடை வெண்பா

முன்பே யுதித்த முகம்மதுளத் தேபெரியோன்
பின்போ ரிரப்பளித்தான் பேச-மன்புகல்வர்
வல்லா யியாங்கண் மறந்தறியாச் செய்பிழைக்குப்
பொல்லா வதாபிற் புகுத்தாம-லெல்லா
மிமைப்பொழுதே தானமைத்தா யெங்கடலை மேலே
சுமக்கரிய பாரஞ் சுமத்தாதே-நமக்குமுன்ன
முள்ளவடி யார்மே லுறச்சுமத்து மாப்போ
லெள்ளல்படு மடியா ரெங்கண்மேல்-விள்ளும்
வருத்தமுசி பத்தவைகள் வாராமற் காத்துப்
பெருத்தபிழை நீக்கு பெரியாய்-திருத்தியெங்கட்
குண்டாம் பழிப்பொழித்து வுட்கிருபை செய்விப்பா
யுண்டானே யுன்னுடைய தஞ்சமே-மண்டிவரு
பற்றலராங் காபிர்களைப் பாய்ந்துபொரும்
[போதெமக்கு
வெற்றிதா வென்றுரைத்தார் வீறுக-வுற்ற
பெருமகனு விதமாம் பெரியதுய்யோன் பின்னு
மருணபிக்கே தெரிய வறிவித்தா-னருளுமொழி
முத்தி லுதித்த முகம்மதுவே நீர்கேட்ப
தத்தனையுந் தந்தேனென் றேயறையச்-சுத்தநபி

வல்லானைப் போற்றி மகிழ்ந்தெமது கத்தாவுக்
கெல்லாப் புகழ்ச்சியுமென் றேத்தியபி-னல்லாருங்
கொண்டன் முகம்மதுவைக் கூறிநபி யேயெமைநீ
கண்டனையோ வென்றான்-கனி. (608)

கலிவிருத்தம்

இன்ன வன்னநிற மீதெனவி யம்பவரிதாய்
நின்ன லங்கொளிவு வெந்தனிரு கண்ணினிறைந்தே
மின்னு கண்ணினை மறைத்திட விளங்கிருதயத்
துன்னு கண்கொடுனை யுன்மைகொடு
[கண்டனனென்றார். (609)

என்ன வன்னநிற மெப்பரிசு செப்புமெனவே
மன்ன னோதிட முகம்மதிற சூலுரைசெய்வா
ருன்னு வன்னமுட னெப்பிணையி னுட்படவிலாய்
மன்னு கண்கள்கொடு மட்டிடவி லாதவிறைநீ. (610)

கண்ணி லேயெவர் கணிப்பவர் நினைப்பமுதிலா
வெண்ணி னலமை படாதவெகு விராசதநடப்
பண்ண லேயென வகும்மதுபு கழ்ந்திடுதலாற்
பெண்ணொ டாணில பிறப்பிலா தவனுரைத்தனன்.
(611)

கலியு வப்புளது வேயெனது காரியமிக
வலிது வென்னுய ரிராசத வளப்பமதனின்
பொலிவை மட்டிடுவ ரார்புவன லோகவிழிகள்
நவில கன்றவெமைக் கண்டிடவொ ணாதவனுனன்.
(612)

என்னை யன்றியிறை வேறிலை யிறைஞ்சவுரியோன்
பின்னை யாரெனை யொழிந்துபெரி யோனுளதுவோ
சொன்ன வாசக நடந்தவர்க ளன்புதுடர்வார்
பன்னிய தவங்களை யழிக்குமவ ரென்னையொழிந்தார்.
(613)

உகம தன்னிடை யுயிர்ப்பவை யனைத்தையுமியான்
மிகவெ ழுப்பியொரு வீசமும் விடாமலவர்தன்
றுகைக ணக்கினொடு கேள்விகடு வக்கமுதலாய்
வகைவ கைப்படியே கேட்குமொரு வல்லவனியான்.
(614)



சுத்த னுற்றுரைசெய் வானகும தேகருணையா
லித்த லத்துமை யுயர்த்திவச னித்தனனியான்
முத்தி யாலுமை யுயர்த்துபெரு முக்கியமெனக்
குத்த மானநல தோழனீ யுண்மையதனால். (615)

வெண்பா

என்னுடைய ஹக்காணை யென்றன் றிருநபியே
யுன்னுடைய ஹக்காணை யுண்மையாய்-மின்னவெனக்
குன்றியன்னைத் தோழனுண்டோ வுற்றவெல்லாந்
றன்னைநிகரில்லா தவனுரைத் தான். [கேள்தரவென்
(616)

ஒப்பா நபியே யுனக்குமெனக் குநடுவே
துப்பாசி யுமொழியுந் தூதுமுண்டோ-தப்பாமற்
சுந்தரனின் கல்பிடையே தோற்றியதை யென்னுடனே
தந்தருளென் றேகேள் தர. (617)

அங்குநின்று மெங்க ளகுமதிற சூலொருபாற்
பைங்குவளைக் கண்டிறந்து பார்க்கவே-யெங்கு
நலமாக நன்றிசெயு நாய னறுசின்
வலமாகத் தூங்குமொரு வாள். (618)

அல்லா முனிவதெனு மவ்வாளி னுலுதிர
நில்லாமல் வீழு நெடுந்துளியாய்-வல்லாயென்
மெய்யாழும் மத்தையிந்த மிக்கவா ளாலேவு
செய்யாதே யென்றார் தெளிந்து. (619)

ஆதி பெரியோ னழகுசெறி யெவ்வேத
மோதுநபி யேயுமைக் கொண்டே-தீது
வருத்தியதோர் காபிர்களை வாகாய் நெறியிற்
றிருத்தியவா னென்றுரைத்தான் றேர்ந்து. (620)

பஃறொடை வெண்பா

பின்னுநபி சொல்வார் பெரியவனே நின்னுடனியா
னின்னஞ் சிலவிங் கிரக்கவோ-மன்னு
நபியே யுமதுபிதா நல்லாதந் தன்னைப்
புவியின்மண்ணி னாலே பொருத்திச்-செவிதா
யமைசெய்யிரண் டாயிரத்தாண் டன்னுளின் முன்னே
யெமதுடனே நீர்கேட்ப தெல்லா-முமதுடைய

கல்பு மனமுங் களிகூர வேமிகுதி
நல்கவென வேயறுதி நான்செய்தே-னெல்கலன்றி
வேண்டியதெல் லாங்கேளும் வேதநபியே
[தருவேனென்
றுண்டவன் சொல்லநபி யங்குரைப்பார்-நீண்டபுக
ழாதந்தனைப் படைத்துன் னுனவல்ல பங்கொடுயிர்
போதமுற வேபுகுது வித்துச்-சோதி
மலக்குகளைக் கொண்டவர்க்கு வண்டாழ்ச்சி செய்வித்
தலக்கண்ஹவ் வாவைக் கலாலாக்கி-நலக்கமில்லாப்
பொற்பதி யிலாக்கிப் புகலரிய வாழ்வளித்தாய்
மிக்கவிபு றுகீம்வே தாம்பர்தமை-முக்கியத்தா
லுன்றோழ னுக்கிவித்தா யோங்கியமூ சாநபிக்கு
நின்றனுடன் பேசிநிற்க நீகொடுத்தாய்-நன்றி
இதிரீசு நன்னபிக்கு வீய்ந்தாய் சுவற்க
மதிரோசை தாவூதுவே தாம்பருக்கு-மதுர
சபுறென்னும் வே[illegible]மது தன்னையளித் தாய்நீ
நபிசுலையு மானபிக்கு நட்பாய்-புவியிடத்திற்
றோற்றுகின்ற வூர்வையுடன் றுல்பறவை வற்கமுநீள்
காற்றையவர் சொற்கேட்கக் கற்பித்தாய்-
[நாற்றிசைக்கு
நல்லபுக ழீசா நபியையுன்றன் வல்லபத்தால்
மெல்ல வமைத்ததுய்ய வேந்தனே-சொல்லுமிவர்
தன்பாற் கொடுத்த தடவரிசை யைப்போல
வென்பாற்றந் தாயோ வெனவிறசூ-லன்பாக
வாதியுடன் கேட்க வருமதே யாதமையா
னேதுமெந்தன் வல்லமையா லுண்டாக்கிச்-சோதி
உயிர்கொடுத்தேன் வானரைக்கொண்
[டொண்டாழ்ச்சி செய்வித்
தியல்புடனே சொற்கத் திருத்தினே-னயமறந்தென்
னேவன் மறுத்ததினு லின்பசுவர்க் கம்விட்டுப்
பூவி லெறிந்தவர்செய் பொல்லாங்கை-மேவும்
மறுமைமட்டாய்ச் சொல்லிவித்தேன் மாதவத்தி
கிருபையுட னல்லிபுறு கீமை-யுறுதியுட [லென்றுங்
னின்பமுறு மென்றோழ னென்றதற்காய்
[நின்னையென்ற



னன்புமிகுஞ் சினேகி யாக்கினேன்-முன்புசொன்ன
தோழர் தனிற்சினேகி சொல்விற் பெரிதலவோ
வூழினபி யேயுள வேத-மாழியதாந்
துய்யதவு றுத்ததனிற் றோன்றவெல்லார்க் குங்கிருபை
செய்யு மெமது சினேகியென-மெய்யா
யெழுதிவித்தேன் மானிடவ ரெல்லார்க்குஞ் சொற்கப்
பழுதகல்மா ராயமொழி பரவி-முழுநரகிற்
செல்லாம லச்சந் தினம்பூட்டி யேயறிவு
சொல்லவென வேயுமையான் றாதாக்கி-நல்ல
வுறுதியுள நின்னுளத்தை யுள்ளி மா [illegible]லு
மறிவுகொடு மடவ தாக்கினே-னெறியுமுமக்
குள்ளநபிப் பட்டமதற் கூறுமுன்பின் வாராமற்
றெள்ளிமையாற் காத்தேன் றிருநபியே-விள்ளுகின்ற
விம்மை தனிலுமெவு மல்கியா மந்தனிலு
மும்முடைய கீர்த்திதனை யோங்கவைத்தே-
[னும்முடைய
வும்மத்தோர் தம்மைமற்று முள்ளநபி மாரும்மத்தின்
கிம்மத்துட னேற்ற மாக்கினே-னம்முற்
றிலங்குமம்பி யாக்களவ ரெல்லார்க்கு முன்னே
நலங்கொண் டுமைப்படைத்தே னு டிப்-பலன்கொள்ளு
மெல்லார்க்கும் பிந்த விலங்கியதோர் முத்திரைசேர்
நல்லார் புகழுநபி யாக்கினே-னெல்லாருஞ்
சேர்ந்தகியா மத்திற் றிரண்டநபி மார்க்குமுமை
யாய்ந்தபெருஞ் சாட்சி யாக்கினேன்-வாய்ந்தவுமக்
குள்ளஉம்மத் தோரைமற்று முள்ளவும்மத் தோர்க்குத்
தெள்ளுபெருஞ் சாட்சி செப்புவித்தேன்-வள்ளலெனு
மூசா தனைப்புவியின் முன்வானின் கீழ்நிறுத்தி
மாசா னதின்றி வசனித்தேன்-பேச
வறுசின்மே லேற்றிநின்னோ டார வசனித்தேன்
பிரிசமாய் நீரெதிர்த்துப் பேசி-வரிசையா
னின்றபெருந் தலத்தி னீண்முகற்ற பாமலக்குந்
துன்றுபட்டம் பெற்றவெந்தன் றூதர்களு-
[நினறதுண்டோ
மேவு மிதிரீசை மிகவுயர்த்தி னேனதிலு
மாவரிசை யோங்கி வளர்ந்தூதலங் காப
கவுசையினி யவ்வதனுங் கண்ணுந் தலைமே

னவமா யுயர்த்தினே னம்மைப்-புவியின்முன்னுள்
தாவூது நன்னபிக்குத் தான்சபூற தென்னுமெந்தன்
மாவேதந் தன்னை வழங்கினதான்-மேவுகின்ற
பாத்திகாத் தன்னைப் பயிலுங்குறு ஆனைமிக்க
கீர்த்தியாய்த் தந்தேன் கிருபையாய்ச்-சாத்திரமா
மெந்தன் குறுஆனி விருகூறத் துண்டதனை
யுந்தனும்மத் தோர்தெளிந்து வோதுகிலோ-விந்த
துனியாவிற் காரியமுஞ் சொன்மறுமை தன்னி
லினிதான காரியங்க ளெல்லாங்-கனியாக
வோதுமவன் சிந்தைதனக் குற்றதையீய்ந் தேகேள்வி

யேதுமன்றிப் பொற்பதியி லேற்றுவனென்-றுதிமொழி
யோதுவதால் வள்ளனபி யுண்மைப் பெரும்பொருளே
யேதமில்லா சூறத்த தேதெனவே-சோதிசெறி
பக்குரு வென்னும் வரிசையுள்ள சூறத்து
மிக்குரு ஆலஇம் றானு-மிக்கவிரு
சூறத்தி துவெனவே சொல்லியபின் றேன்றலுட
னீறற்ற வன்றிருந்த நிகழ்த்துவான்-வீறுற்ற
செய்கருமஞ் செய்யுஞ் சுலையுமா னன்னபிக்குக்
கைகருமஞ் செய்யவெனக் காற்றுடனே-வையகத்தி
லூர்வை பறவையவை யொக்கவிடுத் தேனதற்காய்க்

கோர்வைத் தயமன் குறித்தசுரூ-தோர்மையுடன்
செய்யுமு மக்குமுமைச் சேர்ந்தவும்மத் தோரவர்க்கும்
வையகங்க ளொக்கவிட மாக்கினேன்-றுய்யவெந்த
னீசாத னைப்பிதா வின்றியமைத் தாவிவிட்டேன்
மாசா னதற்ற முகம்மதுவே-பேசுமதற்
கென்பேர் தனிலொருபே ரியானிங் குமக்களித்தேன்
முன்பே யென்பெயர் மகுமூது-அன்பாய்த்
தகமையுட னேபுகழத் தான்பட்டேன் போத
வகமகிழும் புகழ்ச்சி யங்குளோர்-செகமிலும
தும்மத்தோ ருக்காமீ தென்னவே யுண்மையுட
னெம்மைப் புகழுமிவ ரென்றுதந்தேன்-செம்மைசெறி
யெம்முடைய நாமமுட னேற்றதிரு நபியே
யும்முடைய நாமத்தை யொன்றுவித்தே-னம்முடைய
வான்புவிக டோறுமெந்தன் வரன்பேருங் கூறிடத்திற்
றேன்பயிலு முன்பேரைச் செப்புவித்தேன்-றீன்பயிலு



மோதீன்கள் வாங்கு முயன்றுசொலு கின்றதையுஞ்
சோதிபெற வெம்மைத் தொழுமதையும்-நீதியுடன்
கைக்கொ ளென்றுய்யக் கலிமா விரண்டுமங்கே
யெக்கினுச் சொல்வா ரெனில். (621)

கலித்துறை

இந்தப் படியிறை யோனபிக் கீய்ந்து வியம்பநபி
சிந்தைப் பிரிசங்கொண் டல்லா தனைப்பெருந்
[திக்கன்றியே
யெந்தத் தலமு நிறைந்தவ னேயென் றெழப்புகழ்ந்து
பிந்தப் புகல்வர்தம் மும்மத்தி னோர்செய்
[பிழைதனக்கே. (622)

மற்றுள வும்மத் தினைப்போல வேஷத்தை
[மாற்றியெமக்
குற்றிடு மும்மத் தினையிகழ்ந் தேபன்றி யோடுமுனி
பெற்றிடு வானர மாக்குவ தின்றியும் பேர்புவியா
லுற்றுச் சுருங்குவ தின்றியுங் காரெம் முடையவனே.
(623)

எந்தன் கபீபு முகம்மது வேயிவ் விரப்பதனை
நிந்த னினைவின் படியளித் தேனென்று நிண்ணயச்
[சொல்
வந்தங் கிறங்கிய தானயி னுருண் மகிழ்ச்சிகொடு
பிந்தச் சிலவிரப் பாரும்மத் தோர்கள்
பிழைக்கவென்றே. (624)

பொல்லாப் பிழைசெயு மென்னும்மத் தோர்கள்கனல்
புக்கலன்றி
வல்லா யெமக்கு வழங்குவென் றோத வகுத்ததுய்ய
அல்லா மொழிவா னபியே யெழுபதி னாயிரரைச்
சொல்லா டித்தந்தனன் மன்றுடிக கேளுஞ்
சுகம்பெறவே. (625)

விருத்தம்

எழுபதி னாயி ரம்பே ரெமக்கிவர் போதா தென்ன
வெழுபதி னாயி ரத்துக் கெழுபதி னாயி ரமாங்
குழுவெனும் பெருக்கப் பேரைக் காற்றவன் றந்தே
[னென்ன
வெழுதரி தான வல்லா வின்னுமே லீவா யென்றார்.
(626)

கலித்துறை

எங்கள் முகம்மது கேட்பதற் கேயின்று மூன்றுகுப்பஞ்
சங்கை முகம்மது வேகைக்கொள் வீரெனத்
தானளித்தா
னிங்கிதன் கைக்கொள்ளு மென்றோதி யேயிறை
யீந்தகுப்ப
மங்கதி னெண்க ளிறைக்கன்றி யார்க்கு மறியரிதே.
(627)

தேடு மிரப்பவை யெல்லாந்தந் தானென்று
சிந்தையுள்ளே
நாடி யிறையைப் புகழ்ந்திற சூலிந்த நானிலத்தைத்
தேடி வரநின வெட்டிய தாலுமிச் சிந்தைகண்டு
வேடி லடங்கரி யோனபி யேநிலு மென்றனனே. (628)

உமக்கு முமதுய ருமத்தி னோருக்கு முள்ளபடி
சுமக்கும் படிக்குச் சிலபறு லேவினன் சொற்செய்பறுல்
நமக்கு விதியென்று சுக்கூறு செய்தேநல்ல நற்செயலா
லமைக்குந் திருநபி கைக்கொளு வீரென்
றனைநந்தனனே. (629)

வல்லான் பறுலை விதிப்பா யென்றோத வகுத்ததுய்ய
அல்லா மொழிவான் முகம்மது வேதின மன்புவைத்துச்
சொல்லா ரவைம்பது நேரத் தொழுகையைத்
தொல்புவியின்
மெல்லாய்த் தொழுமென நன்னபி யோம்பட்டு
மீண்டனரே. (630)

மீண்டிடுங் கால மிறையோ னபிக்கு விரும்பிநலம்
பூண்டிடு மிக்கச் சலவாத்துச் சொன்னபின் போதநபி
யாண்டவன் சொன்ன சலவாத்தைக் கேட்டக
[மேமகிழ்ந்து
சேண்டிக முந்திரு மூசா நபிபக்கற் சென்றனரே.
(631)

சென்றத னபி மூசாவுங் கேட்பர் திருநபியே
மன்றன் மிகுத்த புகழும்பி யாவில் வரிசைபெற்று
நின்றவ ரேயுமக்கு முப்மும்மத் தோருக்கு
[நித்தமுள்ளோ
னென்றுஞ் செயப்பறு லுண்டோ விதித்த
[தியம்புகவே. (632)



துய்யோன் றினந்தின மைம்பது நேரந்
[தொழவிதித்தான்
கையேத் துவந்தன னியானென்ற போது கனகபதி
செய்யார் புகழ்நபியே யும்மும்மத் தோரிது
[செய்யப்பத்தார்
மெய்யா னுடன்சென்று மன்றாடு மென்றபின்
[மீண்டுஞ்சென்றே. (633)

வெகுத்தஞ்ச மான பெரியவ னேயென்னை
[மேவும்மத்தோ
ரொகுத்தன்ப துந்தொழப் பத்தாரென் றோத
[வொருவன்சொல்வான்
பகுத்தைந் திற்பத்து விட்டையெட் டொகுத்துப்
[பணியுமென
மிகத்தஞ் சமானபி மூசா நபிபக்கன் மீண்டனரே.
(634)

மீண்ட முகம்மது மூசா நபியை வினவியென்னை
யாண்டவன் பத்தொகுத் துக்குறைத் தானென
[வாலமெல்லா
மீண்டும் புகழ்நபியே யும்மும்மத் தோர்க
[ளிவைதனையும்
பூண்டுஞ் செய்தே நிறைவேற்றப் பத்தார்கள்
[புவியிடத்தே. (635)

ஆதந் தனையங் கமைக்கரண் டாயிரத் தாண்டின்
[முன்னே
நீதி பெரியவ னீர்கேட்ப தைத்தர நிட்சயித்தான்
சோதி பிரிசங்கொண் டல்லா திருமுன் றுடருடனே
போது மென்றுரைந் துமட்டமன் றுடினர்
[போர்மைகொண்டே. (636)

நாலா வதிலிறை பக்கற்பத் காகவு நாற்பதொகுத்
தேலா குறைத்தன னைந்தாம் விடுத்த மிரக்கமுற்றே
பாலா மொகுத்தைந்து விட்டைந் தொகுத்துப்
[பணியுமென
மேலான் விதித்தும் றமலா னேன்பு விதித்தனனே.
(637)

ஐயாறு முப்பது நோன்பைந் தொகுத்தையு மாதிதின
மெய்யாய் விதித்திடக் கைக்கொண்டு மீளும்
[விசேடமதைத்
துய்யோன் றிருநபி மூசாவுக் கோதிடச் சொல்பறுனு
கையேத் துவந்ததுஞ் செய்திட வேவன்பு
[காணென்பரே. (638)

ஏகன் றிருமுன்பின் யான்செல வேவெட்க
[மெய்துமிதற்
காகப் பயந்துவந் தேனபி யேயென் றவர்க்கெதிரே
மேகங் கவிந்த குடையா ரிருக்கின்ற வேளையங்கே
மாகந் தனைப்படைத் தோன்சத்த நேசிக்க வந்ததுவே.
(639)

ஆராரும் போற்று முகம்மது வேயுமக் கானவெந்தன்
மாராய முந்தந்தேன் மனங்களி கூர்ந்துகொள்
[மாவணக்கஞ்
சீரான வன்ப தொகுத்துத் தொழுமச் செழும்வரிசை
நேராயிவ் வைந்தொகுத் துக்குத்தந் தேன்றொழு
[நித்தமுமே. (640)

துன்மை துண்டாக்கு முகம்மது வேயும்மைச்
[சூழும்மத்தோர்
நன்மை யொன்றேசெய் யிற்பத்தாய்ப் பெருக்கியும்
[நான்றருவேன்
றின்மை யொன்றுக்கொன் றெழிந்தேற்றி டேனந்தத்
[தின்மையையா
ஞென்மை சண்டேகுத்திப் பாரேன் கிருபைக்கண்
[ஞேக்கங்கொண்டே. (641)

எந்தன் வலுப்பப் பெருப்பத்தி ஞனையெப்
[போதுங்குன்றுச்
சந்த மிகுமென துள்ளமை யான தவநபியே
யந்த வறுசி னுயர்த்தியி ஞனை யளித்தனனியா
னுந்த னுகையத்துக் கெல்லாந் திருவுளந்
[தந்தேனுமக்கே. (642)



இந்தப் படிநம் மிறையோன் கிருபையோ
[டேத்துகையாற்
சந்தித் துச்செய்தி சொல்மூசா விருந்த தலத்திளகி
இந்துற் றவானத் தான்முன்னின் வானி லிறங்கையிலே
கொந்துற் றுவீசுஞ் சிபுரீ னபியுடன் கூடினரே. (643)

மன்றன் மிகுத்த நபியிறசூல் முன்னின் வானகத்தே
நின்றிவ் விரவிற் செலுநேரம் பார்க்கையி னீளிதல்லச்
சென்றிடு நேரஞ் சிறிதென்கை யாலெனச்
[சிந்தைகொண்டு
வென்றியுள் ளோன்றனைப் போற்றவவ் வான்கடை
[விட்டனரே. (644)

சந்தவிருத்தம்

வாசறிறந்திட வள்ளன்முகம்மது வானவர்
[கோனுடனே
யாசினியிற்புற மாயினபோது வடற்சிபு ரீலுடனே
நேசமிகுத்தவ ரேயிரவின்று நெருங்கிரு ளாகுமென
தேசமிலங்கிட வானவர்தம்முயர் சிறகை விரித்தனரே.
(645)

சிறைவிரியப்படு வானெழுவானிவை சேர
வெளிப்படவே
நறைவிரியும்பொழில் ரண்டிருள்ரண்டு நபிக்கு
[மிகத்தெரியு
மிறையருடங்கிய வானவரேயிரு ளும்பொழி
லேதெனவே
மறைமொழியுந்திரு வாய்கொடெமக்கு வடித்துரை
யும்மெனலால். (646)

வெண்பா

வென்றி யமரர்பதி விள்ளுவார் வள்ளலுடன்
றென்ற லுலாவுஞ் செழுஞ்சோலை-மன்றற்
றிறமதாய் வீசுந் திமிசுக்கு நாடொன்
றறமிகுமெம ஞடொன்றென் றூர். (647)

கண்டவிரு ளிரண்டுங் கத்தா வுடன்பேசி
மண்டலத்தில் வந்த முகம்மதுவே-தண்டு
மருமனிய நாடொன்று மாரம் விரிஷாமென்
றுரமொழிநா டொன்றென்று ருற்று. (648)

முன்வான கத்தினின்று முஸ்தபா நன்னபியை
யன்பாக வேந்தி யமரர்கோன்-பொன்போற்
றரையருகே வந்து சகுலா வாமாற்றின்
கரையருகே வைத்தார் களித்து. (649)

—□—

# 11. நபியுல்லா புவியில் பனியிசுறாயீல் கூட்டத்தைக் கண்ட சிறப்பு

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அத்தல மதிற்சில நரர்கடா
னங்குளமூ சாகவும தாகினோர்
முத்திகொள் வதற்குநல் வழிவந்தோர்
முன்னொடுசொல் வாரழி வற்றதோர்
கத்தனவ னுக்குமெம துக்குநீர்
கல்பினிலீ மான்கொளுமென் றோதவே
தத்துவ நலச்சபு றயீல்கவும்
தம்முட னுரைப்பரவ டத்துளே. (650)

உங்களி லுசாவியிவ ராரென
வோதியிவர் பேரையுணர் வீர்களோ
தீங்களி விலங்குமுக வானரே
செப்புமிவர் நாமமறி யோமெனக்
குங்கும வலங்கலணி தோளினோர்
கொற்றவர் முகம்மதிவ ரென்கையாற்
பங்கைய பதத்திவர் தமக்கல்லா
நபிப்பட் டமுமளித் தானனோ. (651)

ஆமெனவின் னோரவரோ டோதலா
லாங்குள மூசாகவும தாகினோ
ரேமநபி யாதிவிடு தூதனு
ரென்றவரீ மான்கொடுவந் தென்சொல்வார்



பூமியிலி ருக்கையின்மூ சாநபிசொன்னு
ரெப்போது முகம்மதைக் கண்டீர்களாய்
நாமமுற வென்றன் சலாமதை
நண்ணியவ ருக்குரைசெய் வீரென்றார். (652)

வெண்பா

மூசா நபிமொழிந்த முன்சலாத் தின்பிரத்தி
வாசாம வள்ளல் வடித்துரைத்தே-பேசுவா
ருங்கண்மனை யெல்லா மொழுங்கொத்
வெங்கண்மன மொற்றறி னாலே [திருப்பதென்னோ
(653)

ஓங்கு மனைகளெல்லா மொத்திருப்ப துஞ்சரியே
நீங்க ளிருப்பதென்ன நீதிதான்—றாங்குங்
கனியாந் திருநபியே காய்ந்தொருவர் தம்மை
யனியாயஞ் செய்யோ மதால். (654)

வாசன்முன்றி றோறு மரித்தவரை நீங்கள்கிள்ளி
நேசமுட னடக்கு நீதியென்னோ-பேசும்
பவுத்தான துங்குலைந்து பாரிலிவர் போனு
மவுத்தாவோ மென்றநினை வால். (655)

அறந்தாவு மாந்தர்களே யம்புவியி னீங்க
ளிறந்தா லழுவீரோ வென்னத்-திறந்தாவி
யிட்ட முளைதா னிறையறுத்தா னென்றுகையப்
பட்டிருப்போ மென்றார் பணிந்து. (656)

ஆல நபியவர்கட் காயாச முண்டோவென்
றேலவங்கண் கேட்க வெதிர்ந்துரைப்பார்-
[ஞாலமெங்கு
மாவிக் குறுந்துணையே யாயாசத் தில்லுழல்வோர்
பாவிகடா னென்றார் பரிந்து. (657)

தோவத்தைச் செய்து தொழுவோ மிவைகளன்றிப்
பாவத்தி லென்றும் பயின்றறியோஞ்-சாவற்றோ
னோயாக் கிருபை யுளநபியே யாங்க
ளாயாசப் பட்டுமறி யோம். (658)

ஆயாச மன்றியுங்கட் காவிபோம் வாறதென்னோ
வோயா வணக்க முடையீரே-வாயவெங்கட்
குண்டா மிரண மொழிந்தால் மலக்காவி
கொண்டேபோ வாரென்றார் கூண்டு. (659)

சந்தவிருத்தம்

உங்கட்குள வுயர்பீடிகை யொன்றும் வழங்காதே
னெங்கட்குறு நபியேயிது வேதென் றறிவீரோ
திங்கட்கதிர் திகைகால்வெளி திவசமிவை யுடையோன்
வங்கக்கட லறலைக்கொடு மழையைச்சொரி வித்தால்
(660)

செய்யிற்பயிர் வெள்ளாண்மைகள் செய்வோம்விளை [வெய்துங்
கொய்யத்தனை மணியானதைக் குவிற்றோர்களஞ் [செய்தே
பையப்பய வனைவோர்களும் பருகுமள வதனை
மொய்யத்து வெடுத்தேயமு துண்போ முகம்மதுவே
(661)

கலிச்சந்தவிருத்தம்

உங்கணகர்க்குறை காலியுமன்னனு முள்ளது [வோவெனலா
லங்கமுகிற்குடை நன்னபியேபிழை யானது [செய்தறியோந்
திங்கவெனத்திசை தோறுமிலங்கிய தீனெறி [செய்திடுவோ
மெங்கணகர்க்குயர் காலியுமன்னனு மில்லையெ
னப்புகல்வார். (662)

செத்திடுவோர்க டனைச்சிலர்கண்டு சிரித்திடு [காரணமென்
சுத்தமதாகிய வாசனமானவர் சொல்லுமெ [னப்புகல்வா
ரித்தலமீதி லிருந்துவீமானொ டிறந்தவ ரென்றுமிகப்
புத்திகளித்து மகிழ்ந்திடுவோநறை பொங்கு
[முகம்மதுவே. (663)

கலிவிருத்தம்

ஏதுக்கழு வீரென்றுநம் மிறசூனபி மொழியப்
பேதைப்பெரு மடமாதர்கள் பிள்ளைப்பெறின் மதலை
வோதுற்றசொல் லீமன்பெறு வதுவோவல வோவென்
றுதிக்குரு கிப்பீடைகொ டழுவோமென மொழிவார்.
(664)



ஆணைப்பெறி லென்செய்குவி ரறையீரென வதனு
னுணைப்பகல் விட்டன்புட னோர்திங்கணன் னோன்பு
பேணிப்பிடிப் போம்பெண்பெறிற் பெரிதாயிரு [திங்கள்
காணப்பிடிப் போமென்றவர் கவல்வார் நபியுடனே.
(665)

செல்விக்கெழி றருனோன்பிரு திங்கட்பிடிப் பதெனோ
கல்விக்குறு மூசாநபி கவல்வாரெம துடனே
புல்லிக்கொடு பெண்பெற்றவர் பொறுமைச்சுக்குறு [செய்தா
னல்கப்படு மவருக்கிறை நன்மைப்பொரு ளென்றார்.
(666)

வேற்றுச்சந்தம்

புலிகொல் மாமிருக முங்களுயிர் போக்கலுளதோ
மலிவிலங் கினைவதைத்து மிடைசெய்து மறியோ
மெலிவதெங் கடமை மெலியமிடை செய்யவிலையென்
றலிதமக் குரியமா துலரோடன் பொடுசொன்னார்.
(667)

சந்தவிருத்தம்

ஒட்டகைதன்னுட னாடொடுமாடுக ளுங்கட [மக்குளதோ
மட்டவிழ்தோணபி யேயுளதாமது வஞ்சக [மொன்றுமிலா
திட்டமுடன்பொது வாயுறநிற்கு மிதின்சடை [நூலைநெய்தே
புட்டமதாக வுடுத்ததினீடைச போதநு
[கர்ந்திடுவோம். (668)

வெண்பா

நேரா யளந்து நிறுத்தும் பரிமாறு
வீரோ வெனவிறசூல் விள்ளவே-யாரார்க்கும்
வள்ளனபி யேயாங்கள் வைத்துநிறுக் கவளக்கக்
கொள்ளவிலை விற்கவிலைக் கூண்டு. (669)

ஆங்கவர் களுக்கு வரியகுறு ஆனிலொரு
வோங்கியசூ றத்தோதிக் காட்டியே-பாங்காந்
தொழுகை நெறியடவு தொல்நோன்பு தீனி
லொழுகப் படிப்பித்தா ருவந்து (670)

அத்தலத்தி னின்றவுய ரம்பியாக் கட்குவெல்லா
முத்திரைசேர் வள்ளல் முகம்மதுவை-யித்தலத்தின்
மண்டிவரு மியாசூசு மாசூ சவரிடத்திற்
கொண்டுசென்றார் வானவர்கள் கோன். (671)

யாசூசு மாசூ சவனிநர ரோர்வடிவாய்
வீசு நரரின் மிகுதியாய்ப்-பேசு
மவரொருவ ராயிரஞ்சே யங்கே பெறுமட்
டெவருமிற வாதிருப் பாரே. (672)

ஆங்கவர்கண் மூன்றுவகை யாமா மொருவகையா
ரோங்குமர மீந்தி னுயரம்போற்-றீங்கர்மிக
நெட்டையர்க ளோர்வகையார் நீளமதிற்
கட்டையர்க ளோர்வகையர் காண். (சூளையர்சாண்
(673)

கலிவிருத்தம்

அங்கவர்க டன்வினை யடர்ந்தெம திடத்தே
யிங்கில்வரு மென்றுமுன் னிருந்துலகை யாளுந்
துங்கமிகு செங்கைமன்னன் துல்கறுனை யென்போ
ரிங்கித குணத்தின ரிரும்பொடுசெம் பியம். (674)

இதுவும்-அது

வஞ்சர் வாற மலைத்தொண்ட திலவ
ரஞ்சத் தீயி லுருக்கி யடைத்தனர்
தஞ்ச மானவ ரத்தலங் கண்டபின்
செஞ்சொல் வள்ள னபியைச் சிபுறயீல். (675)

பைத்தல் முகத்தீ சூரின் மலைமிசை
யுயர்த்திக் கொண்டுசென் றுற்றனர் தீனபி
யியத்தி னேடு வெழிற்றூணிற் கட்டிய
கயற்றி னிற்கும் புருக்கினைக் கண்டனர். (676)

ஆதியுகை யப்படி யடற்பரி புருக்கி
னீதிகொள் முகம்மது நிறுத்திய தலத்தே
காதியக லாதபடி கண்டுவதின் மீதே
வேதியர் தரித்திட விசைப்பொடு பறக்கும். (677)



அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

இலகிய செங்க ணிமைத்து முழிக்குமு
    னெங்கள் முகம்மதுவை
மலர்செறி சோலை வளர்ந்த நடுப்பதி
    மக்கம திற்செலவே
யுலகிலெ ழிற்சிபு ரீலொடு பின்பு
    வுரைத்தன ரென்கவுமோர்
நலமிகு ருஜிடை போய்வரு கின்றதை
    நவிலுவர் பொய்யெனவே. (678)

—□—

## 12. நபியுல்லா மக்கத்திற்கு வந்த சிறப்பு

வெண்பா

பொய்யென் றுரைத்தாலும் போற்றுமபூ
[பக்கரன்பாய்
மெய்யென் றுரைப்பரென வீறினுற்-றைபய
நழுவி நபியிறங்க நல்லமரர் கோமான்
றழுவி யெமையணைத்தார் தான். (679)

மக்கந் தரித்த முகம்மதைவிட் டண்டர்கோன்
செக்கர் பெருவானிற் செல்லவே-மிக்கநபி
செங்கையபித் தாலிபுதன் செல்வியும்மு கானியா
ரங்கவள விற்றரித்தா ரன்று. (680)

முத்திரைசேர் வள்ளன் முகம்மதனு ரவ்வளவி
னித்திரைசெய் தோர்விழித்த நேரத்தே-பத்திசேர்
மேனியார் செங்கயற்கண் மின்னார் செறிந்தவும்மு
கானியார்க் கோதினார் காண். (681)

இன்றிரவி லிங்கே யிசாத்தொழுதே னென்றுபின்னுஞ்
சென்றதல மும்நலமுஞ் செப்பியே-துன்றுபஜிர்
மீண்டுமிங்கே வந்து விரும்பித் தொழுதேனென்
றுண்டோனபி சொன்னா ரவர்க்கு. (682)

வெய்யோன் றிசைமாறி மீண்டடைந்தா லும்மறந்தும்
பொய்யோ திடாத புகழ்நபியே-மய்யலறக்
குறைசிகளோ டிவ்வசனங் கூறுகிற்பொய் யென்பா
ரறைய வரிதென்று ரவர்க்கு. (683)

வண்மையபித் தாலிபுக்கு வாய்த்த திருமகளே
யுண்மைக் கழிவுகளுண் டோவெனவே-திண்மை
பஜிர்தொழுத பின்புமக்கப் பள்ளி முகப்பேறிச்
சசியின்மிக்க செம்முகத்தார் தான். (684)

ஆவிக் குறுந்துணையா யானவச பாக்கண்முன்பாய்
மேவி முகம்பார்த்தே விளம்புவார்-காவியொன்றுங்
கண்டுயிலு மின்றிரவு கக்கன் விடுஞ்சிபுரீ
றண்டி யெமையெழுப்பித் தான். (685)

வந்த புருக்கின் மகிழ்ந்தேறு மென்றுரைக்க
வந்த புருக்கி லவதரித்தே-முந்த
பைத்தல்முகத் தீசளவாய் வான்கடந் தப்பா
லியத்தோடறு சேறின னியான். (686)

எம்மைப் படைத்தோ னெமக்குமெமைச் சூழ்ந்திருக்கு
மும்மத் தவர்க்கு முறுவணக்கம்-கிம்மத்தா
லஞ்சுநே ரந்தொழுமென் றங்குவிதித் தானென்றார்
மஞ்சி னிழற்றரித்த மன். (687)

சந்தவிருத்தம்

அபுபக்கரு முமறுதுமா னலியானோ ரிவர்மிக்க
தவமுற்றவர் மணிமாளிகை தானத்திடை கண்டே
னவரத்தின மாடத்திடை நண்ணிச்செல வுன்ன
விவர்கட்குள மனதெப்படி யென்றேதவிர் கின்றேன்.
(688)

கலிவிருத்தம்

துக்கமான தையகற்று நபியே சுவனவூர்
புக்குமாட மிடைபோய்வர வெறுப்ப தேதென்
றெக்கினு கியநல்யார்கள் மொழியத் திசையுளோர்
மக்கமா னிடர்கள்வந்து கணமாய் மலியுமே. (689)

ஆதியந்த முதலா யவையிலோது மதனை
யேதமின் றியவுளத் தபூபக்க ரெதிர்ந்தே
யோதுகின்ற மொழியுள்ள துளதென்னு மவையிற்
றீதுபெற்று மதியற்றவ னெழுந்துரை செய்வான் (690)



அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

சங்கமி லங்கும் பைத்தல் முகத்திசு
தண்டலை யூடிடையே
திங்கள தொன்றி னடந்திடு வோமிவர்
சென்றன ராமொருரா
விங்கிவ ரோதிய தத்தனை யும்பொ
யிதற்கிசை விற்பனென
வெங்கள் முகம்ம துடன்சபை தன்னி
லெதிர்ந்துரை செய்தனனே. (691)

அங்கவ னுக்குய ரச்சமெ னுங்கிண
றருகினி லோர்கயிறுண்
டிங்கித னிற்புனல் யாவரும் வந்து
வெடுப்பரெ னக்கபடாய்ச்
செங்கணி ரண்டிடை தீயெழ வேயிதழ்
தின்றுரை தூறியதான்
மங்கல மற்றவ ரென்றுகு றைசிகள்
வைதுமு னிந்தனரே, (692)

கலிவிருத்தம்

மன்றல்செறி மக்கநக ரிற்குறைசி மார்க
டுன்றியபெ ருஞ்சபையிற் றுய்யநபி யேநீர்
சென்றிடு தலத்திடை செறிந்தெவரைக் கண்டீர்
வென்றிகொடு சொல்லுமென மிக்குட னுரைப்பார்.
(693)

எந்நிலமும் போற்றுமிமு றுன்மகனன் மூசா
தன்னுட னீசாநபியைத் தான்கொடெரி சித்தே
யுன்னியவர் தங்களொடு மோதவுரை செய்தே
னன்னவர்க டன்வடிவை யங்கவர்க் குரைத்தார்.
(694)

எங்கண்மர புற்றவரி லேயெவரைக் கண்டீர்
சங்கமதி லோதுமெனத் தானபி யுரைப்பா
ரிங்கிலெகி யாமக னிறந்தவும்றத் தென்பான்
பங்கமழி யுங்கொடிய பாதகனைக் கண்டேன். (695)

பொங்கிய கனற்பொறி பொருப்பென வுதிர்க்குங்
கங்குனர கத்தினிடை கண்புனல்கள் சோரத்
தங்குமுத ரத்திடை சரிந்தகுடற் றன்னை
யங்கவ னிழுத்துறவ தாபுபடக் கண்டேன். (696)

இங்கிலகு வள்ளலிற சூலிவைக ளெல்லா
மங்கவர் பெருஞ்சபையி லாதரவோ டோதக்
கங்கையென வேசெறி கணக்குறைசி மாரி
லிங்கிவைமெய் யென்பர்சில ரீனர்கள்பொய்
[யென்பார். (697)

கலிச்சந்தவிருத்தம்

பொய்யென்றனர் சிலரீனர்கள் புகழுமபூ பக்கர்
மெய்யென்றிரு தயமுட்கொள்வர் வேதாம்பர்தம்
[போரிற்
கையொன்றிய மண்மீதிடை கதறுமபு ஜகலாம்
பையல்நயி னூர்தம்முடன் பகையாயெதிர் கேட்பான்.
(698)

வெண்பா

மடைவாளை குதிபாய் பைத்தல் முகத்தி
சடையாள மேதென் றறிவிப்பீர்-நடையாந்
துரகதமே லேறித் துடர்ந்திரவு சென்றவ்
விரவுதனின் மீண்டே னியான். (699)

அத்தலத்தில் வண்மை யறியீரால் நீர்மொழிந்த
தித்தனையும் பொய்யென் றியம்பினுன்-புத்தைவைத்து
வெட்டுமிரண் டும்மறியா தேழை யெலும்பொடிப்பப்
பட்டு மறியாப் பயல். (700)

பின்னு நபிசொல்வார் பெருத்த குறைசிகளே
மன்னும் பைத்தல் முகத்திசெனு-மின்னுபள்ளிக்
குண்டா மடையாள மொவ்வொன்ருய்க் கேளும்
விண்டோத வென்ருர் விடுத்து. (701)

கலிவிருத்தம்

வாச லெத்தனை வண்டுண்க ளெத்தனை
வீசு கின்ற விளக்கெத் தனையென
வோலச மாக்கட லொத்த குறைசிகண்
மாச கன்றமு கம்மதைக் கேட்டனர். (702)



கிந்தி லித்தனை தான்கிளர் பூமணம்
வந்து வீசு மணிவாச லித்தனைப்
பந்தி யாய்த்தொழும் பள்ளியி னின்றிடுஞ்
சுந்த ரப்பெருந் தூணித் தனையென்ருர். (703)

வேற்றுச் சந்தம்

வள்ள லானவர் பைத்தல்முகத் தீசதனிற்
பள்ளி யுற்றகுறி யைப்பகர வேபுதுமையாய்த்
தெள்ளி தாங்குறைசி மார்கள்சில ராணைமொழிந்தே
யுள்ள துள்ளதிவ ரோதியதென் றுட்கொள்வரே.
(704)

அன்னகா லையிலடர்ந் தபூபக்கர் மொழிவார்
முன்னமே குறைசிமார்க ளெதிர்கேட்ட மொழிக்கு
இன்னதென் றுறவுரைப்ப திலையிப் பொழுதுநீர்
மன்னுபள்ளி விசளங்களை வடிப்பது வென்னே.
(705)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

சோதிகொள் முகம்மதபூ பக்கருட னேமொழிவர்
துய்யவன் விடுத்தஜிபுரீல்
மாதுவள ரும்புகழ்பைத் தல்முகத் தீசெனு
வண்மையுள பள்ளியுடனே
வீதிசெறி யும்புரிசை நாடுநக ரங்களையும்
விண்டுவளத் தோடுமுதலாய்க்
கோதியிற காலுற வெடுத்தெனது முன்பிடை
குறிப்பறிய வைத்துமொழிவார். (706)

வேற்றுச்சந்தம்

வண்ட லம்பிய பைத்தல்முகத் திசதனைக்
கொண்டுவந் தனரதிற் குறிகள்கூர் விழிகளாற்
கண்டுநற் குறைசிகட் கெதிர்கவன் றிடுமென
விண்டிடு மதனையா னுறவிளம் பினனென்ருர். (707)

கலித்துறை

பின்னுங் குறைசிகள் வள்ளலை நோக்கிப் பெருநபியே
வின்னஞ் சிலவடை யாளங்கள் கேட்க விருதயத்தே
யுன்னி யிருக்கின் றேமென்ற தாலிறை யோனபிக்கு
முன்ன றிவிக்கக் குறைசிகள் கூட மொழிந்தனரே.
(708)

இன்னான் மகன்பெய ரின்னானும் பாதையி லின்னவழி
முன்னான வோடைக்கு நேராய் வருகையின்
[மொய்வனத்திற்
பின்னேயோ ரொட்டை தவறிய போததைப்
[பின்னுமொக்க
மன்னான ருள்கொண்டு கூட்டிவித் தேனவ்
[வழிதனிலே. (709)

செட்ட ரின்னார்மக்க ளின்னா ரெனப்பெயர்
[செப்பியவ
ரொட்ட கத்தினிடை யேநடந் தேயொரு
வொட்டையினீ
ரெட்டி யெடுத்துப் பருகி முன்போல விருந்தவுயர்
தட்டினில் வைத்தன னென்றே மொழிவர் தவநபியே.
(710)

நீர்வைத்த வொட்டையு முன்னே வருவது நீலநிறத்
தூர்தைத்த கம்பளப் பையிரண் டாமொன்று
தூயவெள்ளை
நேர்வைத்த பையது வாங்கறுப் பொன்றுநிகழ்த்
திப்பின்னுஞ்
சீர்வைத்த விக்குறி யன்னோரைக் கேட்டுந்
தெளிந்திடுமே. (711)

அங்கவர் பாதையின் முன்னிக டானு மனைவர்களும்
பொங்கித் தினகரன் கீழ்பாலி லுற்றது பிறப்படுநே
ரிங்கிற் றலைப்படுவா ரென்ற போது வெழுந்துசிலர்
பங்கஞ் செய்வோமென வெய்யோனைப் பாதையைப்
பார்த்தனரே. (712)

காலந் தவறினு மாதவன் றென்வடக் காய்விழினு
மால நபிதிருச் சொற்றவ றாதவ ரென்றுசிலர்
நீல நிறவொட்டை வந்துதினா வென்பர் நீக்கிமற்றோ
ரோலந் திகழ்கதி ரின்னா வுதித்துதென் றோதினரே.
(713)

வெண்பா

மேலா னிறசூல் விள்ம்புவபோன் முன்புவரு
நீலான் முதுகி னெடும்பையிரண்-டேலவே
கண்டா ரொருபை கறுப்போ டொருபைவெண்மைத்
திண்டாடி நினறார் சிலர். (714)



இங்கிவரைக் கேளுமென வேகனபிக் குறைசிச்
சங்கமுட னேசமைந் துரைப்பார்-வெங்கதத்தார்
போகித்த வொட்டையொரு பூதனைக்கொண்
லேகித் தருகியதோ வென்று [டவ்வழியி
(715)

சங்கத்தோர் கேட்கத் தரித்தபா தைக்கார
ரங்கவருக் கோதவொக்கு மாமெனவே-சிங்கத்தில்
வெற்றி பெறுநபியை மெச்சிமற்றப் பாதையரை
யொற்றுமொழி கேட்பா ருவந்து. (716)

உங்கள்பெரும் பாதையிலோ ரொட்டைகளி
[லொன்றிலே
தங்கியொரு பாத்திரத்திற் றண்புனல்க-ளங்கே
யிருந்த துண்டோ வென்றளவே யெல்லாரு முண்டென்
றருந்துபுனல் பார்த்தா ரமர்ந்து. (717)

அப்பாத் திரத்தி லறலிருக்கக் காணும
லெப்பாலு முள்ள விறையானை-யிப்பாத்
திரத்திலொரு துள்ளியொன்றுஞ் சிந்தவில்லை நாமு
மருந்துவது மில்லையென்றா ரங்கு. (718)

மக்கக் குறைசியர்கள் வள்ளனபி சொன்னதெல்லா
மொக்கு மிதிற்புதுமை யுண்டோவென்-றக்கணமே
மொஞ்சிமொழி வர்சிலர் மோடரிது போற்பெரிய
வஞ்சனையுண் டோவென்றார் வந்து. (719)

அன்று களரிதனி லல்லா வொருவனென்றுந்
துன்று முகம்மதவன் றூதரென்றும்-வென்றியுடன்
மேலான வீமான் விரும்பியே கொண்டுவந்தார்.
நாலாயி ரம்பேர் நபிக்கு (720)

தொங்கல்

உண்மை யார்களோ டசுகாபிமா
ருவந்து நபியுல்லா முன்பிருக்க
வண்மை நபியுல்லா மிகுறாஜைத்தான்
வரிசைக் கிருபையா லோதும்போது
திண்மையாகிய வொருசூ தன்றான்
றிருட்டு மனதிலே கசட்டையெண்ணிப்
பண்மை நபிக்கிந்தப் பொய்யேயென்று
பகைத்து நினைத்தவன் வீட்டிற்போனான் (721)

மச்சந் தனைவாங்கி மடந்தையிதை
வகிர்ந்து சமையென வீய்ந்தவனு
மெச்சி லவலெண்ணெ யிட்டுக்கொண்டு
விடுப்பிற் குழந்தையுங் குடமுங்கொண்டு
வச்சுக் கரையிலே சூதன்றானும்
வாரி தனிலவன் மூழ்கும்போது
துச்ச னவனைக்கீ ழாறுகொண்டு
தூரத் துறையிலே கரையேறினான். (722)

வெண்பா

ஆணி னழகுகெட்டு மடவுகெட்ட சூதன்றான்
பூணுமங்கை யென்னப் புறப்பட்டா-னாணமுடன்
கானகத்தி லேயிருந்து கண்கலங்கித் தான்சூத
னானுடலைப் பார்த்திருந்தா னுற்று. (723)

தொங்கல்

வாசம் பொருந்திய விராஜன்மகன்
வந்தான் வனத்திலே வேட்டையாடிக்
கூசு மிவண்மங்கை யிருக்கக்கண்டு
கூப்பிட் டவனேமின் னீயாரென்றான்
பேசு மவளந்த வேந்தனுடன்
பிரத்தி யாதொன்றுஞ் சொன்னாளில்லை
வீசுஞ் சிவிகையி லெடுத்துக்கொண்டு
வேந்தன் றிருமனை தனிற்போயினான். (724)

இராஜன் மங்கையைக் கொண்டுவர
நாத னிருந்தவ டன்னைக்கேட்டான்
றேச முனக்கெது தந்தைதாயர்
செகத்தி லினத்தோரை யுரைப்பாயென்றான்
போச னுரைத்திட மங்கைசொல்வாள்
புவியி லெனைத்தொக்க புருடனில்லைக்
காசு பணமில்லைக் கனகமில்லைக்
கன்னி யிம்மொழி தான்கூறினாள். (725)

இந்த மொழிசொல்ல வேந்தன்சொல்வா
னெந்தன மகனுக்குப் பாரியாகச்
சிந்தை களிகூர்ந்தா லுந்தனக்குச்
சிறந்த கலியாண முடிப்பேனென்றான்



விந்தை யுடன்கோதை யுடல்பூரித்து
விம்மி மார்தோயத் துளங்கும்போதுத்
துந்து மனங்களி கொண்டேமன்னன்
றேகை தனைமண முடிக்கலுற்றான். (726)

தெருவீ தியெங்கும் பந்தர்ப்போட்டுச்
சேர்ந்த பொற்சலன் விருந்துமிட்டுப்
பொருத விருந்துண்டு வேந்தரெல்லாம்
போச விராஜனைத் தான்பணிந்து
பரிவா யவரவர் பதாதியுடன்
பறைகண் முழங்கவே பவனிவந்து
வருமாப் பிள்ளைக்கும் பெண்டனக்கு
மணமே செயவவர் மனைகூடினார். (727)

மணமா யிருவரு மதனனூலின்
வழியின் மனமகிழ்ந் தேழுவாண்டிற்
கணவன் றனக்கேழு மகனைப்பெற்றுக்
காத லுடன்கூடி வாழுநாளிற்
றுணையாஞ் தோழிய ருடன்கூடியே
தோகை நீராட நதியிற்போனாள்
குணமா மஞ்சணீர் குளிக்கும்போது
குழித்துச் சுழிகீழே கொண்டுபோன. (728)

கொண்டு போயவன் முன்னிருந்த
குளத்தின் மூழ்கியே கரையேறினான்
பண்டு போலவே யாணவனாய்ப்
பதறி முழித்தவன் பார்க்கும்போது
துண்டு கரையிலே வைத்தபிள்ளை
சுகமாய்க் குடமுடந் தானிருக்க
மொண்டு நீர்க்குடந் தோளில்வைத்து
முகந்து மகனையு மிடுக்கிக்கொண்டான்
(729)

பதறி நடந்தவன் வீட்டில்வந்து
பண்பாய் மனையாளை விழித்துப்பார்த்தான்
குதறி மீன்வாழி யாய்ந்துகொண்டு
குறித்தே யிருக்கின்ற கொள்கைகண்டு

கதறி யுனக்கிந்த மீனாயவுந்
கருதி யேழாண்டு துலையவில்லைச்
சிதறி யான்சென்ற வருஷமேழாய்த்
தேவி மீனாக்க வில்லையென்னோ. (730)

கோதை யவண்மெத்தப் புதுமையாய்நெய்
கொண்டு நீரிப்போ போனீரென்றாள்
சூதனது கேட்டு மனதுக்குள்ளே
துய்ய நபியுல்லா சொன்னசொல்லை
வாதை படுத்தியே பொய்யென்றெண்ணி
மனதுள் நினைந்ததா லுண்மைநாயன்
பேதப் படுத்தினா னொடிநேரத்திற்
பெரிய பெரும்பாடு காட்டுவித்தான். (731)

மனதி னினைந்திடுஞ் சூதன்றானும்
வரிசை மனையாட்டி தனையுங்கூட்டி
தனது தாய்தந்தை சேயுடனே
சகல சனங்களை மருங்குகூட்டித்
தனது சம்மதி யாகவுமே
தாசீன் முகம்மது திருமுன்வந்து
கனக தவமுள்ள பதம்பணிந்தான்
காட்சி முகம்மது மப்போதிலே. (732)

அப்போ நபியுல்லா யார்கட்கெல்லா
மறிவு மிகுறாளைத் தானோதிட
மெய்ப்பா மவர்களு முண்மையென்று
மேவி யிருக்குமப் போதுரைப்பா
னொப்பா முகம்மதே நபிக்கரசே
யுமது மொழியையான் பொய்யெனவே
செப்பி மனதிலே நினைந்ததினாற்
றீங்கு யான்பட்ட புதுமைகேளீர். (733)

ஆழுந் தடாகத்தின் மூழ்கப்போனே
னங்கே மடந்தையர் வடிவாகினேன்
வாழு மரசன்றா னொருவனுக்கு
மணமே முடித்தவன் மனைவியாக
வேழு வருடந்தா னங்கிருந்து
வெழிலாய்ப் பாலரை யேழுபெற்று
நாழி கையொரு நொடிப்பொழுதி
னடந்த வகையெல்லாஞ் சொல்லலுற்றான். (734)



துய்ய முகம்மது முஸ்தபாவே
துய்ய வுமக்குற்ற தீனில்வாறேன்
பொய்யுங் கசட்டையு மகற்றிவிட்டுப்
பொருகா நிலையிலே வழிப்படுவேன்
மெய்யா முகம்மது நபியுல்லாவு
மேவுங் கலியாவைப் புகட்டினார்காண்
செய்யுந் தவப்பொரு ளீமான்கொண்டு
தீன்தீன் முகம்மது தீனில்வந்தார். (735)

கோமா னபியுல்லா திருக்காட்சியாற்
கூறி விழித்திமை நோக்குமுன்னே
யாமா நபிதிரு யார்களோடு
மசாபு களுங்கூடி யிருக்கும்போது
வீமான் றனைக்கொண்டு விசுலாமாகி
யியல்பாங் குடும்பத்தா ரடங்கலுமே
நாமந் தனைக்கேட்ட பேர்களெல்லா
நன்றாய் முகம்மது தீனில்வந்தார். (736)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

வந்தனர் நாலா யிரங்குறை சியரு
மறைமுறை படித்துற வணங்க
விந்தெனும் வதன நால்வரு மற்ற
வியார்களு மிறைஞ்சியே பணியக்
கொந்துறு தீனின் குலப்பயிர் பெருகக்
குபிர்க்களை வேரறக் குறைய
முந்திறை யருள்வெற் றிகணித மிறங்க
முகம்மத ரிருந்துவாழ்ந் தனரே. (737)

சகிக்குணம் வளர விரவலர் போற்றத்
தண்கலி மறைவல்லோ ரேத்த
வொகிக்கதை கொடுநற் சபுறயீ லோத
வொண்மலக் குகளடி பணியத்
துகிர்த்தனு வதனின் முத்தொளி வீசச்
சுவலிலாஞ் சனையமைந் தொளிர
முகிற்குடை நிழற்ற மான்மதங் கமழ
முகம்மத ரிருந்து வாழ்ந்தனரே. (738)

சித்திர நட்சத் திரம்வளைந் திருப்பச்
செழுமதி நடுவிருப் பனபோ
னத்துற விருப்ப நடுவலம் புரிபோ
னளினமு மாம்பலும் போலுங்
குத்திரப் புலிசிங் கமுமிருப் பனபோற்
கோலரத் தினக்குழு நடுவின்
முத்திருந் தனபோ லியார்கள்சூழ்ந் திருப்ப
முகம்மத ரிருந்துவாழ்ந்தனரே. (739)

இறையவன் றகுமத் தினிதுற வாழ்க
விமையவர் குழுநிதம் வாழ்க
மறைமொழி வாழ்க வம்மொழி வருமாந்
தருநெறி மன்னரும் வாழ்கப்
பறைபல கவியாற் சொலுமிகு றுஜைப்
ப்டிப்பவர் கேட்பவர் வாழ்க
முறைமுறைப் பயிரு மூயிர்களும் வாழ்க
முகம்மத ரிருந்துவாழ்ந் தனரே. (740)

கலித்துறை

சொற்பிழை நீண்ட வெழுத்தாணித் தப்புத் துடர்ந்தவுரை
யிற்பிழை யானிங் கறிந்தறி யாம லியம்புபிழை
மெய்ப்பொரு ளானக விப்பிழை யின்பொருண் [மிக்கபிழை
யெப்பிழை யும்பொறுப் பாயெமை யாளு மிறையவனே. (741)

இக்கதை யைத்தமிழ் நூற்கவி யாக வெழுதிவைத்த
திக்கார மாகு மகுதூ மலாவுதீன் தீனவர்க்கு
மக்காத் தரித்த நபியிற சூல்தன் வரிசைகொண்டு
மிக்காக நின்றுதிருக் காட்சி காட்டுயர் விண்பதிக்கே (742)

வல்லா னபிதன் மிஃருஜி னூலை மதுரமுறுஞ்
சொல்லா கப்பாடத் தலீற்செய் வோருக்குஞ் சொற்கவியை
யெல்லாம் படிப்பவர்க்குங் கேட்பவர்க்கு மிதமிதமாய்
அல்லா கிருபை செய்தருள்வான் முசுலீம்க ளனைவர்க்குமே. (743)

மிஃருசுமாலை முற்றிற்று.